www.tamilarangam.net

# சமர்

இதழ் 8



dessin de SERRE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

1) உங்களுடன் சமர் .......................... 3
2) வாசகர்களும் நாங்களும் .......................... 5
3) பிரேமதாசா .......................... 25
4) லலித் .......................... 27
5) இந்தக் காலத்துக் கவிதை .......................... 30
6) விசேட தகமை .......................... 31
7) மனிதத்துக்கு
மதிப்பீடு என்பது அவ்வளவு எளிமையானதா என்ன? .......... 32
8) சீரழிந்த ஊழல் மலிந்த முதலாளித்துவ சர்வாதிகார ... 45
9) மார்க்சியவாதிகள் அறிவிலிகளாம், மூடர்களாம் ....... 50
10) தொடரும் புலிகளின் அராஜகம் .......................... 60

இவ்விதழின் வெளியீட்டுக்கு உதவிய சூரியகுமாருக்கு எமது நன்றிகள்.

தொடர்பு முகவரி :-

"SAMAR"

87, Rue De Colombes

92600 - Asnières Sur Seine

FRANCE

சந்தா அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :-

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 F |
| | 12 பிரதிகள் | 120 F |
| ஐரோப்பியநாடுகள் | 6 பிரதிகள் | 100 F |
| | 12 பிரதிகள் | 200 F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 F |

வாசகர்களே ! உங்களிடமிருந்து ஆக்கங்களையும், ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடன் சமர்...

தமிழீழப் போராட்டம் தேக்க நிலையடைந்து, தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. LTTE யும் UNP அரசும் பல தடவைகள் பேச்சு வார்த்தை நாடகம் காட்டியதையும் மக்களறிவர். இதில் ஒரு கட்டத் தொடர்ச்சியான தற்போதைய பொலிசார் விடுதலையும், பொருளாதாரத் தடை நீக்கமும் மக்களுக்கு வித்தை காட்டுவதுபோல் காட்டப்படுகின்றன.

ஒரு கொத்து அரிசி 50 ரூபாய் விற்கும் நிலையில் மக்களின் அவலம் சற்றேனும் நகரவில்லை. எது எப்படியிருந்த போதிலும் LTTE அதிகாரிகட்கு பொருட்கள் வந்து சேர்ந்துவிட்டன. இச்சூழ் நிலையிலேயே, "சமர்" தனது எட்டாவது இதழை வெளியிடுகின்றது.

தீவிர இடதுசாரிகள்!
கூறுரான போக்கு!

போன்ற பதங்களால், ஐரோப்பிய விமர்சகர்களால் சாடப்பட்டும், சில "மனித" த்துவவாதிகளால் நாம் பண்பற்றவர்களாக ஒரு பக்க நியாயம் கூறப்பட்டும், எந்தவொரு மக்கள் போராட்டத்துக்கும் பொருளதார முன்நிபந்தனை அவசியமல்ல, என்று விவாதிக்கும் திரிபுவாதிகள், மக்களை மூளைச்சலவை செய்வதையும், அறிவூபூர்வமாகவும், பொருள் முதல்வாத நோக்குடனும், கருத்துக்களை முன்வைத்து தொடர்ந்து "சமர்" விவாதிக்கும் என்பதை, "சமர்" வாசகர்கட்கு கூறவேண்டிய நிர்ப்பந்தம் இச்சூழ் நிலையில் எமக்குண்டு. இன்றைய நிலையில் ஜனரஞ்சகபாணியில் நேர்மையான புரட்சிகர அரசியல் நடத்தமுடியும் என்பதில் சமருக்கு உடன்பாடில்லை.

பேச்சில் ஒன்று, எழுத்தில் ஒன்று, இசைவானோர் மத்தியிலொன்றும் பேசி எதிர்காலத்தில் எலும்புத்துண்டுகளை எதிர்பார்த்து அரசியல் கட்சிகளில் தங்கள் பெயரைப் பதிவு செய்தவர்களும், ஐரோப்பிய அரங்கில் முற்போக்குப் பிரமுகர்களாக வேடமிட்டுத்திரிவோரையும்; தொடர்ந்து அம்பலப்படுத்த "சமர்" உறுதி பூண்டுள்ளது.

இச்சேவையினூடாக ஆரோக்கியமானதோர் ஐக்கிய முன்னணியைக் கட்ட "சமர்" தனது பங்களிப்பைச் செய்ய முனைவதை தனது கடமையாகவே கருதுகின்றது. திரிபுவாதத்துக்கெதிரான போக்கில் எவ்வித ஈவிரக்கமற்ற போக்கையும், அனைத்துப் போராட்டங்கட்கும், வர்க்கப் பார்வையை முதன்மைப்படுத்தி, பாட்டாளிவர்க்க சிந்தனையை, கோசங்களாக்காது, கருத்துக்களாக நிறுத்தி, உழைக்கும் மக்களை முன்னணிப்படையாக்கும் பணியில் "சமர்" முன்னேக்கி பயணிக்கும் என்பதை கூறிவைக்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

49ம் பக்க தொடர்ச்சி...

கம்யூனிட் கட்சியைக் கொண்டுள்ளன. இவையே இன்று வர்க்கப் போராட்டத்தின் சாதக, பாதக அம்சங்கள். இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தில் சரியான வகையில் மக்களை அணிதிரட்ட ஒரு சரியான கம்யூனிட் கட்சியின் தேவையை இன்று உலகம் கோருகின்றது. அதுவே மக்களின் எதிர்கால நம்பிக்கையைக் கொடுக்கக் கூடிய ஒரே தீர்வாகும்.

ஆசிரியர் குழு

---

கர்ப்பமடைந்த தாயின் வயிற்றிலிருக்கும் சிசுவைக் கொல்லுதல் எந்த வரம்புக்கு அப்பால் கொலைக் குற்றமாகிறது என்று அறிவுக்குகந்த ஒரு வரம்பை வகுத்திட இவர்கள் எவ்வளவோ மண்டையை உடைத்துக் கொண்டும் பயனில்லை.

நன்றி.– மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள்
தொகுதி –10, பக்கம் –78.

---

மக்களதுவாழ்க்கையை வாழ்வது, மக்களது துயரங்களில் துயருறுவது மகிழ்ச்சியில் திளைப்பது, அவர்களது தொல்லைகளிலும் தேவைகளிலும் முழுமையாக ஈடுபாடு கொள்வது இவற்றால் இதன் பிறகே, வாசகர்களது உள்ளங்களைக் கிளர்ந்தெழச் செய்யும் ஓர் எதார்த்தமான நூலை ஒருவரால் எழுத முடியும்.

–மிகயீல் ஷோலகவ்–

---

என்.எல்.எப்.ரீ யின் வரலாறு இடம் இன்மையால் இவ் இதழில் வெளியிட முடியவில்லை.

---

கருக் கொலையை ஒட்டிய சமரின் கட்டுரை அடுத்த "சக்தி" இதழில் வெளிவருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வாசகர்களும் நாங்களும்

இன்று சோர்வும், அவநம்பிக்கையும், ஒடுகாலித்தனமும் நிறைந்துள்ள இவ்வேளையில் புரட்சிப் பாரம்பரியத்தை அழியவிடாது பாதுகாக்கும்உங்கள் பத்திரிகைக்கு என் வாழ்த்துக்கள். தத்துவரீதியாக விடாப்பிடியான ஊசலாட்டமற்ற நிலையே இன்று தேவையாகும். மார்க்சிசமானது உழைக்கும் மக்களின் தத்துவமானது வென்றே தீரும். அதை நாம் உறுதியாக நம்புவோம். ஏனெனில் அது விஞ்ஞான பூர்வமானது. இன்றைய உலகின் ஆக முன்னேறிய தத்துவம் அதுவேயாகும்.

சி. கணேசமூர்த்தி, ஜெர்மனி.

நாட்டுச் சூழலிலிருந்து அந்நியப்பட்டு இருந்து கொண்டு கற்பனையில் போராட்டம் நடத்துவதா என்று தான் தோன்றுகிறது. அந்தச் சூழலில் இப்போதும் இருந்து கொண்டு இதுபற்றிச் சிந்திப்பவர்கள் ஏதாவது யோசனைகள் சொன்னால் இதைப்பற்றி நாங்களும் சிந்திக்கலாம். நடைமுறை சாத்தியமாகவும் இருக்கும். எல்லோரும் புத்தகங்களில் எல்.ட.ட.ஈ ஐக் கண்டிக்கிறார்கள். இதற்கெதிராகப் போராட வேண்டும், மக்களே விழித்தெழுங்கள் என்றெல்லாம் எழுதுகிறார்கள். ஆனால் எப்படி நாங்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு அங்கு நடைமுறையில் என்ன நடக்கிறது, கேட்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதையெல்லாம் நன்கு தெரிந்தவர்களே கோசங்களை வைக்கிறார்கள். எனக்கென்றால் இவையெல்லாம் நாங்கள் போராட்டத்தில் இருந்து இன்னும் விலகவில்லை ஏதோ செய்கிறோம் என்று எமது மனச்சாட்சிக்குச் சமாதானம் சொல்வதற்காக செய்வது போல் இருக்கிறது.

இங்கு இப்போது ஒரு சிலரை அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது. விடுதலையை உண்மையாக நேசிப்பவர்கள் நேர்மையானவர்கள். ஆனால் இவர்கள் எல்.ட.ட.ஈ க்கு ஆதரவாக இருக்கிறார்கள். சாதாரணமாகக் கதைக்கும் போது அவர்கள் செய்வது சரியா? ஏன் ஆதரவளிக்கிறீர்கள்? என்று கேட்டபோது அவர்கள் சொன்னார்கள் தொடங்கிய போராட்டத்தை கைவிடுவதா? மற்றவர்கள் எல்லாம் ஒதுங்கிவிட்டார்கள். இவர்கள் ஏதோ செய்கிறார்கள் உதவி செய்கிறோம் என்றுவிட்டு இவர்களை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள். (தற்போதைய நிலைமைக்கு) அதாவது எல்.ட.ட.ஈ யை விட்டால் அடுத்த OPTION என்ன என்று கேட்கிறார்கள். உண்மையில் இவர்களுக்கு எப்படி பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. இதற்கு என்னமாதிரி பதில் நீங்கள் சொல்லுவீர்கள். மேற்குறிப்பிட்டவர்கள் எல்.ட.ட.ஈ யின் பிழைகளையும் விளங்கிக் கொள்ளுகிறார்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ள். பிழைவிட்டாலும் அவர்களை விட்டால் வேறு இல்லைத்தானே என்று கதைப்பார்கள். உங்களிடம் இருந்து இதற்குப்பதிலை எதிர்பார்க்கிறேன்.

சாந்தி அவுஸ்ரேலியா:

உங்கள் கேள்விகள் போல் பலர் இக் கேள்வியை எதிர் கொள்கின்றனர். இன்று நாட்டுக்கு வெளியில் வெளிவரும் சஞ்சிகைகளும், அதில் எழுதும் எழுத்தாளர்களும் ஈழப் போராட்டம் தொடர்பாக உண்மையில் அக்கறை கொண்டவர்களா?. இப்படி எழுதுபவர்கள் நாட்டுக்குத் திரும்புவார்களா?....... எனப்பல கேள்விகளை சிலர் எழுப்புகின்றனர். இதில் ஒரு பகுதியினர் இப்படி வெளிவரும் கருத்துக்களை தடுக்கும் நோக்கிலும் இன்னொரு பகுதியினர் உண்மையான போராட்டத்தின் அக்கறை மீதும் கோருகின்றனர். இன்று வெளிவரும் சஞ்சிகைகள் பல நோக்கங்களில் வெளிவருகின்றன.

1. தமது சுயதிருப்திக்காகவும் தமது மேதாவித் தனத்தைக் காட்டுவதற்காகவும்
2. தமது தோல்வியை மறைக்க தமது அறிவுஜீவத்தனத்தைக் காட்ட புதிய இடது போக்கையும், தாராளவாதப்போக்கையும், கலைப்புவாதப் போக்கையும், ஒரு வேலைத் திட்டத்தை முன்வைப்பதை எதிர்ப்பவர்களும் உள்ளடங்கிய பிரிவினர்.
3. சமூக நோக்கம் கொண்ட எதிர் காலத்தில் போராட்டத்தில் நம்பிக்கையுடையவர்கள்.

என மூன்று வகையான சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இது போன்றே இவைகளுக்கு எழுதும் வாசகர்களும் உள்ளனர். இவர்கள் மூன்று வகையானசஞ்சிகைகளிலும் தமது கருத்தைப் பிரசுரிக்கின்றனர். இவர்கள் எல்லோரும் தம்மைத்தாம் முற்போக்குகள் எனச் சொல்வதுடன் தாம் இடது போக்கு கொண்டவர்களாக மார்தட்டிக் கொள்பவர்கள். எல்லோரும் தமக்கிடையில் விமர்சனத்தை தவிர்ப்பதனூடாக ஐக்கியப்பட்டது போல் நடித்து வாசகர்களையும் ,மக்களையும் ஏமாற்றி வருகின்றனர். இவர்கள் பற்றிய மாயைகள் மக்கள் முன் அம்பலப்பட்டுப் போவதால் (இதைப்பத்திரிகை ஆசிரியர்கள் காப்பாற்ற முயல்கின்றனர்) மக்கள் எல்லோரையும் தவறாகப் பார்ப்பதுடன் நம்பிக்கையும் இழக்கின்றனர் ஒருவகையில கருத்துச் சுதந்திரத்தைப் பெற்றுவிட முயலும் இச்சிறு சஞ்சிகைகள் மறுபுறத்தில் மக்களை ஏமாற்றி நம்பிக்கை இழக்க வைத்துப் புலிகளைப் பலப்படுத்தியும் வருகின்றனர். எல்லா கருத்துக்களுக்கும் ஜனநாயகம், விமர்சனம் எனக்கூறி புலி எதிர்ப்பாளர்கள் எல்லோரும் ஐக்கிய முன்னனி எனக் கூறிக் கொண்டு அவர்களைக் காப்பாற்ற முயலும் இச்சஞ்சிகைகள் எதிர் காலப்போராட்டத்தை சிதைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று சமூக நோக்கம் கொண்ட பலரின் செயற்பாடுகள் பல்வே றுபட்ட பார்வையைக் கொண்டிருந்த போதிலும் எதிர் காலத்தில் ஐக்கியப்படக் கூடிய நிலையில் உள்ளவர்களே. இவர்களின் செய ற்பாடு இலங்கைக்கப்பால் இன்று எதைச் சாதிக்க முனைகின்றது. எமது மண்ணில் இழந்து போன கருத்துச் சுதந்திரத்தை முடிந்த வ ரையில் இங்கும், எம்மண்ணுக்கு எடுத்துச் செல்வதில் முக்கியமான பங்கை வகிக்க முடியும். சஞ்சிகைகளின் பின்னுள்ள வாசகர்களுக் கு இவர்களால் மட்டுமே சரியானதும், உண்மையான கருத்தையும் கொண்டு செல்லமுடியும். அதனூடாகவே எதிர் காலப்போரா ட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவு சக்திகளை வெளிநாடுகள் வழங்கும் இன்று நாம் செய்ய முனையும் எந்த நடவடிக்கையும் மண்ணில் ஒரு சரியான சக்தி இருந்தால் பாரிய விளைவுகளைக் கொடுக்கும். இ ன்று மண்ணில் சரியான ஒரு சக்தி இல்லை என்றபோது இல்லை எ ன்று சொல்லிவிட முடியாத வகையில் சக்திகளுள்ளனர். அவர்க ள் கூட பல கருத்துக்களை வெளியிட முடியாத நிலையில். சமூக நோக்குள்ள சஞ்சிகைகள் எழுத்தாளர்கள் காத்திரமான பங்களிப் பை வழங்குகின்றனர்.

எமக்கு எதிர்காலப் போராட்டத்தில், கருத்தில் நம்பிக்கை இரு ப்பின் அக்கருத்துக்காக, போராட்டத்திற்காக நாம் அங்கு இரு ந்தாலும் குரல் கொடுக்க முடியும். அவை எதைச் சாதிக்கின்ற து. என்பது நாம் சொல்ல வரும் கருத்து சமூகத்தை சென்றடை யும் போது மட்டுமே. இன்று எம் மண்ணின் பாசிசம் பலரை நாட்டை விட்டு துரத்திய போதும், அவர்களின் நம்பிக்கைகள் சிதைந்து சீரழிந்து விடவில்லை. மாறாக இங்கிருந்து செய்யக்கூடி ய வகையில் குரல் கொடுக்கின்றனர். குரல் கொடுக்க வேண்டும் இதன் விளைவாகவே புலிகள் இவர்கள் கருத்துக்களை தடை செய்வ தும், தாக்குவதும், மிரட்டுவதுமாக தொடர்கின்றனர். இந்நிக ழ்வுகள் தான் இக்கருத்தின் மீதான வெற்றியே. இன்று பலர் மி ரட்டல்களையும் மீறி புதிதாகக் குரல் கொடுக்க முன்வருவதும், ப லர் போராட்டத்தில் நம்பிக்கை பெற்றும் வருகின்றனர். உலகி ல் நடந்த, நடக்கின்ற பல புரட்சிகளில் பலர் நாட்டுக்கு வெளி யிலிருந்து குரல் கொடுத்ததை மறக்க முடியாது. இன்று எம் ஒவ்வொருவரின் கடமையும் எதிர்காலப் போராட்டத்திற்கு நம்பி க்கை கொடுக்கும் வகையில்எமது செயற்பாட்டை நாம் செய்ய முன்வர வேண்டும்.

புலிகள் மீதான விமர்சனம் என்பது புலிகளை பெருமளவில் பாதித் துள்ளது. . இதன் விளைவாகப் புலிகள் வெளிநாடுகளில் தமது செ யற்பாட்டில் சில மாற்றங்களை செய்துள்ளனர். இது எம்மண்ணில் அல்ல. வெளிநாடுகளில் நாட்டுக்கு நாடு வேறுபட்ட வகையில் பலம் பலவீனத்துடன் இன்று மாற்றுக் கருத்துக்களை கையாள்வதில்

www.tamilarangam.net

நடிக்கின்றனர். சிலகாலம் வன்முறைக்கூடாக கையாண்டவைகளை இன்று சில தவறுகளை விட்டுள்ளோம் என ஏற்றுக் கொண்டு தமது நிதி சேகரிப்பில் வெற்றி பெறுகின்றனர். கடுமையான விமர்சனங்கள் மக்களை சென்றுள்ள நிலையில் புலிகள் மீதான தவறை மக்கள் கேட்கத் தொடங்கி பணம் கொடுக்க மறுத்த நிலையில் புலிகள் சற்றுக்கீழ் இறங்கி பிழைப்பை மறுபடியும் தொடங்கியுள்ளனர். புலிகள் சிறுதவறுகள் விடுவதாகவும், அவை போராட்டத்தில் தவிர்க்க முடியாது எனவும் சொல்லி பிழைப்பை நடத்துகின்றனர். இதன் வெளிப்பாடாக தேசத்தின் மீது உண்மையான பற்றுள்ள சில தேசியவாதிகளும் புலிகளின் வலைகளில் சிக்கி விடுகின்றனர். என்னதான் இருந்தாலும் புலிகள் எம் மக்களுக்காக போராடுகின்றனர். அவர்களை விட்டால் வேறு வழி என்ன. இவை கூட புலிகள் அம்பலப்பட்டதை தொடர்ந்து அண்மைக் காலமாக மக்கள் இடம் புலிகள் எடுத்துச் சென்ற கருத்துகளின் ஒரு பகுதியே. அதையே சில சமூக நோக்கம் கொண்டோர் திருப்பிச் சொல்கின்றனர். இதே பாணியில் ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியில் இருந்த ஒரு பெண் தனது மகனுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை கீழ் பிரசுரிக்கின்றோம்.

அன்புடன் மகனுக்கு,

இக்கடிதம் கிடைக்கும்போது நாம் உயிருடன் இருப்போமோ தெரியாது.! அமெரிக்க - பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களது குண்டுமாரியில் இருந்து தப்புவது மிகவும் கடவுளால் அருளப்பட்ட வரமாகவே இருக்கும்.

இந்நிலைமையிலும் எமது ஜேர்மனியினது சிரசு நிமிர்ந்து நிற்கவேண்டும், எமது மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும், முற்றான தோல்வியை எவ்வகையிலாவது தவிர்த்துவிட வேண்டும் என்ற கடமை உணர்வுடன் 15 வயதான இளைஞர்கள்கூட மேற்குமுனைப் போர்க்களத்திற்குத் தம்மை அர்ப்பணிக்கச் செல்கிறார்கள். எமது மூலைக்கடை (இன்று இல்லை!) காள் கயின்ஸ்இனுடைய இளைய மகள் போர்முனையிலிருந்து ஒரு கையும் இரு கால்களும் இழந்து திரும்பி வந்துள்ளாள். 19 வயதிலேயே இளமையின் இனிய விவரங்கள் யாவும் கற்பனைகளாகி விட்டன அவளுக்கு! ஆனால் இன்றும் தளராது அவள் காட்டும் தேசப்பற்றையும் வீரத்தையும் காணும் உற்றார்கள், அயலவர்கள் உன்னையும் மகனாகப் பெற்றாயே என்று தூற்றுகிறார்கள். உனக்கு எங்கே இந்த நிலைமைகள் விளங்கப் போகிறது?

நீயோ, கனடாவில் இருந்து எம்மைப் பாசிசவாதிகள், கொலைகாரர்கள் என வர்ணித்தபடி எமது இம்சைகள் துன்பங்கள் எவற்றையுமே உணராது கற்பனை வார்த்தைகளை எழுதியபடி உள்ளாய்!

இந்தப் போரில் நாட்டின் தற்காப்பிற்காகவும், வேறு நியாயமான காரணங்களுக்காகவும் பலர் 'களை' செய்யப் பட்டிருக்கலாம் என்பதை மறுப்பதற்குமில்லை. ஆனால் இவையெல்லாம், இன்று ஆராயப்பட வேண்டிய விடயங்களா என்ன?

நாற்கோடிகளிலும் இருந்து ரசியர்கள் அமெரிக்கர்கள் பிரித்தானியர்கள் என எம் இனத்தையே அழித்துவிட நடத்தப்படும் இந்த நரபலி வேட்டையில், உனது கேள்விகள் கருத்துகள் யாவுமே அர்த்தமற்றவையாக, வேளை புரியாதனவாகவே காணப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டவேண்டிய கடமை தாயான எனக்கு உண்டு........

இங்ஙனம்,
அம்மா
பேர்லின்
ஜேர்மனி.

நன்றி - சுவடுகள்

இந்த வகையில் ஹிட்லர் தனது நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கு மக்களை ஏமாற்றி எப்படித் தனது கருத்தை மக்களுக்குச் செல்ல வைத்தானோ அதுபோல் புலிகளும் எம்மக்களை ஏமாற்றிச் ஹிட்லர் பாணியில் செல்ல வைப்பதில் புலிகள் ஹிட்லரிடம் கற்றுள்ளனர். புலிகள் இன்று அம்பலப்பட்டு போனமையால் சற்று கீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிறங்கி நடித்து மக்களை ஏமாற்றி வருகின்றனர். சிலதவறுகள் நடைபெற்றுள்ளன எனக்கூறிக் கொள்கின்றனர். இதை என்றும் புலிகளின் தலைமை சுயவிமர்சனம் செய்தது கிடையாது. அதே தவறுகளையே புதிது புதிதாக புலிகள் தொடர்கின்றன. இதை நியாயப்படுத்த சில களையெடுப்புகளை தவிர்க்க முடியாதெனக்கூறுகின்றனர். இங்கு களையெடுப்பு என்பது ஈழப்போராட்டத்தை உண்மையில் நேசிப்பவர்களை அழிக்கின்றனர். இவர்களை விட்டால் (புலிகளை) வேறு யார் போராட உள்ளனர். என்ற வாதம் மக்களை ஏமாற்றுவதே. புலிகளுக்கப்பால் புலிகள் போன்ற இயக்கங்களும் ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அவர்களை கொன்றழித்தனர். அவ்வியக்கங்களுக்கு அப்பால் தீப்பொறி, என்.எல்.எப்.டீ, பி.எல்.எப்.டீ, பேரவை,......போன்ற உண்மையான விடுதலையை நேசித்த சக்திகளை அழித்தபடி வேறு யார் போராட உள்ளனர் என்ற கேள்வியின் கபடத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதே. இவர்கள் விடும் தவறுகள், களையெடுப்புகள், எல்லாம் வேறு யார் போராட இருக்கிறார்களோ அவர்கள் மீதானதே. இன்று வேறு யார் இருக்கிறார்கள் என்று கேட்டபடி புலிகள் 'வேறு யார்' களைக் கொன்று சித்திரவதை செய்து வருகின்றனர். இன்று புலிகளின் வதை முகாம்களிலுள்ள 5000 கைதிகள் யார்?. இவர்கள் இந்தியக் கைக்கூலிகளோ, இலங்கைக் கைக்கூலிகளோ அல்ல. மாறாக அவர்கள் புலிகளின் தவறுகளை விமர்சித்தவர்கள். உண்மையில் தமிழ் மக்களை நேசித்தவர்கள். இவர்களை கொன்றபடி வேறுயார் என்ற கேள்வி மக்களை ஏமாற்றப் புலிகளால் திட்டமிட்டு செய்யும் பிரச்சாரமே.

புலிகள் உண்மையில் சரியான விடுதலையை விரும்பின் முதலில் மக்களுக்கு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை வழங்க வேண்டும் அத்துடன்சொந்த இயக்கத்திற்கும் கருத்துச் சுதந்திரம் வழங்கவேண்டும். புலிகளின் மக்கள் முன்னணி மீதுள்ள தடையை நீக்கவேண்டும். புலிகளின் வதைமுகாம்களில் உள்ள 5000 கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும். புலிகளின் ஐக்கிய முன்னணிக்குக் கருத்து சுதந்திரத்தை வழங்கியபடி முதல் புலிகளே கொடுக்க வேண்டும். அதை நடைமுறை ரீதியில் அமுல்படுத்தி காட்டவேண்டும். இதைவிடுத்து சில தவறுகள் நடந்துள்ளது, சில களையெடுப்புகளை தவிர்க்கமுடியாது, வேறு யார் போராட உள்ளனர் என்பதெல்லாம் மக்களை ஏமாற்றி நிதி சேகரிப்பை நடத்த நடக்கும் திரைமறைவு நாடகங்களே.

இதை புரிந்து கொண்டு புலிகள் இறங்கிவரச் செய்ய புதிய மாற்றுத் தலைமையை உருவாக்க முனையவேண்டும். உண்மையில் தேசத்தின் மீது பற்றுள்ள அனைவரும் இழக்கப்பட்ட கருத்துச் சுதந்திர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்தை மீட்க முன்வர வேண்டும். அந்த வகையில் புலிகளை விமர்சிப்பதும், ஒரு புதிய தலைமையை உருவாக்கவும் வேண்டும். இதை விடுத்து புலிகளின் பொய் பிரச்சாரத்தில் மயங்கி அவர்களை நியாயப்படுத்துவது என்பது மக்களைக் கொல்ல நாமே பச்சைக் கொடி காட்டுபவர்களாக இருப்போம்.

ஆசிரியர் குழு

என்.எல்.எப்.ரி யைப் பற்றிய கடந்த காலச் செயல்பாடுகள் பற்றிய விமர்சனம், சுயவிமர்சனம் பற்றிய எழுத்துகளில் எனக்கு எவ்வித மாறுபாடும் இல்லை. ஆனால் இன்று ஸ்தாபன வடிவம் இல்லாத நிலையில் தனி ஒரு ஆளாக எக்ஸ் என்பவர் ம.கு இல் பணியாற்றிய ஏனையோரைப் பற்றி பகிரங்கமாக விமர்சனம் வைப்பது சரியான செயற்பாடல்ல என்பதும், அப்படி எக்ஸ் ஒரு விமர்சனம் தனிநபர்களைப் பற்றி வைப்பதாயின் என்.எல்.எப்.ரி இல் செயலாற்றிய ஒரு சிலருடனாவது விமர்சனங்களை முன்வைத்து பின்னர் முடிவில் ஒரு ஐக்கியப்பட்ட தீர்மானத்தின் பேரில் பகிரங்கமான விமர்சனத்தை வைத்திருக்கலாம். சரி இனி மேலாவது நடந்தவற்றை நிறைவு செய்வதற்கு "சமர்" குழு அத்தனிப்பட்ட நபர்களால் வெளியிடப்படும் கருத்துக்களுக்கு அல்லது பதிலளிப்பிற்கு சமர் பத்திரிகையில் இடமளிக்கவேண்டும். உண்மையில் இது தனிநபர்களின் பாதுகாப்பு சம்பந்தமான விடயமாக இருந்த போதிலும் எதிரிக்கு எங்களிலும் கூடிய்ளவு விபரம் தெரியுமென "சமர்" வாதிடுவதால் சமரின் கூற்றில் நம்பிக்கை வைத்து அதைப் பெரிது படுத்தவிரும்பவில்லை. இதுவரை அத்தனி நபர்கள் எவரிடமிருந்தாவது ஏதாவது பதில்கள் கிடைத்தனவா?. என்னைப் பொறுத்தவரை தனிநபர்கள் ஒவ்வொருவரைப் பற்றிய விமர்சனங்களில் எனக்கும் அதிகளவு உடன்பாடு உண்டு. முக்கியமாக ராகவன், மோகனைப் பற்றியவை. ரமணி ஒரு நேர்மையான இயங்குசக்தி அவரின் இறப்பிற்கும் ராகவன் தான் பொறுப்பேற்க வேண்டும். மோகனிடம் ஓரளவு போர்க் குணம்சத்தைக் காணக் கூடியதாக இருந்ததது. ஆனால் எம்மில் பலரிலும் நான் உட்பட போர்க் குணம்சம் பற்றாக்குறையாகவேயிருந்தது. இது ஸ்தாபனத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். அதில் ஸ்தாபனத்தின் தலைமைக்கு முக்கிய பங்குண்டு. புலிகள் எங்களைப் பற்றி பெரிதாகக் கணக்கெடுக்காத போது வெள்ளைப்பயங்கரம் பற்றி கதைத்துக் கொண்டிருந்தோம். தேவையில்லாமல் பயந்தொழித்தோம். எமது ஸ்தாபனத்தை சில ஆதரவாளர்கள் "காந்திய இயக்கம்" என்று நேரடியாகவே குற்றம் சாட்டி எம் முன்னால் எள்ளி நகையாடினார்கள். முக்கியமான பிரதானமான விடயம் 83இல் விசு வின் வீட்டில் நடைபெற்ற முதலாவது என்.எல்.எப்.ரி இன் மகாநாட்டின் செயல்திட்டத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல் சோசலிசமே எமது சமூக அமைப்பு என்பது குறிப்பிட வேண்டுமென நான் வாதாடியது இன்னும் நல்ல ஞாபகமாக இருக்கின்றது. ஆனால் அன்று அதைக் குறிப்பிடுவது ஐக்கிய முன்னணிக்குப் பாதகம் என்று தவிர்க்கப்பட்டது. ஆனல் அதே நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் என்பன இவற்றை வெறும் கோசங்களாக வைத்து ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஏமாற்றினார்கள். அன்றைய இயக்கங்களில் ஓரளவாவது இடதுசாரி பிறப்பு (ORIGION) என்.எல்.எப்.ரி மட்டுமே. ஆனல் எமது திட்டத்தில் சோசலிசம் மறைக்கப்பட்டு விட்டது. சமர்-7இல். வெளியிடப்பட்ட திட்டத்தில் கூட இரண்டு மிக முக்கியமான விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. முதலாவது போராட்டத்திற்கு யார் தலைமை தாங்குவதென்பது. இரண்டாவது எப்படியான தமிழீழம் அல்லது இலங்கையை உருவாக்கப் போகிறோம் என்பதாகும்.

என்னைப் பொறுத்தவரை தலையும், காலும் இல்லாத ஒரு முண்டமாகத் தான் இத்திட்டம் தோன்றுகிறது. சிலவேளைகளில் ஏகாதிபத்தியத்தின் தேவை கருதி தற்செயலாக "ஒரு தமிழீழ இஸ்ரேல்" உருவாகினலும் எமது போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும் எனவே நீண்ட கால நோக்குடன் திட்டம் அமையவேண்டும். சமர் பத்திரிகை ஆரம்பத்திலிருந்து படிப்படியாக

1. ஜனரஞ்சகத் தன்மையை இழந்து இறுக்கமாகி வருகின்றது.
2. ஆரம்பத்தில் ஒரு கூட்டு முயற்சியிலிருந்து படிப்படியாக ஒரு சில தனிநபர்களின் கட்டுரைகளை மட்டும் தாங்கியுள்ளது.

உ+ம் கட்டைதாசனின் கட்டுரைகள் மறைந்து விட்டன.

பத்திரிகையின் ஆரம்ப வடிவம் வரவர ஒழுங்கில்லாமல் அழகு குறைந்து விட்டது. இதை அட்டைப்படத்திலிருந்து கட்டுரைகளின் அமைப்பு வடிவம் வரை காணக் கூடியதாகவுள்ளது. எமது (சமரின்) நோக்கம் பலமான ஒரு ஸ்தாபன அமைப்பைக் கட்டுவதொழியத் தனிமைப்பட்டுப் போவதல்ல?.

90களில் பார்த்த மனிதத்திற்கும் 92இல் மனிதத்திற்கும் பாரிய வேறுபாடுண்டு. இன்று அங்கே திரிபுவாதம் தான் கோலோச்சுகின்றது. அதே போல் 3இற்கும் 7இற்கும் இடையே சமரில் ஒரு இறுக்கத்தைக் காணக் முடிகிறது. இதுவும் ஆரோக்கியமானதல்ல, (அடிப்படை தத்துவத்திலிருந்து நழுவக் கூடாதென்றாலும்) ஏனெனில் இன்றைய காலகட்டம், மிக முக்கியமானது. அனைத்து வர்க்கங்களையும் (புரட்சியுடன் இணைந்து வரக்கூடிய) வென்றெடுக்க வேண்டிய கால கட்டமிது. உதாரணத்திற்கு ஒரு விடயத்தை எனது அநுபவத்திலிருந்து சுட்டிக்காட்ட முடியும். 1970இல் நாங்கள் தமிழ் மாணவர் பேரவையால் தரப்படுத்தலுக்கெதிராக ஊர்வலம் நடத்திய போது எம்மத்தியில் (ஊர்வலம் வந்து கொண்டிருந்த போது) சீன இடதுசாரி கட்சியினரால் அமைப்புக்குழுவின் அனுமதியின்றி இருந்தாற் போல் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. இதனல் ஆத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரமுற்ற மாணவர்கள் துண்டுப்பிரசுரம் விநியோகித்தவர்களை அடிக்க, பின்னர் கம்யூனிஸ்ட்டுகள் காத்திருந்து அந்த மாணவர்களை அடித்தார்கள். உண்மையில் அன்று இடதுசாரிகள் (செந்தில், மணியம், ஏனைய ஒன்றாக இருந்தவர்கள்). அமைப்புக்குழுவுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டு இணைந்து செயற்பட்டிருந்தால் பல பேரை அன்றே (ஐயந்த சக்திகளை) வென்றெடுத்திருக்க முடியும். பின்னர் பல வருடங்களின் பின் அன்றைய அமைப்புக் குழுவிலிருந்த சிலர் தாங்களாகவே இடதுசாரித் தத்துவத்தைத் தேடிப் போனார்கள். எனவே அரசியல் ரீதியில் ஒரு பிரச்சனையை ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எப்படிக் கையாள்வது என்பது மிக முக்கியமான விடயம். அன்று தமிழ் மாணவர் பேரவையில் சிவகுமாரன் உட்பட பலரும் தமிழ் கட்சிக்கு எதிரான உணர்வுகளோடு தான் இருந்தோம். ஆனால் இன்றும் அன்றைய அரசியல் தான் ஆட்சியதிகாரத்தில் வெற்றிகரமாக அமர்ந்துள்ளது. 70இன் மாணவர்களாகிய நாங்கள் இன்றும் (தரகு முதலாளித்துவத்தால்) தோற்றுப் போய் தான் வீழ்ந்து கிடக்கின்றோம். இதற்கு தனிய நாங்கள் மாத்திரம் காரணமல்ல? மக்கள்? அவர்கள் எப்பவும், நடைமுறைக்கூடாகத் தான் படிக்கமுடியும்.

4. பத்திரிகை தத்துவார்த்த, கொள்கை அடிப்படையில் பலமாக இருந்தாலும் கூட மேற்குறிப்பிட்ட அம்சங்களால், மற்றவர்களிடம் சென்றடையாமல் தடைப்படலாம்.

"சுவாத்" ஒரு முதலாளித்துவப் பத்திரிகையாக இருந்தாலும்கூட சோவின் எழுத்துக்களில் கவரப்படாதவர்கள் எவரும் இருக்க மாட்டார்கள். தன்னுடைய கருத்துக்களை அழகாக, ஆணித்தரமாக, தனக்குச் சாதகமாக எழுதுகின்ற திறமை சோவிடம் உண்டு. எனவே தான் நாங்கள் முதலாளித்துவத்திடமுள்ள நல்ல விடயங்களை எமதாக்கிக் கொள்ள வேண்டும். முன்னர் நக்சல் பாரித் தோழர்களால் வெளியிடப்பட்ட மனிதன், சமரன், கேடயம், புதிய ஜனநாயகம் போன்றவையும் உங்களது பத்திரிகை எழுத்துக்கள் சிறப்படைய வழிகாட்டியாக அமையுமென நம்புகின்றேன்.

மாஸ்ரர், இத்தாலி.

என். எல். எப். ரி தொடர்பான விமர்சனத்தில் என். எல். எப். ரியை சார்ந்த எவரும் தொடர்பு கொள்ளவில்லை. உங்கள் கடிதமே முதலாவது கடிதம். தனிநபர்கள் பற்றிய விமர்சனம் கட்டுரையை தொடர்ந்து சிறப்பாகப் புரிந்து கொள்ளமுடியும் என்பதால் முன்வைக்கப்பட்டது. என். எல். எப். ரி தொடர்பான கூட்டு விமர்சனம் நடைமுறைரீதியாக சாத்தியம் இன்மையாகவே உள்ளது. என், எல். எப். ரி பற்றி மாறுபட்ட பல கருத்துக்கள் உள்ளமையால் கூட்டு முடிவு என்பது சிலவிடயங்களை ஆராயாமல் தவி

www.tamilarangam.net

ர்த்துவிடவே வாய்ப்பு ஏற்படும். என்.எல்.எப்.டீ தொடர்பான விமர்சனத்தையொட்டிக் கருத்து வைப்பின் நிச்சயமாக பிரசுரிக்கப்படும். எமது விமர்சனம் என்பது முதலில் சம்பவங்களை முன்வைத்து இறுதியாக விமர்சனத்தை முன்வைப்பது என்ற அடிப்படையிலுள்ளது.

எமது திட்டம் நிச்சயமாக பூரணமானதல்ல. முன்வைக்கப்பட்ட திட்டம் மாறுபட்ட சில கருத்துக்களை உள்ளடக்கியுமுள்ளது. மற்றும் திட்டம் நீங்கள் குறிப்பிட்ட இரு விடயத்திற்கும் அப்பால் பல விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென நாம் கருதுகின்றோம். இது தொடர்பாக ஒரு பரந்த விவாதத்தை நடத்த பல கருத்துக்களைக் கொண்டு ஒரு திட்டத்தை முன்வைப்பது என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்டது. நீங்கள் குறிப்பிட்ட இரு விடயங்களையும் எப்படி வைக்கலாம் என்பதை எமக்கு அறியத்தரவும். இவை ளைவிட எமக்கு தொலைபேசி முலம் இத்திட்டம் தொடர்பான புதிய இரு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டது.

1. சாதி அமைப்புக்கு எதிராகப் போராடுதல்
2. ஆணாதிக்கச் சமூகத்திற்கு(பெண்விடுதலை) எதிராகப் போராடுதல்.

இவை கூட இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். இதைவிட திட்டம் தொடர்பான விமர்சனத்தை மேலும் வரவேற்கிறோம்.

மற்றும் 'சமர்' பற்றிய விமர்சனத்தில் ஜனரஞ்சகத்தன்மையை இழந்துள்ளது. மற்றும் கூட்டு முயற்சியில் இருந்து தனிநபர்களின் கட்டுரைகளைத் தாங்கி வருகின்றது., கட்டைதாசனின் பக்கங்கள் நின்றுவிட்டது., மற்றும் தனிப்பட்டுப் போய்விட்டது., 'சமரில்' ஒரு இறுக்கத்தை காணமுடிகிறது. இவைகளை நாம் பார்ப்போமாயின் ஓரளவு உண்மையே. இன்று 'சமர்' கூட்டு முயற்சியிலுள்ளது. இதற்கப்பால் கட்டுரைகளை வெளியிலிருந்து (அரசியலுடன்) அனுப்பின் நிச்சயமாக போடப்படும். சமர்குழுக்கு கருத்து முரண்பாடிருப்பின் சமர் தனது கருத்தையும் பிரசுரிக்கும். கட்டைதாசனின் பக்கங்கள் அதை எழுதுபவர் எழுதாமையால் தான் நின்று போனது. ஜனரஞ்சகத்தன்மைமையை இழந்து தனிப்பட்டு இறுக்கமாகியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். இவை ஏற்படக் காரணங்கள் இருந்துள்ளது. உங்கள் பார்வைப்படி இன்றைய காலகட்டம் மிகமுக்கியமானது. அதாவது அனைத்து வர்க்கங்களையும் (புரட்சியுடன் இணைத்துவரக்கூடிய) வென்று எடுக்கவேண்டிய காலகட்டம் இது. இந்த நிலையை நாம் சமர் ஆரம்பித்தபோது எமது கருத்தாக இருந்த போதும் சமர் வெளிவந்த இக்காலகட்டத்தில் இம்முடிவை இயல்பாக நாம் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டோம். இதன் வெளிப்பாடாகவே எமது இறுக்கம். நாம் 'சமர்' வெளியிட முடிவெடுத்த போது எதிர்காலப் போராட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

த்திற்குத் தலைமை தாங்கக் கூடிய ஒரு தலைமையிருக்கவில்லை. இதுவே இன்றைய நிலையும். இப்படித் தலைமை இல்லாத நிலையிலும் நாம் ஐக்கிய முன்னணியை கட்டும் அதே நேரம் ஒரு தலைமையை மறுபக்கத்தில் கட்டிவிட முடியுமென நினைத்தோம். இதன் வெளிப்பாடாகவே நாம் மூன்றாவது பாதைக்கான 5 அடிப்படையான விடயங்களை உள்ளடக்கி ஒரு திட்டத்தை முன்வைத்தோம் ஏன் பிரான்சில் 17 பேர் உள்ளடக்கிய ஒரு கல்வி வட்டத்தையுருவாக்கினோம். இவையெல்லாம் ஐக்கிய முன்னணியை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கினோம். ஆனால் அடிப்படையில் இவை வெற்றியளிக்கமுடியாதிருந்தது. இவர்கள் தமக்கிடையிலான கருத்து முரண்பாட்டை பகை முரண்பாடாகப் பார்க்க முற்பட்டனர். கருத்துக்கள் மீதான விமர்சனத்தை நிராகரித்தனர். ஒவ்வொரு நபரும் சுயவிமர்சனம் செய்வதை நிராகரித்தனர். இதைதனிப்பட்ட நபர்களுக்கிடையில் செய்ய மறுத்தனர். மாற்றுக்கருத்தை பகிரங்கமாக முன்வைத்த போது, அதன் மீதான விமர்சனத்தை முன்வைக்க முற்பட்ட போது, எதிர்நிலைக்குச் சென்றனர். இவர்களை நாம் ஆராயும் போது இன்று எழுந்துள்ள முற்போக்கலை... யை பிழைப்புக்காக நடத்தி பிரமுகர்களாக பவனிவருகின்றனர். இன்று பெரும் பகுதியினர் கருத்தைத் திரித்து போராட்டத்தை குழப்ப முயற்சிக்கின்றனர். இதற்கப்பால் உள்ள பலநல்ல சக்திகள் இன்று ஒரு சரியான நிலையை வந்தடையாத நிலையிலுள்ளனர். இவர்களை சரியான பக்கத்திற்கு வென்றெடுக்க நாம் எமது கருத்தை மிகத் தெளிவாக உயர்த்திப் பிடிப்பதன் வெளிப்பாடாக எமதிறக்கம் உருவாகியுள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் வெளிவரும் நக்சல்பாரி சஞ்சிகைகளை நாம் பார்ப்போமாயின் அவர்கள் நடைமுறைப் பிரச்சனை மீது கருத்தை முன்வைக்கின்றனர். இதுவே சரியானது. இதை சமர் செய்ய வேண்டும் என்ற போதிலும் எம்மால் அதைச் செய்ய எவ்வளவு முயன்ற போதும் முடியாதுள்ளது. ஏனெனின் தத்துவார்த்த விவாதம் தொடர்ச்சியாக நடைபெறும் வகையில் மாற்றுச் சஞ்சிகைகள் கட்டுரைகளைப் பிரசுரிக்கின்றன. அதனால் நாம் அதற்றின்மீது கருத்து கூறுவதால் சமர் அதிலிருந்து விலகமுடியாதுள்ளது. நாம் தற்போது, நாம் தொட்டு வரும் தத்துவார்த்தப் பிரச்சனைகளையொட்டி மாற்றுச் சஞ்சிகைகள் கட்டுரைகள் பிரசுரிப்பின் அவர்களுக்கே எமது விமர்சனத்தை முன்வைப்பதனூடாக சமரில் நடைமுறைப் பிரச்சனைகளை ஆராய ஓரளவு முயல்கின்றோம். நீங்கள் குறிப்பிட்ட தமிழ் மாணவர் பேரவையின் ஊர்வலம் தொடர்பான பிரச்சனையில் தமிழ் மாணவர் பேரவையுடன் இணைந்த ஊர்வலமெனின் முதலில் அவர்களுடன் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அங்கு மாறுபட்ட கருத்திருப்பின் அதை தமிழ் மாணவர் பேரவைக்குள் விமர்சனங்களை வைக்க ஜனநாயகம் இருந்திருக்க வேண்டும். அவை முக்கியமானவையெனின் அவற்றை மக்களுக்கு

www.tamilarangam.net

வைக்கும் உரிமையை அங்கீகரிக்க வேண்டும். அதாவது கருத்துச்சு தந்திரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைச் செய்யாத ப ட்சத்தில் கருத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். இத ற்கப்பால் முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு நடவடிக்கை யை மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டும். அப்போது மக்கள் எமது நிலையை புரிந்து கொள்ளவும், அதே நேரம் அதை நடத் தும் சக்திகள் நீண்ட காலத்தில் எம்மை நோக்கி வரவும் செய்யு ம். மாற்றுக் கருத்தை எச்சந்தர்பத்திலாவது சொல்லாமல் வி டின் சரியான சக்திகள் எம்மை நோக்கி வர சந்தர்ப்பம் இருக் காது.

ஆசிரியர் குழு

சமர் சஞ்சிகையின் கருத்துகள் குறிப்பிடத்தக்களவு என்னில் பாதிப் பை ஏற்படுத்தியுள்ளது என்பதை குறிப்பிடவேண்டும். இதுவரை நா ன் கொண்டிருந்த கருத்துகளை மறுபரிசீலனை செய்ய தூண்டுகின்ற ளவு என்னளவில் கருத்துப் பலத்தை கொண்டிருக்கின்றது. புலம்பெய ர்ந்த நாடுகளிலிருந்து வருகின்ற சஞ்சிகைகளில் சமூகமாற்றம் இல ங்கையில் நடைபெறுகின்ற போராட்டத்திற்கு சரியான தலைமை உருவாக்குவதில் ஆர்வம் கொண்ட சஞ்சிகைகளை நாம் பெற்றிருக்கி ன்றோம். சில விமர்சனம் எழுதியுள்ளோம். எனினும் அதைச் சாதிக் கும் திசையில் நீங்கள் காட்டும் முனைப்பை போல வேறு சஞ்சி கைகளிடம் காணவில்லை. தங்களது ஆர்வம் எனக்கு உற்சாகம் த ருகின்றது.

1) சமர் சஞ்சிகை வெளிப்படுத்துகின்ற இரு முக்கிய போக்குகள் விடயத்தில் நான் முழுமையாக உடன்படுகின்றேன்.

i) மார்க்சிய, லெனினிய, மாசேதுங் சிந்தனைகளை, அதன் அடிப்ப டைகளை உறுதியுடன் பற்றி நிற்பது.
ii) திரிபுவாதம், பிழைப்புவாதம் என்பவற்றிற் கெதிரான விட்டுக் கொடுக்காத போராட்டம்.

சமர் சஞ்சிகையினது விமர்சன அணுகுமுறை மிகச்சரியானது என்பதி ல் எவ்வித ஐயமில்லை. சமூக நலன் மீது அக்கறை கொண்டுள்ள எவரும் விமர்சனங்களை எதிர்கொள்ள தயாராக வேண்டும். விமர் சனங்கள் முடக்கிப்போட்டுவிடும் என்று அதனால் பாதிப்புறுபவர்கள் சொந்த நலன்களை பெரிதுபடுத்துபவர்களே. புலம்பெயர்ந்த நா டுகளில் முற்போக்கு அணி என்கின்ற வரையறைக்குள் அடங்குபவர்க ள் ஏறத்தாழ முழுமையாக குட்டிபூர்சுவா வர்க்கப் பின்னணியின ரே. இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வர்க்க அரசியலை ஏற்ப தாக கூறிக்கொள்கின்ற எத்தனையோ நபர்கள் ஏகாதிபத்திய சூ ழலில் பெறுகின்ற எத்தனையோ சீரழிவுகளுக்காக வக்காலத்து வாங்குகின்றார்கள். தன்னினச் சேர்க்கை இனால் சமூகத்திற்கு என்ன தீங்கு என வாதிடும் முற்போக்காளரை நான் அறிவேன். சொல்லி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லீ புரட்சியாகவும் செயலில் பிரமுகர்களாகவும் புலம் பெயர்ந்த நாடுகளில் பெரும்பான்மையினர் வேடமணிந்து நிற்கின்றனர். உழைக்கும் வர்க்கத்திற்கான தத்துவத்தை இந்த ஊதாரிக்கூட்டம் மாசு படுத்த அனுமதிக்க கூடாது. அச்செயற் பாட்டுக்கான மையமாக நீங்கள் விளங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பாக மனிதம் இதழில் மு. சிவகுமாரன் என்பவர் திரிபுவாதம் என்பதற்கு புது விளக்கம் கொடுத்ததினை மறுத்து எனது கருத்தை மனிதம் இதழுக்கு அனுப்பியிருந்தேன். அதில், விவாதப் பகுதி ஒன்றிற்கு ஒரு நபர் எழுதுகின்ற ஆக்கத்தை அச்சஞ்சிகையினது கருத்தாக எடுக்க முடியாது. (உதாரணமாக பவிழவுரின் முன் னைய படிகள் சஞ்சிகையின் கட்டுரைகள் அவர்களது கருத்தல்ல என்பது போல்) என்கின்ற அபிப்பிராயத்தில் "சமரினது அறுகுமுறையில் இருந்த தவறுடன் ஒப்பிட்டு திரிபு வாதத்தை நியாயப்படுத்த முயல்வதாக" குறிப்பிட்டிருந்தேன். எனினும் அடுத்த மனிதம் இதழ் அக்கட்டுரை (கரிகாலனது) வெளியிடுவதிலும், அதிலிருந்த கருத்து தொடர்பாகவும் தனது பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதனால் எனது அவ்முடிவு தவறானதாகிவிட்டது. "சமரினது அறுகு முறையில் இருந்த தவறு" எனக் குறிப்பிட்டதில் எனது அறுகு முறை தவறென சுயவிமர்சனம் செய்கின்றேன். எனது கருத்துகள் மனிதம் இதழில் பிரசுரமானால் பின் எனது இந்நிலையை அவர்களுக்கு அறியத்தருவேன். சில வேளைகளில் மனிதம் இதழ் பிரசுரித்தால் எனது நிலைப்பாட்டை நீங்கள் அறிவதற்காகவே எனது நிலைப்பாட்டை அறியத்தந்துள்ளேன்..

2) அடுத்து விடுதலைப் புலிகள் பற்றிய சமரினது முடிவு தொடர்பாக, இதுவரை விடுதலைப்புலிகளை முதலாளித்துவ தேசியத் தன்மை கொண்டவர்களெனவும் தேசியத்தன்மை இருப்பதாகவும் பிற்போக்கு தேசியவெறி எனவும் முடிவெடுத்திருந்தேன். முதலாளித்துவ தேசியவாதம் என்பதில் தரகு முதலாளித்துவம் தேசிய இயல்பைக் கொண்டிருக்காது என்பதால் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தையே பிரதிநிதித்துவம் செய்வதாக அபிப்பிராயம் கொண்டிருந்தேன். எனினும் தரகு முதலாளிய இயல்பைக் கொண்ட பல பண்புகள் அவதானத்துக்குட்படுத்தியதுடன் அது பற்றி ஆதாரங்களின் தெளிவின்மையால் முடிவெடுக்க இயலாத நிலைமை இருந்தது. ஏகாதிபத்தியங்களிடம் நேரடியாக ஆயுதம், உதவி பெறுவது, இஸ்ரேலிடம் பயிற்சி என்பன கூட போதிய ஆதாரங்களுடன் என்னால் உணர முடியாதிருந்தது. ஆயினும் புலிகளது ஏகாதிபத்தியங்களை எதிர்க்காத சார்பான அறுகுமுறை அவர்களது தன்மையை புலப்படுத்தியே வந்தது. தற்போது தங்கள் கட்டுரைகள் புலிகள் தொடர்பாக எனது அபிப்பிராயங்களை விரிவடைய செய்துள்ளது. எதிர்வரும் நாட்களில் வரையறை செய்கின்ற தெளிவை வந்தடைய முடியுமென நம்புகின்றேன்.

www.tamilarangam.net

3) மூன்றாவது பாதைக்கான தங்களது திட்டம் தொடர்பாக என்னுல் தெளிவான ஒரு வேலைமுறையை கிரகிக்க இயலவில்லை. இதழ் 7 இலேயே அதனுடைய திட்டம் பார்த்தேன். அது பொது வேலைத் திட்டமா, புலம்பெயர்ந்த நாடுகளுக்குரிய பிரச்சார வேலைத்திட்டமா? நீங்கள் இது தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். 1ம், 2ம் இதழ்களில் வெளியாகியிருப்பின் இவ்விதழ் பெற முயற்சிக்கின்றேன்.

மேலும் பாசிச அபாயம் உச்சமடைந்துள்ள நிலையில் அதையும் எதிர் கொண்டு உருவாகின்ற அரசியல் தலைமை, கட்சி சூழ்நிலையின் தன்மைகளை கிரகித்துக் கொண்டு அந்நிலைமைக்கேயுரித்தான கட்டுமானங்களை கொள்ளவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். அது விடயத்தில் தங்களது அணுகுமுறை தொடர்பாக எனக்கு அபிப்பிராய பேதமுண்டு. உணர்ச்சி வெளிப்பாட்டை பிரதிபலிக்கிறவையாக சில செயற்பாடுகள் இருக்கின்றதாக ஒரு சிறு எண்ணப்பாடுமுண்டு. எனினும் மறுதரப்பாக இயல்பாகவே எனது வர்க்க குணும்சத்தின் கோழைத்தனங்களிலிருந்து இவ் அணுகுமுறை எழுகின்றதா என்பனவற்றில் சரியான நிலையை வந்தடையாததால் திடமான முடிவுகளை வரையறுக்கவில்லை.

4) கருச்சிதைவு சம்பந்தப்பட்டதில் தங்களது கருத்துக்களுடன் உடன்பாடுண்டு. மற்றும் அது தொடர்பான தங்களுடைய கட்டுரைகளில் காணப்பட்ட பாலியல் சம்பந்தப்பட்ட விடயங்கள் முழுமையாக நான் உடன்படுவையாகவும் எனது கருத்துக்கள் எதிர்பார்ப்புகளுமுள்ளன. இங்கு முற்போக்கான நபர்கள் என்று வரையறுப்போரிடையே உடன்பாடு காணப் பேச முற்படும் போது பாலியல் தொடர்பான விடயம் பேசினல் ஒரு உடன்பாடும் வராது. அதை எடுக்கக்கூடாதென்று சொல்வதைக் கடந்த காலங்களில் கண்டதே எனது அனுபவம். பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் பற்றியதில் நான் தெளிவாக உள்ளேன். எதிர்வரும் காலங்களில் அதை விரிவாக பரிமாறிக் கொள்ளலாம் என நம்புகிறேன்.

5) ஐக்கிய இலங்கைப் புரட்சியா? தமிழீழப் பிரிவினையா? . . . இவ்விடயத்தில் இவ்விரண்டு கோஷத்திலுள்ளும் தமிழ் பேசும் மக்களினது சுயநிர்ணய உரிமை அடங்கியுள்ளது. பெரும்பான்மை சிங்களமக்கள் எவ்விதம் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டும், ஆதரவளிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறோமோ, அதேயளவு தமிழ் மக்களும் (அதாவது புரட்சிகர தலைமையின் கீழ் அணிதிரட்டப்படும் மக்கள் திரள்) சிங்கள மக்களது நலன் மீது அக்கறையும் ஐக்கியத்திற்கான ஆர்வமும் காட்டவேண்டும். தமிழீழமக்களது தேசிய விடுதலைப்போராட்டத்தைக் கையிலெடுப்பதன் மூலம் இலங்கையில் ஜனநாயகப்புரட்சி இலக்கை நோக்கி செய

www.tamilarangam.net

றப்படவேண்டும். இலங்கையின் அமைவு, ஏகாதிபத்திய தலையீட்டு
அபாயம் (இந்திய தலையீடு) என்பன இலங்கை மக்களின் ஐக்கிய
த்துக்கான தேவையை வலியுறுத்துவதாக கருதுகின்றேன். மேலும்
பாரம்பரியத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற பாட்டாளி வர்
க்க சக்திகளது பலவீனமான தன்மை நாம் அகநிலையாக எவ்வள
வு விருப்பம் கொண்டாலும் தமிழ்ப் பிரதேசங்களில் தனியே பாட்
டாளி வர்க்க கட்சி புரட்சியை தலைமை தாங்கும் சக்தியாக உ
ருப்பெறுமா என்பதையிட்டு இன்னும் சந்தேகமான நிலைமையும் வி
ரிவான துல்லியமான ஆய்வும் வேண்டப்படுகின்றதாக உள்ளது. கடந்
த காலங்களில் பாட்டாளி வர்க்க இலட்சியத்தை ஏற்ற அமைப்பு
கள் குட்டிப்பூர்சுவா வர்க்க நபர்களை அணிதிரட்டியதும் அவ் அமை
ப்புகள் சிலநெருக்கடிகளுக்கு முகம் கொடுத்ததும் சிதைந்து போ
னதும் நாம் அறிவோம். எனவே குட்டிப்பூர்சுவா வர்க்க நபர்க
ளோ, புத்திஜீவிகளோ பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கு தம்
மை அர்ப்பணித்தாலும் அதை முழுமையாக தன்னுடையதாக்கி, நடை
முறைப்படுத்தும் வர்க்கம் எது என்பதை நாம் எமது தேசத்தில்
கண்டறிய வேண்டும். முன்னணிப்படை எது என்பதைக்கண்டு அதனை
ஆற்றலை சரியான திசையில் கட்டவிழ்த்து விடவேண்டும். அவ்வகையி
ல் பாட்டாளிவர்க்க நீண்டகால நலன்களினடிப்படையில் உறுதியான
உருக்குப்போன்ற பாட்டாளிவர்க்க இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உ
ருவாக்கவேண்டிய அவாவின் வழியில் தேசிய அபிலாஷைகளை சர்
வதேசிய வர்க்க அபிலாஷைகளுக்கு இசைவாக முரணில்லாது கை
யாள்வதே பாட்டாளிவர்க்க அணுகுமுறை என கருதுகின்றேன்.

இலங்கையின் இன்றைய நிலைமையின் கீழ்
1) தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கும், பாதுகாப்புக்குமான
போரை கட்டமைக்கும் போதே பிரிவினை தான் என முன்னிறுத்
தாமல் சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள். சிங்கள, முஸ்லீம், ம
லையக மக்களே புதிய ஜனநாயகப் புரட்சியில் ஒன்றுபடுவோம்
என முழக்கம் வைக்க வேண்டுமென கருதுகின்றேன். தமிழீழம்
தான் என்பது பாரம்பரிய தமிழ்மக்களது கோரிக்கை மட்டுமே.
அது நியாயமானதெனினும் பாட்டாளி வர்க்க கோஷமில்லையென்
றே நான் கருதுகின்றேன். முக்கியமாக நான் சுட்டிக் காட்ட வி
ரும்புவது எதுவெனின் தமிழீழம் என முன்வைப்பினும் சுயநிர்ணய உரி
மையை அங்கீகரிக்க கோரி போராடுவதும் வர்க்க தலைமையை
நிறுவ உழைக்கின்ற வர்க்கப் போராளிகளுக்கு முழக்கம் வித்தியா
சமானதேயொழிய போராட்ட உள்ளடக்கம் ஒன்றே. பிரிவினை
தான் என வரையறை கொள்வதை தவிர்ப்பது இனங்களிடையேயா
ன ஐக்கியத்துக்கான அறைகூவல்.

மற்றும் இம்முழக்கங்களின் மூலமே உண்மையான வர்க்க சக்திகளை
யும் மற்றைய கூறுகளையும் இனம்பிரிக்க இயலும். சமர் இதழில்

www.tamilarangam.net

தென்னிலங்கையில் புரட்சிகர சக்திகள் பலம் பெற்றால் நாம் ஐக்கியப்பட்ட புரட்சிக்கு போராடவேண்டுமென குறிப்பிடுகின்றீர்கள். தமிழ்ப் பகுதிகளில் உறுதியான வர்க்கத் தலைமையை உருவாக்க இயலுமெனவும் மக்களை அவ் இலட்சியங்களுக்கு அணிதிரட்டமுடியுமெனவும் நம்புகின்ற அதேவேளை சிங்கள மக்களிடமிருந்து அப்போக்கு உருவாவதை சந்தேகத்துடன் நோக்குவது நீங்கள் இனரீதியில் நம்பிக்கை, அவநம்பிக்கை கொள்கின்ற போக்கு. மக்களை அதிலிருந்து மீட்பதற்காகவே நாம் உழைக்கவேண்டும். காலனியாட்சிக் காலம் முதலும், பின்பும் சிங்கள மக்கள் தமிழ் மக்களை விட வர்க்க உணர்வின் பாரம்பரியத்தில் மேம்பட்டவர்களென கருதுகின்றேன். எனவே தான் பாட்டாளி வர்க்க கட்சி மலையகம் போன்ற தொழிலாளர்கள் மத்தியில் வேரூன்ற வேண்டும். எனினும் அதற்காக தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தை கவனத்தில் கொள்ளாது தவிர்ப்பது என்பது பொருளல்ல. இரண்டையும் எவ்விதம் முரணின்றி இணைப்பது என்பதே பிரச்சனை. அதற்கு தீர்வாக,

தமிழ்ப்பிரதேச புரட்சிகர சக்திகள் சுயநிர்ணய உரிமைக்கும் பாதுகாப்புக்குமான போரிற்கு தயாராகும் போதே முழக்கங்களை கோஷங்களை வர்க்க நலனடிப்படையில் வைக்கவேண்டும். ஐக்கியம் எப்போது சாத்தியப்படும் என்பதற்கு ஆருடம் சொல்லாமல் திறந்த மனத்துடன் அதற்கு முயலவேண்டும், உழைக்க வேண்டும். அதற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். இது தொடர்பாக உயிர்ப்பு 2 இல் சமரன் என்கின்ற பெயரில் வாசகர் கடிதம் எழுதியுள்ளேன். இவ் விடயம் தொடர்பான தங்கள் விமர்சனங்களை விரிவாக அறியத் தாருங்கள்.

மாறன், கனடா

1) மூன்றாவது பாதைக்கான வேலைத்திட்டம், வெளிநாடுகளிலும், இலங்கையிலும் உள்ள புரட்சிகர முற்போக்குசக்திகளால் (சமர் உட்பட) சமகாலத்தில் நடந்த தத்துவார்த்த விவாதங்களின்டிப்படையில் முனைப்புப் பெற்றதே. முன்னணிக்கான இத்திட்டம் முழுமையானதாக நாம் உறுதி செய்யவில்லை. மாறாக இத்திட்டம் பற்றிய ஆரோக்கியமான விவாதத்தை ஏற்படுத்துவதோடு, திட்டம் முழுமை பெற எம்மால் உழைக்க முடியும். இத்திட்டம் முழுமை பெற நாம் ஆரோக்கியமாக விவாதிப்போமாயின் அது தற்போதைக்கான பொது முன்னணிக்கான வேலைத்திட்டமாக மாத்திரமே அமையமுடியும்.

2) வாசகர் குறிப்பிட்டது போல் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக நாம் இத்திட்டத்தை முன்வைக்க எவ்வித நியாயமுமில்லை. புரட்சிகர பாட்டாளி வர்க்க சிந்தனை கொண்டோர், சிதைந்து அந்நிய நாடுகளிலும், இலங்கையிலும் உதிரிகளாகச் சிந்தித்ததின் விளைவே இத்திட்டம். இதில் நாட்டிலுள்ளோரின் கருத்துக்

www.tamilarangam.net

கள் ஆழம் பெற்றுள்ளன. போர்ச் சூழலில் உள்ளோரின் கருத்துக்கள் ஆழம் பெறும் போது அக-புறவய யதார்த்தம் கவனத்தில் கொள்ளப்படுவது இயல்பே.

3) ஐக்கிய இலங்கைப்புரட்சிபற்றி இன்று பலரும் பேசுகின்றனர். முன்னைய நாட்களில் ஏதொவொரு வகையில் இயக்கங்களோடு அரசியல் தொடர்பிருந்தவர்களும் இப்படிக் குழம்புவது இயல்பாகவேயுள்ளது. இதையொரு மாயையான தன்மை அல்லது விரக்தி மனோபாவம் என்றே சொல்லலாம். (சில மாக்சிசவாதிகள் சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் மாக்சியத்தின் எதிரியாகியுள்ளது போல்) முழு இலங்கைக்குமானதோர் புரட்சிக்குரிய கட்டுக்கட்டல் ஏற்படுமாயின் அது வரவேற்கத்தக்கதும் ஒன்றிணைய அல்லது இணைக்க வேண்டிய அவசியம் அனைத்து வர்க்க சிந்தனையாளர்கட்கும் உண்டு. ஆனல் நாம் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கவனத்தில் கொண்டே எதிர்காலத்திற்குரிய திட்டத்தை வகுக்கமுடியும். எதிர் காலத்திற்குரிய திட்டம் நிகழவிருக்கும் சர்வதேச மாற்றங்கள் அல்லது அழுத்தங்கள், பிராந்திய அரசியல் நிலைமை, இவைகட்கு நாம் ஈடுகொடுக்கும் ஆற்றலாலும் கருத்தியல் ரீதியான உறுதித்தன்மையையும் பொறுத்தே நமது சாதனை அமையும்.

சிங்கள மக்களது புரட்சிகர ஒருங்கிணைவு புறவயமாக எவ்வித உடனடிச் சாத்தியமும் உள்ளதாக நாம் கருதமுடியாது. ஏனெனில் போர்க்குணம்சம் கொண்ட ஜெ.வி.பி போன்ற ஆயுதக்குழுக்கள் சிங்கள மக்களை புரட்சியின்பால் நம்பிக்கையிழக்கச் செய்ததுமின்றி கருத்தியல் ரீதியாக தமிழர் எதிர்ப்புப் பிரசாரத்தையும் மேற்கொண்டன. நடைமுறையில் எல்.ரி.ரி.ஈ யினர் சிங்களமக்களை கூட்டம் கூட்டமாக படுகொலை செய்ததும், சிங்கள மக்களைத் தமிழர் மீது வெறுப்படையச் செய்துள்ளது. சமகாலத்தில் முற்போக்கு சிங்கள அரசியல் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளது ஒரு நல்ல சகுனமே. இருப்பினும் தேசிய இனப்பிரச்சனை பற்றிய தீர்வுக்குரிய வேலைத்திட்டம் எதையும் தெளிவாக இவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச்செல்லாமையும் குறிப்பிடத்தக்கது. இது இவர்கள் இன்னும் இலங்கையின் மரபுவழி அரசியலில் இருந்து மாறத் தயங்குவதையும், பேரினவாதத்தை எதிர்க்கும் திராணியற்றவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

1977 -1983 ஆண்டுகளில் கூர்மையடைந்த இனமுரண்பாட்டுக்கும் இன்றுள்ள இனமுரண்பாட்டின் வெளிப்பாடும் தன்மையில் மிகவும் மாறுபட்டுள்ளது. இனவாதம் களையப்பட்டுவிட்டதாக நாம் எவ்வகையிலும் கருதமுடியாது. 1983இல் 13 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்காக முழு இலங்கையிலுமே இனக்கலவரத்தை பேரினவாத சக்திகளும், ஆயுதப்படையினரும் அவிழ்த்து விட்டதை

www.tamilarangam.net

னர். இன்று ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். இதையொட்டி இனக்கலவரம் எதுவும் நடைபெறுவதில்லை என்பது உண்மையே. மாறாக சூழ்நிலைக்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள் என்றே நாம் கருதமுடியும்.

ஏனெனில் நூற்றுக்கணக்கில் கொல்லப்படும் இச் சிங்கள ராணுவத்தினருக்காகவோ தேசிய இனப்பிரச்சனையைத் தீர்வுக்குக் கொண்டு வருமாறோ அரசை நிர்ப்பந்திக்கும் குறைந்தபட்ச வெகுஜனங்களைக் கவரக்கூடிய எவ்வித போராட்டங்களுக்காகவும் சிங்கள மக்கள் எந்தவொரு இடதுசாரிக் குழுக்களாலும் அணிதிரட்டப்படவில்லை. பு[illegible]தரகுகள் மக்களை ஒட்டச் சுரண்ட ஏகாதிபத்தியங்கட்கு கதவு திறந்து விட்டதுமல்லாமல், இந் நாடுகளிடமே உதவியையும், கடனையும் பெற்று யுத்தம் செய்வதனூடாக ஒவ்வொரு குடிமகன் மீதும் கடன் சுமை ஏற்றுவதோடு தேசிய இனப்பிரச்சனையை கேலி செய்யும் அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர். இந்நிலமையை விளக்கி மக்களுக்கு ரோசமூட்ட சிங்களமக்கள் மத்தியில் எந்தவொரு வர்க்க சிந்தனை கொண்டோரோ, ஜனநாயக சக்திகளோ இல்லை என்றே கூறமுடியும். சிங்கள மக்கள் பேரினவாதத்திலிருந்து சற்றேனும் வெளியேறவில்லை என்பது புலனாகின்றது. (இந்தியாவில் பாரதீயஜனதா, காங்கிரஸ், போன்றகட்சிகளாலும், இவர்களது கூட்டு அமைப்பான மத அமைப்புக்களாலும் இந்துமத அடிப்படைவாத அரசியல் மயப்படுத்தலுக் கெதிராக தமிழ் நாட்டிலும் மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளிலும், புதியஜனநாயகம், மக்கள்யுத்தக்குழு போன்றோர் உழைக்கும் இந்துக்கள் உட்பட அனைத்துப் பிரிவு மக்களையும் அரசியல் மயப்படுத்தி பலவகையான எதிர்ப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். தற்போது "கருவறை நுழைதல்" என்னும் போராட்டவடிவத்தை முன்னெடுப்பதை நாம் ஒப்பீட்டுரீதியாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.) யுத்தப் பிரதேசங்களில் இறக்கும் ராணுவத்தினரை வீரபுருசர்களாக சிங்கள மக்கள் கருதுமளவிற்கு சிங்களமக்கள் பேரினவாத சக்திகளால் திசைதிருப்பப்பட்டுள்ளனர். பேரின வாதத்திலிருந்து விடுதலை பெற சரியான இலக்கற்றுத் துவங்கப்பட்ட போராட்டம் திசைமாறி தேக்கத்துக்குள்ளாகியுள்ள இவ்வேளையில் ஒரு அடியேனும் முன்னேற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலமையில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் புரட்சிகர சக்திகள் ஈடுபாட்டோடு வேலை செய்வது எவ்வகையில் சாத்தியப்படும். இது காலவரையும் மிகுந்த துன்பத்துக்குட்பட்ட தமிழ் பேசும் மக்களின் சமூக பொருளாதார அரசியல் விடுதலைக்கு வழிகோலுவதே இச்சூழ்நிலைக்கு சாத்தியமானதாகும். இதைக் கவனத்தில் கொண்டு நம்முன்னுள்ள பாரிய பொறுப்பு யாதெனில், தேசிய இன விடுதலையை வெல்லவும், புதியதோர் தலைமையைக் கட்டவும், உழைக்கும் ம

www.tamilarangam.net

க்களை முன்னணிப்படையாக்குவதன் மூலமே பொதுவுடமைப் புதியஜனநாயகப் புரட்சியாக மாற்றமுடியும். இதுவே இன்றைய, சிங்கள உழைக்கும் மக்களதும், இஸ்லாமிய, மலையக மக்களின் தனித்துவமான விடுதலைக்கும் முன்நிபந்தனையாக அமைவது மாத்திரமல்லாமல் தென்கிழக்காசியாவின் விடிவெள்ளியாகவும் அமையமுடியும். சிங்கள மக்கள் மத்தியில் சரியான புரட்சிகர சக்திகள் உருவாகின் முரண்பட்ட இணைவா, முரணற்ற இணைவை ஏற்படுத்துவதா என்பதை மக்களே தீர்மானிப்பவர்களாக உரிமை பெறவேண்டும்.

4) தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கும், பாதுகாப்புக்குமான போரைக் கட்டமைக்கும் போதே பிரிவினைதான் என முன்நிறுத்தாமல் சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள் எனக்கோர வேண்மெனக் கூறும் வாசகரின் கூற்றை நன்கு ஆராயவேண்டும். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி நாம் யாரைக் கோருவது?. விஜயதுங்காவின் அரசையா? அல்லது எதிர்காலத்தில் வரக்கூடிய சிறிமா அரசையா? அல்லது நாட்டில் வரக்கூடிய எக்ஸ்(X) என்னும் ஒரு அரசையா?. இக்கேள்விகளின் பின்னுள்ள நியாயத்தன்மை நம்சார்பில் அதிகபலமானதே. இவர்கள் அங்கீகரிக்கும் சுயநிர்ணய உரிமை தமிழ்மொழி அமுலாக்கல் போல் கேலிக்குரியதாயிராதென்று நாம் எப்படிக் கருதமுடியும். இவ்வினம் தன்னைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றுவிடவில்லை என்று மீண்டும் தலை சொறியும் தேவை ஏற்படாது என்பதை இலங்கையின் கடந்த கால அரசியல் மரபைக் கணக்கில் எடுப்பின் விளங்கிக் கொள்ளவது கேலிக்குரிய அரசியலல்ல. இன்று இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி அதிகரிப்பு, தேசிய சிறுகைத்தொழில் வீழ்ச்சி, நெற் செய்கைப் பாதிப்பு, ஏகாதிப்பத்தியங்கள் சுதந்திரவர்த்தக வலயம் போன்ற பலதுறைகளில் நாட்டைச் சூறையாடல் போன்ற மக்கள் விரோதச் செயல்கட்கு அரசு இடமளித்துள்ளமை நாட்டைத் தாக்கும் பாரதூரமான விடயமாகவேயுள்ளது. ஆனல் வடகிழக்கு யுத்தத்தை மாத்திரமே அரசு உட்பட்ட பேரினவாத சக்திகளும், இன்று நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சனை ஒன்று என மக்களை திசைதிருப்புவதுடன் சிங்கள இளைஞர்களையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்கிறது. உண்மையில் தேசிய இனமுரண்பாட்டை பாசிச அரசு யுத்தத்தினூடாகத் தீர்க்க முனைவதால், அது நாட்டின் முதன்மைப் பிரச்சனையாகியுள்ளது.. இதே போன்று மேற்கூறிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளும் திட்டங்களும் இதற்குச் சமமாக நாட்டைத் தாக்கியுள்ளது. இவைகள் எதையுமே கண்டு கொள்ளாத தென்னிலங்கை சிங்கள இடதுசாரிகளும், முற்போக்குக்குழுக்களும் தாம் சிங்களப் பேரினவாதத்திற்கு முழுமையான எதிரியல்ல என்பதைக் காட்டுகின்றது.. உண்மையில் சிங்கள இடதுசாரிகள் தமிழ்த்தேசிய இன விடுதலைக்கு எதிர்ப்பைக் காட்டும் முகமாகவே

www.tamilarangam.net

அரசின் அனைத்துப் பிற்போக்கு அம்சங்களையும் தீவிரமாக எதிர்க்க மக்கள் மத்தியில் வேலை செய்யாமல் இருந்து அரசுக்கு உதவிபுரிகின்றனர்.

இனவாதம் கலக்காத அரசியல் இலங்கையில் பலம்பெறாது என்னும் கருத்து சிங்கள அரசியல் கட்சிகளிடம் வேரூன்றியுள்ளதை வரலாறு நமக்குப் புகட்டியுள்ளது. இன, மொழி, முரண்பாட்டினால், இலக்கற்றுத் துவங்கப்பட்ட போராட்டம் தேக்கநிலைக்குள்ளாகி, தற்காப்பு யுத்தத்துக்குத் தள்ளப்பட்ட போதிலும் பாட்டாளி வர்க்கச் சிந்தனையையும், இனங்களின் ஐக்கியத்துக்கு வர்க்கப் போராட்டத்தை முன் நிபந்தனையப்படுத்தி தேசிய இனவிடுதலையை வெல்ல முடியுமென நம்பிக்கை கொண்ட பல சிந்தனையாளர்கள் உதிரியாய் உள்ளது வரலாற்றின் சோதனையும் சாதனையுமே. இந்நிலையில் ஒடுக்கப்படுமினம் வர்க்க நிலைப்பாட்டிலிருந்து ஒடுக்குமினமுட்பட்ட ஓர் விடுதலைக்கு அடித்தளமிடுவது அறிவுஜீவிகட்கு சாத்தியமாகலாம். இன்றைய யதார்த்தம் கவனத்தில் கொள்ளப்படுமாயின் பூத்திசாலித்தனமாயிருக்க முடியாது. தேசிய இனவிடுதலைக்கு உறுதியான, தெளிவான வேலைத்திட்டத்தை வகுத்து போராடுவதோடு கொள்கையளவில் முழு இலங்கைக்குமான வேலைத்திட்த்தைக் கொண்டிருந்தால் வரலாற்றில் இணைந்த போராட்டத்துக்கு வாய்ப்பாகக்கூடும். இங்கு பிலிப்பைய்ன்ஸ் கம்யூனிஸ் கட்சியுடன் ஐக்கிய முன்னணிக்கு வந்த மிந்தனு விடுதலை இயக்கத்தை சிறப்பாக சுட்டிக் காட்டமுடியும்.

நமது விடுதலையில் அனைத்து சிங்கள மக்களின் விடுதலை தங்கியுள்ளதா? அல்லது நமது விடுதலையோடு சிங்கள மக்கள் இணைவார்களா? என்பது காலத்தாலும் சிங்கள, தமிழ் புரட்சிகர சக்திகளின் வளர்ச்சியுடன் தலைமையின் சரியான வழிகாட்டலுடன் சாத்தியப்படலாம்.

சுயநிர்ணய உரிமையை முன்நிறுத்துகையில் தேவையேற்படும் போது பிரிவினையும் அதன் உள்ளடக்கமே. ஆனால் பிரிவினையை எப்போதும் சுயநிர்ணய உரிமை முதன்மைப்படுத்தவில்லை. சுயநிர்ணய உரிமை பற்றிய பிரக்ஞையில்லாத UNP போன்ற அரசிடம் எவ்வகையில் சுயநிர்ணய உரிமை சாத்தியமாகும்?. சோவியத் ஒன்றியம் புரட்சியின் போதும், புரட்சியின் பின்னரும் பரஸ்பரம் சுயநிர்ணய உரிமை பற்றிப் புரிந்து கொண்டே இணைந்திருந்தன. முதலாளித்துவ மீட்சியால் தேசிய இனங்களுள் முரண்பாடு ஏற்பட்டதும், தேசிய இனங்களின் தனித்துவமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய பிரக்ஞைபூர்வமாக சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து உருவாக்கப்பட்டிருந்த அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டே அனைத்துக் குடியரசுகளும் சுயமாகப் பிரிந்து சென்றது. (இன்றைய முதலாளித்துவ வெகுசனத் தொடர்புசாதனங்கள் யெல்சின் சோவியத் கு

www.tamilarangam.net

டியரசுகட்கு விடுதலை வாங்கிக் கொடுத்ததாகப் பிதட்டுவதில் எவ்வித உண்மையுமில்லை) இன்றைய இந்தியாவில் அனைத்துத் தேசிய இனங்களும் அடங்கிய ஒரு புரட்சியின் மூலமே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கமுடியும். புரட்சி சாத்தியமில்லாத பட்சத்தில் காஸ்மீர், பஞ்சாப், அசாம் போன்றே அனைத்து மானிலங்களும் பிரிவினையின் மூலமே சுயநிர்ணய உரிமையை வெல்லவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

ஐக்கிய இலங்கைப் பற்றிக்குறிப்பிடும் சிலகுழுக்களும் சஞ்சிகைகளும் குறுங்குழுவாதம், குறுந்தேசியவாதம் போன்ற பதங்களை தமிழ் மக்களின் அரசியல் மீது பிரயோகித்துதங்கள் கலப்பு இடதுசாரித்தனத்தைக் காட்ட முனைகின்றனர். தமிழ் மக்கள் இந்நிலைக்குத் தள்ளப்பட்டதையும், இன்றுள்ள அரசியல் சூழ்நிலையையும் கவனத்தில் கொள்ளாதுஇவர்கள் எழுதுவது கவலைக்குரியதாகும். நாம் மிகவும் அவதானமாக ஆராயவேண்டிய விடயங்களை எப்போதும் விளையாட்டாகக் கருதிவிட முடியாது. தமிழ்தேசிய இனவிடுதலைப்போராட்டத்தில் நடந்த பாரதூரமான பிழைபாடுகளும், தோல்விப்பாதையும், பல்தேசிய விடுதலைவிரும்பும் தீவிரவாத இடதுசாரிகளை உருவாக்கியுள்ளது. புலிகள் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்தும் போதும், முஸ்லீம் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் போதும் தமிழ் மக்கள் சார்பிலிருந்து முற்போக்குச் சக்திகளால் பல கோணங்களில் கண்டனங்களும் விமர்சனங்களும், தீர்வும், வருவது கண்கூடு. யுத்த நேர்மையின்றி ராணுவம் பல தமிழ் கிராமங்களுக்குள் புகுந்து பெண்களையும், குழந்தைகளையும் வெட்டியும் சுட்டும் கற்பழித்தும் பயங்கரவாதம் செய்தமை, கிராமம் கிராமமாக பல தடவைகள் நடந்துள்ளன. இதை எதிர்த்த எந்தவொரு சிங்கள இடதுசாரிக் கட்சியோ, முற்போக்குக் சக்திகளோ அல்லது எந்தவொரு தனிமனிதரோ குறைந்த பட்சம் எதிர் அறிக்கையோ, விட்டதில்லை, என்பதைச் சற்றுக் கவனியுங்கள். இதுபோன்றே "ஜிகாத்" போன்ற இயக்கங்கள் தமிழ்மக்களைக் கொல்லும் போது இதுவரைக்கும் எந்தவொரு முஸ்லீம் அரசியல் கட்சியோ, அமைப்போ, தனிநபரோ கண்டனம் செய்ததில்லை. (1983 காலகட்டங்களில் தமிழ் இளைஞர்கள் தங்கள் எதிரிகளைக் கொன்ற போது கூட்டணியினரின் மௌனம் போன்றது) இதிலிருந்து நாம் உரைக்கூடியது யாதெனில் தமிழ் மக்கள் இடதுசாரி அரசியலில் சிங்கள, முஸ்லீம் மக்களிலும் பார்க்க சற்று வளர்ச்சியடைந்துள்ளனர். என்பதே. நாம் இப்படி எழுதுவதையிட்டு தமிழ்குழுக்களின் நடவடிக்கைகளையோ, அரசியலைநியாயப்படுத்துவதாக யாரும் தவறுகக் கணக்கிடக்கூடாது. இம்முரண்பாடு தீர்ந்து சமன்பாடு ஏற்படும் போதே ஐக்கிய இலங்கைக்கான போராட்டத்திற்கு 'குறைந்தபட்சம்' ஐக்கிய முன்னணியாவது ஏற்படலாம் என்பதே எமது கருத்து.

58 ம் பக்கம் பார்க்கவும்

www.tamilarangam.net

## பிரேமதாசா

பிரேமதாசாவின் அரசியல் அர்த்தமுள்ள கொலை நடந்துள்ள இவ் இவ்வேளையில், ராஜீவ்காந்தியின் கொலையையும், அதுபற்றி அவ் வேளையில் ஐரோப்பிய சஞ்சிகைகளும், சில அரசியல் பிரமுகர் களும், அதிகாரவார்க்கப் பிரதிநிதிகள், பாதிக்கப்பட்டவர்களா ல் பழிதீர்த்துக் கொள்ளப்படும் போது, இவ்வதிகாரவர்க்க தர குமுதலாளிகட்காக வக்காலத்து மனிதநேசம் பேசியதை நாம் நினைவுபடுத்துகின்றோம்.

இந்நினைவிலிருந்து நமது கண்ணுக்குத் தென்படும் அரசியல் பரிணமம் யாதெனில் அனேகமான சஞ்சிகைகள் பிரேமதாசாவின் கொலை யை வரவேற்றே எழுதியுள்ளனவாகும். ஆனால் பிரமுகர்கள் எப்படி யோ யாமறியோம்.

பிரேமதாசா கொலை செய்யப்பட்டபின்னர் இலங்கையில் இருந்து வெளிவரும் நாளேடுகள் அவர் ஏழைகளின் தலைவனாகவும், மக்களு க்காக வாழ்ந்தவராகவும், அடிமட்டத்திலிருந்து உயர்ந்த மாமனி தனுகவும் சித்தரித்து எழுதுவதை நோக்குமிடத்து, இலங்கையின் அ ரசியல் வரலாற்றில் பத்திரிகைச் சுதந்திரத்தை ஒட்டு மொத்த மாகப் பறித்தெடுத்த பிரேமதாசாவை வளர்த்துவிட்டதும் விழுந்த மாட்டுக்குக் குறிசூட்டும் இப்பத்திரிகையாளர்கள் தான் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல முக்கிய காலகட்டங்கள் கடந்துள்ளன. அதில் பிரேமாவின் காட்டாட்சியை மக்கள் எப் போதும் மறப்பதற்கில்லை. ஒரு லட்சம் சிங்கள மக்களையும் ப லலாயிரம் தமிழ் மக்களையும் குறுகியகாலத்தில் கொன்று ஏகாதிப த்தியத்தின் பிரதிநிதியாகச் செயற்பட்ட இவர், தனது அரசியல் எதிரிகளையெல்லாம் ஒழித்து, சர்வாதிகாரத்தை நிலைநாட்டி ம க்களின் வாழ்வை ஒட்டச்சுரண்ட, ஏகாதிபத்தியங்களுக்காக கதவு களை அகலத்திறந்து அவர்களின் காவல் நாயாகவும் இருந்த இவரை தொழிலாளர்தினமான மே நாளை கழியாட்ட விழாவா க சித்தரித்து மக்களை மந்தைகளாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மனித வெடிகுண்டால் கொல்லப்பட்டது ந ல்ல சகுனமாகவே நாம் கருதலாம்.

அனைத்துப்பிரிவு மக்களும் இவர்மீது ஆத்திரம் கொண்டிருந்ததும் ப லரும் இவரை கொல்லமுயல்வர் என இரகசியப் பொலிசார் எச் சரித்து பாதுகாப்பு மிகவும் பலமாக்கப்பட்டிருந்த போதிலும், தாக்குதலின்பாணி, புலிகளின் தற்கொலைப் படைப் "பிரிவாலே கொல்லப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரேமாவினால் கொலை செய்யப்பட்ட ரஞ்சன்விஜேரத்ன, லலித், கொப்பேகடுவ.....போன்றவர்களை புலிகள் தாமே கொலை செய்ததாக உரிமைகோரி பிரேமாவைக்காப்பாற்ற முயன்றனர். தற்போது பிரேமாவை தாம் கொலை செய்யவில்லை என மறுத்தும் உள்ளனர். இம்முரண்பாடு விசித்திரமானதல்ல. இது புலிகளின் தேசியத்தன்மையும் அல்ல. இது புலிகட்கும், பிரேமாவுக்கும் இடையில் சுரண்டலில் ஏற்பட்ட பங்கு முரண்பாடேயாகும். ஏகாதிபத்தியச் சுரண்டலில் தமக்கிடையிலான பங்கு தொடர்பாகவே பிரேமா (சிங்கள தரகுக்கும்பல்) முழுதாகச் சுரண்டுவதை புலிகள் அங்கீகரிக்கத் தயார் இல்லை. தமிழ் மக்களை அங்கீகரிக்கப்பட்ட அரசு ஸ்தாபன வடிவினூடாக புலிகள் தாம் சுரண்டக் கோரும் உரிமையை, பிரேமா விட்டுக் கொடுக்கத் தயாரில்லாது யுத்தத்தைத் தொடர்ந்ததோடு சதுரங்கத்தில் சிறுபிள்ளைகளோடு விளையாடும் பெரிய மனிதன் போன்று காய்களை நகர்த்தியதாலும், புலிகள் சினங்கொண்டு எடுத்ததோர் நடவடிக்கையே இக்கொலை.

புதிய ஜனாதிபதி விஜேதுங்காவிடம் சுரண்டலில் பங்கு தொடர்பான விட்டுக் கொடுப்பை எதிர்பார்த்து, தமிழ் மக்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க புலிகள் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையைக் கோரிவருகின்றனர். புலிகளும், யூ.என்.பி யும் ஏகாதிபத்தியங்கட்குச் சேவைபுரிய மக்களை ஒட்டச் சுரண்டுவதில் எக்கருத்துவேறுபாடுமின்றி ஐக்கியப்பட்டபடி புலிகள் தனிநபர்களை அழித்து சுரண்டலில் பங்கு கோருகின்றனர். அதேவேளை பேரத்தைச் செழுமைப்படுத்த ,தீவிரப்படுத்த, சிங்கள முஸ்லீம் மக்களை கூட்டங் கூட்டமாக அழிக்கின்றனர். பிரேமா, ரஞ்சன், லலித் கொப்பேகடுவ போன்றவர்கள் சாதீய ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டிருந்த போதிலும், மக்கள் விரோதச் செயல்களில் போட்டி போட்டே நடைமுறைப் படுத்தினர். இவர்கள் ஒட்டு மொத்த சமூக விரோதிகளே. இவர்கள் பழிவாங்கப்பட வேண்டியவர்களுங்கூட. யூ.என்.பி யும் ஏனைய சிங்களக் கட்சிகளும் LTTE யினர்க்கு தமிழ் மக்களைச் சுரண்டும் உரிமையைக் கொடுக்காமல் இன்றைய சூழ்நிலையில் எதையும் சரியாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதை அறிந்திருந்த போதிலும், அல்லது விரும்பிலும், கையாலாகாதவர்களாகவேயுள்ளனர். ஏனெனில் இவர்களேதான் சிங்கள மக்களை பேரினவாதத்துக்கு இழுத்துச் சென்று அரசியல் பிழைப்பு நடத்தியவர்கள். பௌத்த சிங்களப் பேரினவாதத்துள் மூழ்கடிக்கப்பட்டுள்ள சிங்கள மக்கள், இவர்கள் அரசஸ்தாபன வடிவினூடாக கொடுக்க முயலும் எத்தகையுமைப்பையும் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை, மாறாக இவர்கள் தூக்கியெறியப்படுவார்கள். தற்போது நீதியரசர்கள், ராணுவத் தளபதிகள், கல்விமான்கள் போன்றோர் மீண்டும் இந்திய ராணுவத்தைக் கோருமாறு ஜனாதிபதிக்கு மனு அனுப்பியுள்ளதும், இம்முரண்பாட்டிலிருந்து தங்களை விடுவித்து பதவியைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தின் வெ

www.tamilarangam.net

ளிப்பாடே? இந்நிலைமை சர்வதேச அரசியல் மாற்றங்கள் நடைபெறும் போது, அல்லது அழுத்தங்கள் ஏற்படும் போது தலைகீழாய் மாறுவது எதிர்பாராததாகவே நாம் கருதவேண்டும்.

பிரேமதாசாவின் அதிர்ச்சிதரும் தகவல்களையும் நாம் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். யாந்திரீக வேள்விகளிலும், யாகங்களிலும் அதீத நம்பிக்கை கொண்ட பிரேமா தனது குண்டர்படை மூலம் தென்னிலங்கையில் பல சிறுவர்களைக் கடத்தி பலி கொடுத்ததாகவும், இவர் தாய்பாலில் குளிப்பதற்காக பல இளந்தாய்மார் கடத்தப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன. JUAN VICENTE GOMEZ என்னும் சர்வாதிகாரி, எழுதவோ, படிக்கவோ, கையெழுத்திடவோ தெரியாதவனாயிருந்த போதிலும் இருபத்தியேழு ஆண்டுகள் வெனிசுலாவை (1908 –1935) ஆண்டான் என்பது வரலாறு. இவரது காலத்தில் பலபோராட்டங்கள் நடந்ததால் ஆயிரக்கணக்கான போராளிகள் இவரது நேரடிக் கட்டளையில் சித்திரவதைக்குட்பட்டு கொல்லப்பட்டார்கள். இவரை ஹிட்லருக்கு சமமாகவே உலகு கணித்தது. நமது பிரேமா போன்றே யாகங்களிலும், யந்திரீகங்களிலும் மிகவும் நம்பிக்கை கொண்டு வேள்விகள் நடத்தி இருபத்தியேழு ஆண்டுகள் வெனிசூலாவை ஆண்டான். என்பதை நினைவுபடுத்தும் போது பிரேமா GOMEZ வைப்பின்பற்றியுள்ளார் என்பது நன்கு புலப்படுகின்றது.

பிரேமாவின் மரணத்திற்காகக் முதலைக் கண்ணீர் வடிக்கும் பத்திரிகையாளர்களே! ரிச்சட் டி சொய்சா, சரத்முத்தெட்டுவேகம, கூனாயக்க, ரோகண விஜயவீர, விஜேகுமாரணதுங்க, சனத்கறுபியக், லங்காபுற, தம்மிககித்துள்..... போன்றவர்களில் சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், எதிர்க்கருத்துக் கொண்ட அரசியல்வாதிகள் போன்றோரையும் கொல்லப்பட்ட அப்பாவி மக்களையும் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றோரின் கொலையில் பிரேமாவுக்கு கணிசமான பங்கிருந்ததையும் நினைவுபடுத்திப் பாருங்கள் எனக் கோருகின்றோம். பிரேமதாச தனது தம்பிமாராகக் குறிப்பிட்ட துரோகிகள் டக்கஸ்தேவானந்தாவும், அஸ்ரப்பும் அண்ணையிழந்து என்ன செய்வார்களோ..... யாமறியோம்.

## லலித்

கடந்த பல வருடங்களாக இலங்கையில் அரசியல் படுகொலைகள் நடந்து வருபவை நமக்குப் புதியனவல்ல. இக் கொலைத் தொடர்ச்சிகளில் ஒன்றாக முன்னைநாள் யூ.என்.பி அமைச்சர் லலித்தின் கொலை நடந்தேறியுள்ளது. கொலைக்கலாச்சார அரசியல் நடத்தி பிழைத்தவர்கள் கொல்லப்படும் போது நாம் கூக்குரலிடுவதைத் தவிர்த்துள்ளோம். கொலைகளே அரசியல் மரபாகிப் போய்விடாதிருக்கவும், இக்கொலை, ஏன், எதற்காக, யார் செய்

கின்றனர், என்பதில் நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டிய அவசியம் எம்மெலிலோருக்குண்டு.

இலங்கையில் SLFP யை ஆக்கிரமித்துள்ள குடும்பமேலாதிக்கத்தைக் கலைனத்தில் கொண்டு, டட்லிசேனநாயக்காவின் சகோதரரின் மகன் ருக்மன்சேனநாயக்காவின் குடும்ப அரசியல் ஆதிக்கத்தை J.R U.N.P யில் இருந்து உடைத் தெறிந்தார் என்பது உண்மையே. இருப்பினும் கண்டிய உயர்குல பௌத்த சிங்களவருகட்கு முன்னுரிமை கொடுத்ததோடு மிகச்சிறிய வயதிலிருந்த காமினிதிசாநாயக்க போன்றோரையும் தலைமை அந்தஸ்த்து நிலைக்கு உயர்த்தினர். தாழ்த்தப்பட்ட சமூக அமைப்பிலிருந்து உருவான நீண்டகால கட்சி உறுப்பினரும், இலக்கியவாதியும், நடுத்தர வர்க்கத்தையும் அடிமட்டத்திலுள்ளோரையும் கவரக்கூடிய சிறந்த பேச்சாளருமாகிய (M.G.R போல்) பிரேமதாசாவின் இயல்பான வளர்ச்சியினூடாக கட்சியின் சரிபாதி அங்கத்தவர்களின் மதிப்பையும் ஆதரவையும் பெற்றிருந்ததை J.R ஆலோ மற்றும் உயர்குல U.N.P தலைவர்களாலோ எதுவும் செய்யமுடியாதிருந்தது. இதன் நிமிர்த்தமே J.R காலத்தில் பிரதமர்ப் பதவியையும், 88ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி வேட்பாளராகவும் தெரிவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது

ஜனாதிபதித் தேர்தலில் பிரேமா வெற்றியீட்டி பாராளுமன்றத் தேர்தலை நடத்தி முடித்த பின்னர் லலித் அத்துலத்முதலியை பிரதமாராக நியமிக்கும்படி கட்சியில் சிலரும் J R குழுவும் அழுத்தப்படுத்தியும் பிரேமதாச நிராகரித்தார். மக்களால் எவ்வித எதிர்பார்ப்புக்கும் உட்படாத விஜயதுங்காவை எதிர்பாரா வண்ணம் பிரதமராக்கி லலித்தையும், J.R குழுவையும் அவமானப் படுத்தினர் என்றால் மிகையில்லை.

இதனால் விரக்தியும் ஆத்திரம் அடைந்த லலித்தும் காமினியும் நேரம் வரும்வரை யோடு ஒட்டிக் கொண்டு பொறுத்திருந்தனர். ராஜீவ்காந்தியின் மரணச் சடங்கிற்குக் சென்ற காமினி இந்தியாவிலேயே மிகவும் சுதந்திரமாக SLFP யினரைச் சந்தித்து பேசி ஜனாதிபதி பிரேமா மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர ஒழுங்க செய்து இலங்கை வந்ததும் நடைமுறையில் துரிதப்படுத்தி செய்து முடிக்க முயற்சித்தனர். ஆனால் பிரேமா பாராளுமன்ற உறுப்பினர்களையும் கட்சிப் பிரமுகர்களையும் பயமுறுத்தலினூடாகவும், பணங்கொடுத்து விலைக்கு வாங்கியும், நம்பிக்கை இல்லாத் திர்மானத்தை முறியடித்தார். இதன் பின்னர் இவர்கள் கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டனர். இக்கால கட்டத்தின் பின்னரே இவர்கள் புதியகட்சியை D U N P யை ஆரம்பித்து ஜனநாயகவாதிகளாக முகமூடி அணிந்து கொண்டனர். இதன் பின்னரே பிரேமதாசாவின் ரயர்க்கலாச்சாரம், புலிகளுக்கு ஆயுதங் கொடுத்தமை, இஸ்ரேலோடு ராஜதந் தொடர் ஏற்படுத்தியமை, போன்ற விடயங்களை மக்கள் முன் பேசமுனைந்தனர். ஜனநாயகத்தை உண்மையில்

www.tamilarangam.net

லலித் நேசித்தவராயிருந்தால் கட்சியிலும், ஆட்சியிலும் இருக்கும் போதே இவ்விடயங்களைக் கூறியிருக்கவேண்டும். மாறாக இவர் UNP யில் இருந்ததும் பிழைப்புவாத அரசியலுக்கே, அதைவிட்டு விலக்கப் பட்ட பின்னரும் பிழைப்புவாதமே முன்னணியிலிருந்தது. அதற்காக வே புதிய கட்சியும் ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதியாக இருக்கும் ஒரு தனிமனிதனிடம் அதிகாரங்கள் குவிக்கப்படுவதை JR காலத்தில் ஏற்றுக் கொண்ட இவர் பிரேமதாசாவை ஜனாதிபதி வேட்பாளரா க கட்சியில் முதன் முதல் பிரேரித்தவரும் இவரே.

பிரேமதாசா லலித்துக்கு பிரதமர் பதவிகொடுக்காமலும், அரசு இயந்திரத்தில் இவரது முக்கியத்துவம் நிராகரிக்கப்பட்டபின்னருமே இவர் ஜனநாயக விசுவாசியாக மாறினார். தனிமனித சாகாசங் களில் மயங்கும் மூன்றாவது மண்டலநாட்டு மக்களின் பண்புக்கு விதிவி லக்கில்லாமல் நமது நாட்டில் இவருக்கு ஓரளவு செல்வக்கு இருந் தது உண்மையே. சிங்கள மக்கள் மத்தியில் இச் செல்வாக்கிற்குக் காரணம் கடந்த காலத்தில் இவர் தேசிய பாதுகாப்பு அமைச்ச ராக இருந்து தமிழ்மக்கள் மீது குண்டு மழை பொழிந்ததேயாகும். வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இவரது பெயரை உச்சரிப்பதைக் கூட சிறுவர்கள் தொடக்கம் முதியோர் வரை வெறுப்பவர்களாகவே காணப்பட்டனர். நாட்டைச் சூறை யாடும் திறந்த பொருளாதாரக் கொள்கையையே பிரேமதாசா வுக்கு நிகராகக் கடைப்பிடிப்பதாக அறிவித்தார். தேசிய இனமுர ண்பாட்டுக்குத் தீர்வாக யுத்தத்தைக் கடைப்பிடிப்பது, தொடக்க ம் பிரேமதாசாவின் அனைத்துக் கொள்கையிலும் உடன்பட்ட இவர் அதிகாரபீடம் தொடர்பாக மாத்திரமே முரண்பட்டிருந்தார். UNP பேரினவாதிகளுக்கு கால்கழுவிடும் பாஸ்கரலிங்கத்தைக் ( பி ரேமதாசாவின் அந்தரங்க உளவாளி) குறித்து ஜனாதிபதி மாளிகையி ல் புலிகள்தான் தற்போது முக்கிய முடிவுகள் எடுக்கிறது- என்று மேடையில் கூறி இனவாதத்தை மேலும் கிளறியவர். பௌத்த சிங் களப் பேரினவாத மேலாண்மையை ஒரு அரசியல் சித்தாந்தமாக வே இவர் கருதியவர். தேசிய பாதுகாப்பு அமைச்சராக இவர் இருந்தபோது தொலைக்காட்சியில் இவர் ஆற்றிய உரைகள் இதை மிகவும் துல்லியமாக எடுத்தியம்புகின்றன. பிரேமதாசாவின் அரசிய ல் கேடித்தனம் அவரது அதிகார எல்லை உள்ள நாடுபூராவும் இ ருந்தது. லலித்தின் அரசியல் கேடித்தனம் அவரது அதிகார வரம் புக்குள்ளேயே இருந்தது. இவர்களது ஆட்சியிலும் மக்களுக்கு நம்பி க்கையிருந்ததில்லை. இவர்களது மரணத்திலும் மக்கள் நடுங்கிப் போயுள்ளனர். எதிர்காலமும் இதே நிலையை நோக்கி நகர்வ தை மக்கள் கவனத்தில் கொள்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தக் காலத்துக் கவிதை

அதிகாலை
எங்களூர் அப்பாவி மக்களைப் போல்
அமைதியாயும்,
அலைகடல்
எம் தேசத்தைப் போலவும்
குமுறிக் கொண்டிருந்ததுமான
ஒரு வேளையில்
(கடற்)பயணம் போனேன்.

கடலுள்
நடப்பட்ட வலையினுள்
சிக்குண்டு போயின மீன்கள்,
வெளியே..
எவர் விரித்த வலையிலோ
எல்லோருமாய்ச் சிக்கினர்.

எதிர்ப்பக்கம்
சூரிய கிரணங்கள் விரிக்க
எல்லாமே தங்களை
நனைத்துக் கொண்டன.

இயற்கையின் அரைப்பக்கத்தை
அழித்தலுக்கான தயாராக்குதலுக்குக்
கொடுத்துவிட்டு
எம்நாடு
சமாதான யாத்திரைக்கு
ஆட்கள் தேடும்.

தூரத்தே
கப்பலுக்கு வழிகாட்(ட)டும்
கலங்கரை தெரியும்
மானுட விடிவுக்கு வழி
விழி அறியாது.

ஓய்வுக்கு இடமற்ற
விரிந்த கடலின் மேல்
பறக்கும்,
பறவைகளின் நம்பிக்கையைப் போல்
என்னிடமும்,
என் போன்றோரிடமும்

www.tamilarangam.net

ஏதோ ஒரு நம்பிக்கை
எங்கேயோ கிடக்கும்.

அடுத்த கரை
தூரத்தில் தெரியும்,
எம் தேசத்துக்கு தேவையானது
எந்தக் கரையிலுமோ
எந்தத் தூரத்திலுமோ
தெரியாது.

13.06.1992 ஸ்நேகதூதன் (இலங்கை)

---

<u>விசேடதகமை</u>

பாரிஸ் நகரத்தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் "வேலையற்றோர் வேலைதேடும் விளம்பரங்களில்" பிரெஞ்சுநாட்டார் உட்பட அனைத்து வெளிநாட்டவரின் விளம்பரங்களும் அடங்கும். இவ் விளம்பரங்கள் மூலம் தொழில் தேடுவோர், தாம் கோரும் தொழில், தங்கள் தொழில்த்தகமை, தொலைபேசி இலக்கம், போன்றவற்றையே விளம்பரம் மூலம் அறிவிக்கின்றனர்.

இதில் மிகவும் சுவாரஸ்யமானதும், வித்தியாசமானதும் யாதெனில், இலங்கையர்களின் விளம்பரங்களில், தாம் ஓர் இலங்கையர் என்னும் அதிகப்படியான தகமையையும் குறிப்பிடுவதேயாகும்.

இதில் இலங்கையர் என்னும் முக்கியத்துவம் ஏன் என்று அங்கலாய்க்கிறீர்களா? இதோ விடை!

பிரெஞ்சுமொழி பேசமாட்டோம். நீங்கள் தரும் சம்பளத்தை ஏற்றுக் கொள்வோம். மற்றையத் தொழிலாளர்களோடு சேர்ந்து ஒருமித்த உரிமைக்குரல் கொடுக்கமாட்டோம். கோடரிக் காம்பாய் இருப்போம், மணிநேரவரையறையற்று வேலை செய்வோம், எந்தத் தொழிற்சட்டங்களும் எமக்கில்லை, சிலவேளை சினந் கொண்டு நீங்கள் என்னை அடித்தாலும், அடிவாங்குவது எனது தொழிலின் ஓர் அங்கமாகக் கருதுவேன்.
ஏனெனில் - ஒரு பிராங்கு -8 ரூபாய் 50 சதம்.

மொத்தத்தில் நாம் மனித உருவிலுள்ள மந்தைகளே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதத்துக்கு,

மதிப்பீடு என்பது அவ்வளவு எளிமையானதா, என்ன?

சமரிக்கு மறுப்பு என மனிதம் 21இல் ஆசிரியர்குழு ஒரு விமர்சனத்தை முன்வைத்துள்ளனர். மனிதம் 18இல் ஆசிரியர்குழு வைத்த விமர்சனத்துகான எமது பதில் விமர்சனத்தில் நாம் வைத்த சில பிரச்சனைகளை விமர்சிக்கமலேயே நழுவியுள்ளனர். அவைகளை ஒட்டியும், மார்க்சியத்தை பாதுகாத்து வளர்த்து எடுக்கும் நோக்கில் மீண்டும் நாம் மனித்த்தின் விமர்சனத்தை விமர்சிக்கின்றோம். மற்றும் மனிதம் 20இல் சிவகுமாரன் எழுதிய கட்டுரையை ஒட்டிய எமது விமர்சனம் ஒன்றை மனிதத்தில் பிரசுரிப்பதற்காக மனிதம் 21 வெளிவர முன்பே அனுப்பி உள்ளோம்.

"'திரிபுவாதம்!', 'முதலாளித்துவமீட்சி', 'சமூக ஏகாதிபத்தியம்' போன்ற பதப் பிரயோகம் 20 வருடத்துக்கு முன் ஒருவித தார்மீகப்பலத்தைக் கொண்டிருந்தது. ஆனால் இன்றைய சர்வதேச சூழல் இப்பதப்பிரயோகங்களை ஒருவிதக் கேலிக்குரியதாகவே நோக்குகிறது." என மனிதம் ஆசிரியர்குழு (கரிகாலன் அல்ல) கூறுகின்றனர். இதில் கேலிக்குரியதெனக் கூறி சமரைக் கேலி செய்துள்ளனர். நீங்கள் எம்மீதும், மார்க்சிசத்தின் மீதும் தவறான எந்த விமர்சனத்தை முன்வைத்தாலும் அதைக் கருத்துப்பலம் மூலம் எதிர்க் கொள்ளும் நம்பிக்கையுடையவர்கள். நீங்கள் குறிப்பிடாமல் விட்டுவிட்ட சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம் பச்சோந்தித்தனம், ஒருகாலித்தனம், ஏகாதிப்பத்தியம், நிலப்பிரபுத்துவம் என எல்லாக் கருத்துக்களும் வர்க்கசார்புடையது. மார்க்சியத்தின் கருத்துக்களுக்கு அர்த்தமுடைய இவைகள் கூட மனிதத்திற்கு கேலிக்குரியவையே. திரிபுவாதம், முதலாளித்துவமீட்சி, ஏகாதிப்பத்தியம் போன்ற சொற்பதங்கள் கேலி செய்யப்படுவது உண்மையே. யாரால் என்பதே இங்கு பிரச்சனை. முதலாளித்துவவாதிகள், ஏகாதிபத்தியவாதிகள், திரிபுவாதிகள், பிழைப்புவாதிகள்..... போன்றோரே மார்க்சியத்தை கேலி செய்கின்றனர். இதில் மனிதம் தனது ஊசலாட்டத்தைக் கைவிட்டு இவர்களுடன் இணைந்துள்ளனர். திரிபுவாதம் சோசலிசத்தின் பின்னடைவுடன் முன் வைக்கப்பட்டாதாக உண்மைக்கு மாறாக மனிதம் ஆசிரியர்குழு முன்வைத்துள்ளனர். திரிபுவாதம் என்ற பதம் மார்க்சிசம் சமூகவிஞ்ஞானமாக உருவான நாள் முதல் மார்க்சிசத்தை சமூகவிஞ்ஞானத்திற்கு முரணாகத் திரித்த போது பயன்படுத்திய சொற்பதங்களே. இவைகளை மார்க்ஸ் எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ....., என அனைத்துமார்க்சிட்டுகளும் பயன்படுத்தியதே. இன்று மார்சிசத்தை திரிப்பது அற்றுவிட்டது (என்க் கேலி செய்துள்ளனர்) எனக் கூறியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது இருபது வருடங்களுக்கு முன் நடந்தது என்றும் கூறியுள்ளனர். சமூகம் ஏதோ(?) வகையாக மாறி திரிப்பது அற்றுவிட்டது என வாதிட்டு திரிபைப் பாதுகாக்க முயன்றுள்ளனர். உதாரணமாக, இன்று எம்மண்ணில் நடக்கும் ஒரு சம்பவம் அதிப் பெருக்கி திரிபுபடுத்தி வருவதில்லை என மனிதம் வாதாடுகின்றனர். இதே மனிதத்தில் வெளியாகிய 'கேள்விக் குறிகளான' என்ற கதையில் ஒரு பெண் பற்றி, முற்போக்கு பற்றிக் கதைத்தபடி ஒருவர் செய்த அவதூற்றை சந்தர்ப்பவாதம், பச்சோந்தி என இனம் காட்டுகிறார் தமயந்தி. இது அம்முற்போக்குவாதியின் செயற்பாட்டைக்குறித்தே. அவர் பெண் பற்றி திரித்துக் கூறியது என்பது திரிபுவாதமே. இவைகள் எல்லாம் இருபது வருடங்களுக்கு முந்தைய நிலையில் மட்டுமல்ல இன்றும் உள்ளது. இவைகளை எல்லாம் கேலிக்குரியது எனச் சொல்லி திரிபை பாதுகாக்க முயன்றுள்ளனர். இதில் சோவியத்தில் நடந்தை பின்னடைவு என்று வாதிட்டு உள்ளனர். இவர்களின் பின்னடைவு என்ற வாதத்தில் எதோ சோசலிச அமைப்புக்குள் எதோ தத்துவக் குறைபாட்டால் தற்கலிகமாக பின்னடைவு எற்பட்டதாக ஒரு மாயை எற்படுத்தி உள்ளனர். இப்பின்னடைவை நிவர்த்தி செய்வதன் ஊடாக (இவர்கள் குறிப்பிட்ட நபர்களின் தத்துவத்தை பார்ப்பதன் உடாக) மீண்டும்... சோவியத்தில் இருந்த திரிபுவாதக் கட்சிக் ஊடாக சோசலிசத்தை நிறுவமுடியும் என வாதிட்டு உள்ளனர். இதில் இருந்தே முத லாளித்துவ மீட்சியை கேலி செய்துள்ளனர். குருசேவ் முதல் யெல்சின் வரை சோவியத்தில் முதலாளித்துவ மீட்சியை படிப்படியாக செய்து வருவதை கேலிக்குரியது எனச் சொல்லி, இதை பின்னடைவு எனக் கூறி, தமது திரிபை எவ் ஆதரமும் இன்றி திணித்துள்ளனர். ஒரு கட்சி, ஒரு நபர் கம்யூனிசக்கோட்பாட்டை கைவிட்டு திரிபை, முதலாளித்துவ பாதையை--- முன்னெடுக்க முடியும். இதை மனிதம் மறுப்பதன் ஊடாக இயங்கியலையும், சமூகத்தில் உள்ள முரண்பாட்டையும் மறுகின்றனர். இதை இல்லை என 'கேலிக்குரியது' என்ற விடயத்துக்கு உடாக மனிதம் மறுக்க முடியுமா?. இலங்கை கம்யூனிசக் கட்சி புதியஜனநாயக் கட்சி, இந்திய கம்யூனிசக் கட்சி, சீனக் கம்யூனிசக் கட்சி, சோவியத் கம்யூனிசக் கட்சி--என நீண்ட இக்கட்சிகள் மார்க்சியத்தை கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டு வருபவர்களே. இது கேலிக்குரியது அல்ல. இவைகள் பின்னடைவுகள் அல்ல. எதோ தத்துவக் குறைபாடுஎற்பட்டே (மனிதம் குறிப்பிட்ட நபர்களின் தத்துவம் ஆராயமல்) இவர்கள் பின்னடைவை எற்படுத்தினர்ராம். இவர்கள் முதலாளித்துவத்தை மீட்ட போது அக்காலத்தில் முன்வைத்த திட்டமே இவர்கள் மார்க்சியத்தை திரித்ததையும், முதலாளித்துவத்தை மீட்டதையும் தெளிவு படுத்தி விடுகின்றது. இதற்கு எதிராக காலத்துக்கு காலம் கம்யூனிஸ்ட்டுக்கள் (இவர்கள் மரபுவாதிகள் அல்ல) போராடி வருவதனால் தான் இன்றும் மார்க்சியம் உலகை சரியாக ஆராய்கின்றது. இந்த வகையில் 2ம் அகிலத்துக்கு எதிராக லெனினும், சோவியத்துக்கு எதிராக சீனவும், என அனைவ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம் காலத்துக்கு காலம் போராடினர். அப்போது போராடியவர்களை பழைமைவாதம், மரபுவாதிகள் ---என கூக்குரல் இட்டனர். மனிதம் ஆசிரியர்குழு 'முழுமையானது அல்ல' எனச் சொல்லி அந் நாடுகளின் கம்யூனிஸ் தலைமை, நடாத்தும் துரோகத் தனத்தை அங்கிகரிக்கின்றனர். அவர்கள் திரிக்க முடியாது, முதலாளித்துவத்தை மீட்க முடியாது என்ற வர்க்கத்தின் ஊடாக திரிபை பாதுகாத்து முதலாளித்துவத்தை காப்பாற்றுகின்றனர். இக் கட்டுரையில் ஒரே பந்தியில் நமக்கு இடையில் முரண்பட்டு உள்ளனர். "உலகில் அனைத்தும் புரட்சிக்கு பிந்திய சமுதாயங்களும் சோசலிச நிர்மானத்திலிருந்து விடுபட்டுள்ளன அல்லது இச் சமுதயங்களிலும் முதலாளித்துவ மீட்சி எற்பட்டு உள்ளது" என வாதிட்ட மனிதம் பின் "முதலாளித்துவ மீட்சி போன்ற காரணங்கள் இன்றைய சூழலில் முழுமையானது அல்ல." என ஒன்றுக்கு பின் ஒன்றாக முரண்பட்டும் உள்ளனர். நடந்தது முதலாளித்துவ மீட்சியே என்பதை சோவியத், சீன ---என அனைத்திலும் நடந்தது என்பதை முரன்பட்டுக் கொண்டே தங்களை அறியமல் எற்றுக் கொள்கின்றனர்.

"----நடை முறைத்தத்துவங்கள் வரை நீண்டு செல்லும் கட்சி அமைப்பு முறை, கட்சி நடைமுறை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இன்னும் சோசலிசக்கட்டுமானம் என அனைத்தும் ஆய்வுகள் விவாதங்கள் ஒளிவுமறைவு இன்றி எவ்வித அச்சமும் இன்றி மேற் கொள்ள வேண்டிய சூழலிது." எனக் கூறியுள்ளனர். உண்மையில் எந்த மார்க்சிட்டும் மார்க்சியத்தை எற்றுக் கொண்ட நாள் முதல் கடைப்பிடிப்பவையே. இவை இன்று மட்டும் சிறப்பாக செய்யும் சூழலிது என சொல்வதன் ஊடாக மார்க்சியத்தை கொச்சைப்படுத்தியுள்ளனர். மார்க்சியம் உருவான நாள் முதல் இவ் விவாதம் நடைபெறுவதையும், நாட்டுக்கு நாடு வேறுபட்ட தன்மையில் போராட்ட வடிவ மாறுபாட்டுடன், இவர்கள் அடிப்படை மார்க்சியத்தை கடைப்பிடிப்பதையும் மறுத்துள்ளனர். எதோ இயங்கிய லை மார்க்சியம் நிராகரித்து நிலையாக இருந்ததாகவும், வளராமல் செயல் அற்று போய் இருந்தமையால் இன்று ஆராய வேண்டிய சூழ்ல் எனச் சொல்லி மார்க்சியத்தை கொச்சைப்படுத்தி திரிபுபடுத்தியுள்ளனர். இன்று நடைபெறும் போராட்டங்கள் ஆகிய பிலிப்பைன்ஸ், பெரு, பர்மா, எல்சல்வோடோர் ---என அனைத்தும் மார்க்சியத்தை இயங்கியல் நிலையில் இருந்து விலக்கி, வெறும் நிலையானதாக கருதி செயற்படுவதாக மனிதம் கேலி செய்துள்ளனர். மார்க்சிட்டுகள் சமுகத்தை ஆய்வு செய்யும் போது மார்க்சியத்தின் இயங்கிய லை நிராகரித்து மார்க்சியத்தை திரிபுபடுத்துவதை கடுமையாக அம்பலப்படுத்தி வருகின்றனர். அப்படி அம்பலப்படுத்தும் போது முத்திரை குத்தல், சர்வாதிகாரம், ---என கூக்குரல் இடுகின்றனர். உ.*ம்மாக எம் மண்ணில் நடைபெ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றும் சம்பவங்களை விமர்சிக்கின்றோம். அதே நேரம் திரிபு படுத்தி வரும் தகவல்களை முற்றாக அம்பலப்படுத்துகின்றோம்.

"நூறு மலர்கள் மலரட்டும் நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்' என்பதற்கான சூழலில், இதில் கருத்துகள் கருத்துகளால் வெல்ல வேண்டும். பதிலாக முத்திரை குத்துகின்ற விமர்சனங்கள் மூலம் கருத்துகளை தடை செய்யக் கூடாது! என மனிதம் எம்மீது குற்றச் சாட்டை முன்வைத்துள்ளனர். நூறு கருத்துகள் முட்டி மோதட்டும் என்பதற்கான சூழலில் என்பது இன்றைய தமது நிலையை நியாயப் படுத்தவே. ஏன் எனில் கருத்துகள் மனித இனம் உள்ள வரை நூறு கருத்துகள் வெளி வந்த வண்ணமே இருக்கும். இங்கு சூழலில் என்பதற்கு ஊடாக கட்சி அமைப்பு உருவாகிய பின் நூறு கருத்துக்கு இடம் இல்லை என வாதிடும் வகையில் இவ் விவாதம் அமைந்துள்ளது. சமர் கூட மாற்றுக் கருத்தை பிரசுரிக்க தயாராக உள்ள அதேநேரம் அதன் மீது விமர்சனத்தை முன்வைக்க தயாராகவுள்ளோம். எமது விமர்சனம் முத்திரை குத்தியுள்ளதாக 'மனிதம் முந்தைய விமர்சனத்திலும் இன்றைய விமர்சனத்திலும் கூறியுள்ளனர். அப்படி முத்திரை குத்தல் எனில் ஆதரங்கள், விளக்கங்கள் ---- ஊடாக முன்வைக்கவேண்டும். இதை எமது முந்தைய விமர்சனத்திலும் சுட்டிக்காட்டினோம். ஆனால் அதுபற்றி இவ் விமர்சனத்தில் விளங்கப் படுத்தாமல், தமது முயலுக்கு மூன்று கால் தான் என வாசகர்மீது திணித்துள்ளனர். முதல் வரியில் கருத்துகளை கருத்துகளால் வெல்ல வேண்டும் எனச் சொன்னவர்கள் எமது விமர்சனத்தை முத்திரை குத்தல் எனச் சொல்லி அதற்கான விளக்கத்தை அளிக்க தவறியுள்ளனர். இது கட்டுரையில் பல விடயத்தில் கையாண்டு உள்ளனர். கட்டுரையை திரித்து இருந்தால் நாம் திரிபு என எமது கட்டுரையில் விளக்கங்கள் ஊடாக சொன்னோம். இது முத்திரை குத்தல் அல்ல. இது மார்க்சியத்தை திரித்து முதலாளித்துவத்துக்கு சேவகம் செய்யும் ஒரு கோட்பாடே. ஒரு சம்பவத்தை, கோட்பாட்டை திரித்து கூறினால் அது திரிபு தானே. இது முத்திரை குத்தல் எனச் சொன்னால் வால் வைத்த திரிபை அங்கிகரிக்கக் கோருவதே. இதைத் தான் மனிதம் செய்கின்றனர். ஒரு முதலாளித்துவவாதியே (ஏன் பாசிசப் புலிகளே) தமக்கெதிராகக் கருத்து வரும் போது எதிர்த்து போராடுகின்றனர். இந்நிலையை கரிகாலன் முன்னெடுக்கவோ, மனிதம் முன்னெடுக்கவோ கருத்துப்பலம் இன்மையே கருத்துக் கூர்மையும், முத்திரைகுத்தல் (ஆதாரமின்றி) எனச் சொல்லி இதைத் 'தாக்குதலா? விமர்சனமா?' என பிரச்சனையைத் திசை திருப்பியுள்ளனர். உங்களுக்குக் கருத்துத் தடை இல்லை தானே. முடிவெடுக்க முடிந்து திரிபு தொடர்பாக நாம் சொன்ன திரிபு என்ற வாதத்திற்கெதிராக வாதிட்டிருக்கலாம் தானே.

"பொதுவாக 'திரிபுவாதம்' போன்ற பதப்பிரயோகங்களை வன்மையாக மறுக்கின்றோம்". எனில் ஏன் புலிகளை பாசிச சக்திகள் என்ற பதங்களை பயன்படுத்துகின்றீர்கள். தேசியசக்திகள் என

www.tamilarangam.net

வாதிடும் ஒரு பகுதியினர் (முற்போக்கு பிரிவினர்) புலிகளின் நடவடிக்கையை பாசிசம் என்பதை எற்கவில்லை. எகாதிபத்தியம், முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம்...என்ற பதங்களையும் பயன் படுத்துவதை கூட மறுக்கின்றீர்களா? அப்படி இல்லை எனில், ஏன் திரிபு போன்ற பதங்களை மட்டும் எதிர்கின்றீர்கள். இவை எல்லாம் ஒவ்வொரு கருத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதால் பயன் படுத்தப் படுவைதான். சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம், பிரமுகர்தனம், பச்சோந்தி ....போன்ற பதங்களையும் எற்றுக்கொள்ளவில்லையா? எற்றுக் கொள்ளவில்லை எனில் மேற் கூறிய நபர்கள் கட்சியில் இருக்க முடியாது என வாதிடும் பலம் உங்களுக்கு உண்டா? எற்றுக் கொள்ளின் ஏன் திரிபை மட்டும் எதிர்கின்றீர்கள். இது அடிப்படையில் திரிபை பாதுகாத்து முதலாளித்துவத்தையும், சீராழிந்த பண்பாட்டையும் (திரித்து பரப்புவோர்) அங்கீகரிப்பதாகும். இதை ஒ[illegible] பழமைவாதம், மரபுவாதி போன்ற பதங்களுக்கு 'உரியவர்கள் கேலிக்குரியவர்கள் ஆக தெரியும் உங்களுக்கு அவைகளை ஆதரங்கள், விளக்கங்கள் உடன் வைக்கும் பண்பாடு தெரியாமல் போனது ஏன்?. மனிதத்துக்கு மதிப்பீடு என்பது அவ்வளவு எளிமையானதா என்ன?.

"இக் கருத்துகளைப் (இன்றைய சர்வதேசக் நூல்) புரிந்து கொள்வதற்கு முதலில் மார்க்சிய இயங்கியல் விதியினை ஒருவர் வேறும் விளங்கிக் கொண்டு மார்க்சியத்தையொரு மரபாகக் கருதுகின்ற அணுகுமுறையிலிருந்து சமர் தன்னை விடுத்துக் கொள்ள வேண்டும்." என்ற வேண்டு கோளுடன் சமரின்...." நன்றி. இப்படி சொன்னவர்கள் நாம் இன்றைய சூழலுடன் இயங்கியலைக் கைவிட்டு மரபாகப் பயன்படுத்தியதை ஆதாரங்கள் விளக்கங்களுடன் புரிய வைத்திருக்க வேண்டும். என்ன மனிதத்திற்கு மதிப்பீடுகள் கற்பனையில் உருவாக்கி அதை மேதாவித்தனத்துடன் கூறி வாசகர்களுக்கு திணிப்பாக (ஆதாரங்கள் இன்றி) புகுத்திவிட முயல்கின்றனர். நாம் அன்றைய சர்வதேச நிலையை இயங்கியலுக்கு அமைய எப்படிப் புரிந்து கொள்ளவில்லையென புரிய வைக்க முடியாத நிலையில் எமது திரிபை (இங்கு கரிகாலனின் வாதம் திரிபு இல்லையென மறுத்து வாதிடுகின்றது) திணிப்பாக வெளியிட்டுள்ளனர். இன்றைய சர்வதேச நிலைமையில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் மாவோ,......போன்றோரின் மார்க்ஸிச வாதங்கள் எப்படித் தவறாகியுள்ளது என்பதை கரிகாலன், சிவகுமாரன், மனிதம் ஆசிரியர் குழு என எவரும் ஆதாரங்கள் விளக்கங்களுடன் புரிய வைக்க முடியாதவர்களாக இருந்து கொண்டு, இவர்களின் வாதங்களைப் பழமைவாதம், மரபு எனக் கூறி அவைகளைக் கேலிக்குரியதாக்கியது மட்டுமின்றி ஆதாரங்களற்ற தமது கருத்தைத் திணிப்பாக நிகழ்த்தியுள்ளனர். மனிதத்தின் விவாதத்தில் வார்த்தைகளுக்கப்பால்

www.tamilarangam.net

எந்த விளக்கங்களோ, ஆதாரங்களோ கிடையாது. எந்தஆதாரங்களுமின்றி மார்க்சிசத்தை மரபாக பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டுபவர்கள், மார்க்சிசம் இயங்கியல் அடிப்படையில் இயங்குவதை ஏற்றுக் கொண்டவர்களல்லர். மார்க்சிசத்தை மரபாகப்பயன்படுத்துவதாகக் கூறும் இவர்கள் மார்க்சிசம் சரியான பக்கத்தில் வளர்வதைக் கண்டு இபபடியொரு குற்றச்சாட்டை வைத்தபடி வர்க்கப் போராட்டத்திற்கெதிராக நின்று எதிர்ப்புரட்சிக்குச் சேவை செய்கின்றனர். இன்று உலகில் எழும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மார்க்சிசம் விளக்கும் வல்லமை கொண்டுள்ளது. அதற்குத் தீர்வையும் வைக்கும் வல்லமையும் உள்ளது. மனிதம் எம்மை, மரபாக பயன்படுத்துவதாக கூறியவர்கள் எந்த ஆதாரமோ, விளக்கமோ இன்றி கொச்சைத்தனமாக முன்வைத்துடன் கேலியும் செய்துள்ளனர். மனிதம் இவைக்கு ஆதாரம் வைக்கும் தகுதியை இழந்ததோ என்னவோ அதில் இருந்தே "சமருக்கு புரியவருகிறதோ இல்லையோ ---"எனச் சொல்லி தமது திமிப்பை நிகழ்த்தி திமிரை பாதுகாக்க முயன்று உள்ளனர். மனிதம் இப்புதிதகத்தில் வேறு ஒரு கட்டுரையில் பயன்படுத்தியது போல் "மதிப்பீடு என்பது அவ்வளவு எளிமையானதா, என்ன?" இதற்கு ஆதரங்கள், விளக்கங்கள் ---தேவை. இதுவே பத்திரிகை தர்மம் மட்டுமின்றி விமர்சன பண்பும் கூட.

"எமது அமைப்பு வடிவம் சமரைப் பொறுத்த வரையில் 'ஆச்சரியப்படக் கூடிய' ஒன்ருகவோ, அல்லது சில வேளை ஜீரணிக்க முடியாததாகக் கூட இருக்கலாம்!" என மனிதம் தமது அமைப்பு வடிவம் பற்றி குறிப்பிட்டு உள்ளனர். இவ் விமர்சனம் வர முன்பே மனிதத்தில் பிரசுரிக்க என (இன்னும் பிரசுரிக்கபபடவில்லை) அனுப்பிய எமது விமர்சனத்தில் மனிதம் குழு தொடர்பாக விளங்கபபடுத்தியுள்ளோம். இருந்தும் மீண்டும் ஆராய்வோம். மனிதத்தைப் பார்த்து ஆச்சரியப்படவோ, ஜீரணிக்க முடியாத வகையில் சமர் உலகை ஆராயும் தகுதியை இழந்து ஒற்றை வரியில் (உங்களைப் போல்) முடிவுகளை வைத்து விடுபவர்கள் அல்ல. கடந்த கால போரட்டத்தில் பல குழுக்கள் வீங்கி பல கருத்துடன் அரசுக்கு எதிராக மட்டும் இருந்த போது அவர்களை விமர்சித்தோம். அரசே எமது பிரதான எதிரி என சொன்னபடி சொந்த இயக்கத்துக்குள்ளும் தமக்கு இடையிலும் விமர்சனத்தை முன்வைக்க வராமையும், தமது கருத்துகளை பகிரங்கமாக சொல்லாமையும் (அமைப்புக்குள் சில குழுக்கள், தனிப்பட்ட பலர் மாறுப்பட்ட பல கருத்தை கூறினர்) மனிதத்துக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. நாம் அன்றும் இன்றும் இப்போக்கை கண்டு ஆச்சரியப்படவில்லை. அதுபோல் ஜீரணிக்க முடியாது அவதியுறவுமில்லை. இவர்களின் அழிவை உணர்ந்தபோதும் நாம் இவர்களுக்கு எதிராக அணிதிரட்டுவதில் பலதவறுகளை (முரண்பாடுகளுடன்) இழைத்தோம். மனிதம் குழு சிறப்பாக PLOT மை

www.tamilarangam.net

ஞாபகப்படுத்துகின்றது. PLOT க்கும், மனிதத்துக்கும் உள்ள ஒரே வேறுபாடு ஆயுதம் எந்தாமையும், அதன் வெளிப்பாடாக அதன் தன்மையை (வேறுபட்ட கருத்து உடையோர்) வெளிக்காட்டமையுமே. மற்றப்படி PLOT க்குள் மேலே இருந்து கீழ்வரை வேறுபட்ட பல கருத்துகள் இருந்ததே அதுபோல் மனிதமும் உள்ளது. PLOT இல் பிற்போக்குகள் படிப்படியாக முன்னேறி PLOTயை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது போல் மனிதத்துக்குள் திரிபுவாதம் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இந்நிலையில் தமக்கிடையில் மாறுபட்ட கருத்துகள் உள்ளனவாம். அதனால் கருத்துக் கூறமுடியாதாம். ஒரு பத்திரிகை என்பது ஒரு ஆசிரியர் குழுவைக் கொண்டது. இவர்கள் இச்சமூகத்தில் நிகழும் பிரச்சனைகள் மீது கருத்து கூறவேண்டும். அதுவே பத்திரிகை. இல்லாதபோது பலரை திருப்திப்படுத்த (PLOT போல்) யார் யாருக்கு உடன்பாடு இல்லையோ அவைகளை கைவிட்டு சமரசத்தை நீடுவதே. இது EROS, மற்ற இயக்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டங்களில் கருத்தில்லை (முடிவில்லை) எனக் கூறியபடி சந்தர்ப்பவாதமாக நடந்ததை மனிதம் மீண்டும் நினைவுபடுத்துகின்றனர். இங்கு மனிதம் EROS, PLOT க்குஇடையில் சிலசில, விடயங்கள் வேறுபட்ட போதும் விடயம் ஒன்றே. அன்று அரசு எதிரி எனக்கூறி தமக்கு இடையில் ஐக்கியம் போல் நடித்தனர். இல்லை போல் மனிதம் அரசு, புலிகள் போன்ற ஒரு இரு விடயத்தில் உடன்பட்டபடி மற்றைய கருத்துகளை விரும்பியபடி (PLOTயை போல்) யாரும் எதையும் கூற முடியும் என்கின்றனர். இதில் இருந்தே மனிதம் முடிவு எடுக்க முடியதாம். இதை சிறப்பாக வேறு ஒரு உதாரணம் மூலம் பார்ப்போம். ஒரு குடும்பத்தில் ஒரு ஆண் சமூக விடுதலைக்கு என போராடும் போது, மனைவி, குடும்பம் தடுப்பார்கள் ஆயின் குடும்பம் ஒத்த முடிவுக்கு வரும் வரை போராடக் கூடாதா? (மனிதம் கருத்துச் சொல்லக்கூடாதா?) இதே போல் ஒரு பெண் பெண்விடுதலைக்கு போராட முற்படும் போது கணவன், குடும்பம் தடுப்பார்களயின் அப் பெண் போராடக் கூடாதா?. இதில் மனிதத்தின் நிலை போராடக் கூடாது என்பதே. ஏன் மனிதம் குறிப்பிட்ட விடயங்களில் ஒரு பொது முடிவுக்கு (கருத்து முரண்பாடு அற்ற) வந்துவிட முடியுமா?. அப்படி வந்துவிட முடியுமாயின் மாற்றுக் கருத்தை மறுக்கும் வாதமே. நீங்கள் உடன்பாட்டுக்கு வந்த ஒரு விடயத்தில் முரண்பாடு ஏற்படின் அதை மனிதம் சார்பாக கருத்து கூற மாட்டீர்கள் தானே. இவை எல்லாம் ஒருபக்கத்தில் கருத்து மறுப்பாக பரிணமிக்கின்றது. நீங்கள் முடிவுக்கு வராத விடயங்களில் ஒரு பொது முடிவை அடைந்த பின் ஒரு போராட்டத்துக்கு தலைமை தாங்குகின்றீர்கள் என வைப்போம். அப்போது புதிய பல பிரச்சனைகள் உருவாகியபடி (இதுவே இயங்கியல்) இருக்கும். அப்போது உடனடி தீர்வுக்கு வரும்போது எமக்கு முரன்பாடு எனக் கூறி (உங்கள் வாதப்படி) வழிகாட்ட தவறின் போராட்ட சக்திகள் மட்டுமின்றி மக்களும் அழிக்கப்படுவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவைதான் மரபு வாதம். பிரச்சனையை நிலையானதாக கருதுவது ம், புதிய பிரச்சனைகள் உருவாகாது எனப்பார்ப்பதும் இயங்கிய லை நிராகரிப்பதாகும். இன்று உள்ள பிரச்சனை நாளை மறைந்து போகலாம். பிரச்சனை உள்ள நேரம் கருத்துக் கூற மறுப்பது இயங்கியலை எதிர்க்கமையே. மனிதர்கள் உள்ள வரை பிரச்சனைகள் தோன்றும் முரண்பாடுகள் உருவாகும். அவைகளுக்கு அக்காலத்தில் கருத்தும் தீர்வும் சொல்லாமல் சந்தர்ப்பவாதமாக இயங்குவது, பிரச்சனைகள் தோன்றிக் கொண்டு இருக்கும் வரை மனிதம் இந்நிலையையே தொடரமுடியும். மாறிக் கொண்டு இருக்கும் சமுகத்தில் எழும் பிரச்சனைகளுக்கு முடிவு சொல்ல முடியாத சந்தர்ப்பவாதிகள் ஒருக்கலும் போராட்டத்துக்கு தலைமை தாங்க முடியாது. நீங்கள் குறிப்பிட்டது போல் உங்களை நாம் கட்சியாக பார்க்கவில்லை. உலகில் உருவாகும் எப்பிரச்சனைக்கும் வர்க்க மூலம் உண்டு. உங்கள் குழுவுக்கும் வர்க்கத்தன்மை உண்டு. அதில் எந்த வர்க்கம் வெல்லும் என்பது கருத்துச் சொல்லும் போது வெளிப்படும். அப்போது மனிதம் PLOT போல் சிதறும். கருத்து கூறமல் சந்தர்ப்பவாதப் போக்கை கடைப்பிடித்தால் சிலர் விரக்தியடைவர், சிலர் பிரமுகராவர், சிலர் எல்லாவற்றையும் கைவிடுவர் .... என தொடரும். நாம் கருத்து கூறும்படி கோருவது எதிர்கால தலைமையை உருவாக்க அணிகளின் சேர்க்கையை ஊக்குவிக்கவே, இங்கு மாற்றுக் கருத்தை பிரசுரிக்கும் போது பெரும்பான்மை, சிறுபான்மை எனச் சொல்வதன் ஊடாக, எல்லாக் கருத்தின் மீதும் பெரும்பான்மை தனது கருத்தை கூறவேண்டும். இதுவே போராட்டத்தை விரும்பும் ஒரு பத்திரிகையின் கடைமை. இது உங்கள் பார்வையில் "சமரின் அடம்பிடிக்கும் போக்கு" ஆக மட்டுமே தெரிகின்றது.

"ஒரு சிலர் மட்டும் சேர்ந்து பத்திரிகை விடும்போது அல்லது ஒரு குழுவின் ஒரு சிலரின் கருத்துகள் மட்டும் மேலாண்மை செலுத்தும் பட்டசத்தில் ஒவ்வொரு கட்டுரை சார்பாகவும் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்." மனிதத்தின் இவ்வாதம் தவறானது. மனிதம் கருதுவது போல் கருத்துக் கூறுபவர்கள் ஒரு சிலர் சேர்ந்து பத்திரிகை நடத்துபவர்கள் மட்டுமல்ல. ஒரு பெரிய கட்சி, பல நபர்கள் கொண்ட ஒரு வடிவம் கூட கருத்து கூறமுடியும். இது வரலாறு முழுக்க நீண்டு உள்ளது. மற்றும் ஒரு சிலரின் கருத்து மேலாண்மை செலுத்துவது என்பது அவர்களின் கருத்தை அவர்களின் அமைப்பு எற்பதிலே தான். இது எல்லா அமைப்பு வடிவத்துக்கும் பொருந்தும். எல்லா அமைப்பு வடிவத்திலும் கருத்து மேலாண்மை இருக்கும். அதுவே பெரும்பாண்மை. இதை நிராகரிப்பவர்கள் அராஜகவாதிகளாக. (மார்க்சியத்தில் அராஜகம் என்ற சொல்லின் அர்த்தில்) இருக்கின்றனர். மனிதம் அராஜகவாதிகளாக அமைப்பு வடிவ ஒழுங்கை நிராகரிக்கின்றனர். தமக்கு கருத்துக் கூறுவது பொரு

www.tamilarangam.net

ந்தவில்லை எனவாதிடின் அவர்கள் சமரசவாதியாகவும் உள்ளனர். மனிதம் இதழில் வெளிவந்த தேசிய சக்திகள் தொடர்பான நான்கு கட்டுரைகளையும் பார்ப்போம். இதில் இரு கட்டுரை திரிபை திணிப்பாக நிகழ்த்தியுள்ளனர். சிவசேகரத்தின் கட்டுரை பிரச்சனையில் இருந்து விலகி பாசிசம் என்ற சொற்பிரயோகத்தின் மீது விவாதித்துள்ளனர். ஈழத்தில் இருந்து வந்தகட்டுரை தலைப்பை விட்டு விலகி புதிய வேறு பிரச்சனைக்குள் சென்றுயுள்ளது. அவரின் ஒரு, இரு, வாதத்தை பார்ப்போம். "தமிழ் மார்க்சிட்டுக்கள், மத்தியில் தமிழ் ஈழப் போராட்டத்திற்கூடாகவே எல்லாப் பிரச்சனைகளையும் பார்க்கும் குறுகிய பார்வை காணப்படுகிறது. அதனால் தான் சிங்கள மார்க்சிட்டுகளை பற்றி வெறுமனே நையாண்டி பண்ணும் "என தொடர்கிறார். இங்கு சரியான சிங்கள மார்க்சிட்டுகள் எனக் கூறி எந்த பிழைவிடாத மார்க்சிட்டுக்கு வக்காலத்துவாங்குகின்றார்?. "குறிப்பாக தமிழீழப் போராட்டத்தினூடாக மார்க்சியத்துக்கு அறிமுகமான எமது தமிழ் இளைஞர்கள்" என அவர் திமிராக இருந்தபடி நக்கலடித்துள்ளார். இங்கு மார்க்சியத்துக்கு அவர் போன்ற பழம் பெரும் புத்திஜீவிகளே இருக்க முடியும் எனகூறி உள்ளார். கடந்த 15 வருடப் போராட்டத்தில் காணாமல் போன இவர் மீண்டும் புதிய மார்க்சிட்டுகள் என நக்கல் வேறு. இப்படி பல, அவை தனியான ஒரு பெரிய கட்டுரையாகவே அமையும். இவர்களின் கட்டுரைகள் கருத்துகளை கருத்துகளால் வெல்லும் தன்மையில் சமர், தூண்டில், உயிர்ப்பு கருத்துகளை விளக்கங்கள் ஆதாரங்கள் ... உடன் ஆராயமையை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இதில் தூண்டில், சமர் இடையில் தம்தம் கருத்துக்களை விளக்கங்கள் உடன் ஆராய்ந்துயுள்ளனர். உயிர்ப்பு ஓரளவு ஆராய்ந்த போதும் மேல் எழுந்த வாரியாக அமைந்துள்ளது. இந்நிலையில் மனித்தில் வெளிவந்த கருத்துக்காக (ஆதாரம்மற்ற) மனிதம் வாதிட முற்படுவது (கருத்து முரண்பாடு எனக் கூறியபடி) திரிபை பாதுகாத்தபடி தமது சந்தர்ப்பவாதத்தை பேணவே.

ஒரு கட்டுரையில் 'கருத்தடல்' என தலைப்பிட்டால் அதில் ஆசிரியர்குழுவுக்கு பொறுப்பில்லை என வாதிட்டுள்ளனர். இங்கு மனிதம் பொறுப்பு ஏற்பது வழக்கு, வன்முறை, திரிபை பாதுகாத்தல்.. போன்றவைக்கு மட்டுமே. இங்கு கருத்துக்கு அல்ல. 'கருத்தாடல்' எனபோட்ட சிவகுமாரனின் கட்டுரையில் கருத்தாடல் நிராகரித்ததை அங்கீகரித்துள்ளனர். இதை மனிதத்துக்கு எழுதிய விமர்சனத்தில் (மனிதத்தில் பிரசுரிக்க) விளக்கியுள்ளோம். நாம் எல்லா வகையான கருத்தையும் பிரசுரிக்க மட்டோம் என மனிதம் 13 ஆசிரியர் தலையங்கத்தில் கூறியவர்கள் எந்த வகையான கருத்தை பிரசுரிப்பீர்கள் என்பதற்கான மனித்தின் குறைந்த பட்ச வேலைத் திட்டத்தை முன்வைக்கவில்லை. இதில் எல்லாக் கருத்தையும் பிரசுரிக்க மாட்டோம் என்ற வாதத்தின் உடாக பிரசுரிக்கும் கருத்துக்கு ஏ

www.tamilarangam.net

தோ ஒரு வகையில் மனிதம் பொறுப்பு எற்கின்றது. பிரச்சனை என வரும் போது எம் கருத்தில்லை, அது கரிகாலனின் கருத்து எனக் கூறி நழுவி விடுவதன் ஊடாக அக்கருத்தில் உள்ள திரிபை பாதுக்காக அதை கருத்தில்லை எனக் கூறி வாக்கலத்து வாங்கியுள்ளனர். திரிபு என்பது ஒரு கருத்தின் வகையே. தமக்கு பொறுப்பில்லை அது கரிகாலன் கட்டுரையென சொன்னவர்கள் இதே மனிதத்தில் 'சக்தி' தொடர்பான ஒரு விமர்சனத்தை வைத்துள்ளனர். கருக்கலைப்பு தொடர்பாக சக்தியில் ஒரு பெண்ணின் கருத்தை (மனிதத்தின் கரிகாலன் கட்டுரை போல்) ஒட்டி சக்தியின் மீது (மனிதத்தின் பத்திரிகை தர்மத்தை) குற்றச் சாட்டை சுமத்தியுள்ளனர். இது எந்த (மனிதத்தின் பாணியில்) பத்திரிகை தர்மம். உண்மை ஒன்றாக இருக்க, (தம்மை அறியாமல் வெளியிடுவது) தமது சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்த முனைவதே சமர் மீதான மனிதத்தின் நிலை. இதே போன்றே கருக்கலைப்பு தொடர்பாக (உண்மை நிலையை தங்களை அறியாமல் மனிதம் 16இல் கூறியவர்கள்) சொன்னவர்கள் இன்று அதற்கு எதிராக கருத்துக் கூறியுள்ளனர். இது தொடர்பாக ஒரு விவாதம் நிகழ்ந்து வரும் இன்றைய நிலையில் ஒற்றை வரியில் ஆ.கு முடிவைச் சொல்லி திரிப்பை நிகழ்த்தியுள்ளனர். மனிதத்துக்கு ஆதாரங்கள், விளக்கங்கள் தேவையில்லை. "கருவைச் சுமப்பதுடன் உடல், உளரீதியில் அனுபவிப்பது பெண்கள் தான் என்பதால் கருக்கலைப்பு சுதந்திரம் பெண்களின் உரிமை என்பதே எமது நிலைப்பாடு" அப்படியாயின் பெண் உடல், உள சம்பந்தப்பட்ட விபச்சாரம், குழந்தைக்கு பால் கொடாமையை கூட மனிதம் அங்கீகரிக்கின்றனர். இதே போல் உடல், உள சம்பந்தப்பட்ட தன்னிச்சை சேர்க்கையை கூட மனிதம் அங்கீகரிக்கின்றனர். கருகலைப்பு தொடர்பாக சமர், சக்தியில் வெளிவந்த வெளிவரயுள்ள கருத்துகளை ஒட்டி பதிலளிக்க கோரும் அதே நேரம் திரிப்பை நிகழ்த்துவதை (விளக்கமற்ற) கைவிடக் கோருகின்றோம்.

"தமக்கு இருந்த பொறுப்பு உணர்வு காரணமாக 'திரிபுவாதம்' என்ற முத்திரை குத்தல் பிரயோகத்தை வன்மையாக மறுக்கின்றோம்!" என மனிதம் முழுதாக வட்டுவிட்டு என்ற நிலையை நியாயப்படுத்தியுள்ளனர். இவை தொடர்பாகவும் நாம் மேலே விவாதித்துள்ளோம். இதில் கருத்து வேறு விளைவு வேறென, ஒன்றுடன் ஒன்று சம்பந்தம் இல்லாததாக பிரச்சனையை காட்ட முற்பட்டுள்ளனர். கருத்தும் விளைவும் வேறு வேறானது அல்ல. இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததே. இரண்டும் தனித்தனியாக பார்ப்பது என்பது கருத்து சொல்ல சில மேதாவிகள் இருப்பர், நடைமுறைப்படுத்த சில அப்பாவிகள் இருப்பர். நடைமுறைப் படுத்தி பெறப்படும் வெற்றியை மேதாவிகள் கைப்பற்றுவர். இதுவே மனிதத்தின் நிலை. கருத்தின் தன்மையை அது வெளிப்படுத்திய பரிணமத்தின் விளைவே திரிபு. இதே இடத்தில் இதே மனிதத்தில் வெளியாகிய தமயந்தியின் சிறுகதை

www.tamilarangam.net

யான "கேள்விக்குறிகளான்" என்ற கதையை பார்ப்போம். கதையில் தமையந்தி பயன்படுத்திய சந்தர்ப்பவாதியோட, ஒருபச்சோந்தியோட என்ற சொற்பிரயோகங்களை மனிதம் ஏன் வன்மையாக கண்டிக்கவில்லை. இவை கூட முத்திரை குத்தல் (உங்கள் பார்வையில்) தானே. தமையந்தி கதையாக எழுதிய விடயத்தை நாம் நேரடியாக கருத்துகள் மீது பயன்படுத்துகின்றோம். தமையந்தியின் கதையில் கற்பனைப்பாத்திரத்தில் உள்ளவை எமது விமர்சனத்தில் நேரடியாக அமைந்துள்ளது. இரண்டும் ஒரே விடயத்தைத்தான் சொல்கின்றது. ஒன்று கதை மற்றையது நேரடி விமர்சனம். இவை ஏன் மனிதத்துக்கு புரியாமல் போனது. இக் கதையில் ஒரு பெண் பற்றி திரித்துக் கூறிய து திரிபாக உள்ளது. நபர் சந்தர்ப்பவாதியாக பச்சோந்தியாக நடந்தபடி ஒரு பெண் பற்றி திரித்துக் கூறும் முற்போக்கின் தன்மை அம்பலப்படுத்துகிறார். இதில் முற்போக்கு என்பது கதையில் பயன்படுத்தியது போல் முற்போக்கு எனச் சொல்லித்திரியும் அணியில் (மனிதத்துக்குள்ளும் இருப்பர்) சந்தர்ப்பவாதமும் .....இருப்பர். அவர்களை திரிபு, சந்தர்ப்பவாதம்..... எனச் சொல்வது எல்லாம் முத்திரை குத்தல்லாக இருப்பது இல்லை. இவைகளை ஆதாரங்கள், விளக்கங்கள் உடன் புரிய வைக்கும் போது ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதை மறுக்கும் மனிதம் 'திரிபை பாதுகாத்து தனது சந்தர்ப்பவாத நிலையை பேணுகின்றனர்.

வசனத்தை பிரித்து எடுத்து கருத்தை சிதைத்துள்ளது என மீண்டும் எந்த ஆதாரத்தையும் முன்வைக்காமல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர். இப்படிச் சொன்னவர்கள் மாவோவின் மேற்கோளை வசனத்தை பிரித்தெடுத்து கருத்தை சிதைத்ததை மேற்கோள் ஆராயும் போது விளக்குகின்றோம். நாம் கடந்த விமர்சனத்தில் ஆதாரத்தை முன்வைக்க கோரியும் முன்வைக்காமல் மீண்டும் இதை ஒரு குற்றச் சாட்டாக முன்வைத்துள்ளனர். எமது கடந்த விமர்சனத்தில் கூறினோம் அப்படி சிதைத்ததை ஆதாரமாக வைத்தால் நாம் சுயவிமர்சனம் செய்ய தயாராக உள்ளோம் என கூறியிருந்தோம். மீண்டும் இதை கூறும் நாம் ஆதாரமாக வைக்க கோரும் அதே நேரம் திரிபுகளை கைவிடக் கோருகின்றோம். அப்படி ஆதாரமாக வைக்காத வரை இது விமர்சனத்தை தடை செய்யும் நோக்கில், திரிபை பாதுகாக்கும் நோக்கில் செய்யப்படும் திசைதிருப்பலே.

எதிர்நிலைக்கு செல்லல் என்பது முற்போக்கு, பிற்போக்கு என இரண்டாக பிரியமுடியும். இதில் பிற்போக்கு பகுதியில் புலிகள் இருப்பதால் எதிரணிக்குள் அடங்கிவிடுகின்றனர். இங்கு நடுநிலை எனச் சொல்பவர்கள் இதில் எதோ ஒரு பகுதியை தெரிந்தோ, தெரியாமலோ ஆதரிப்பவர்களே. இது விசனத்துக்கு (மனிதம் பார்ப்பது போல்) உரியது அல்ல. உளவியல் சம்பந்தப்பட்டது என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச் சொல்லி சமரசத்தை நிலைநிறுத்த முன்னெடுத்த வாதமே. எப்
பிரச்சனையும் உளவியலுக்கு உள்ளாகின்றது. அது அல்லது இது என
உளவியலுக்கு உட்பட்டு முடிவுக்கு வருகின்றது. "வெறுப்பூட்டும் விம
ர்சனத்துக்கு உடாக எதிர்நிலைக்கு தள்ளுவதை தாம் குறிப்பிடுவ
தாக" மனிதம் கூறிய இக் கூற்றில் எந்த வாதமும் ஒருவருக்கு பி
டிக்கும் ஒருவருக்கு பிடிக்காது. வாதத்தின் கருத்தை பார்க்கும்
தன்மையை இழந்த எவருக்கும் வெறுப்பூட்டுவதாகவே அமையும்.
அப்படியானவர்களை கருத்தை பார்க்கும் படியே கோரமுடியும்.
அவரின் நிலைக்கு கீழ் இறங்கி( மனிதம் போல்) வெறுப்பூட்டுவதாக
கூறியபடி கருத்தை ஆராய்யாமல் செல்பவர்கள் எதிர் நிலைக்கே
செல்வர். இவர்கள் இயல்பாக நீண்ட காலத்தில் பிற்போக்கை
கடைப்பிடிப்பர். எமது விமர்சனத்தில் உள்ள திரிபை திரிபு இல்லை
எனச் சொல்லும் மனிதம் ஆதாரங்கள், விளக்கங்கள்....உடாக
புரிய வைக்கமுடியாத நிலையில், இதை மரபு, வெறுப்பூட்டுவதா
க சொல்லி ஒற்றை வரியில் திரிபை பாதுகாத்து அதை திணித்து
விடுகின்றனர்.

மனிதம் மாவோவின் மேற்கோளை கருத்தைச் சிதைக்கும் வகை
யில் வசனத்தை பிரித்தெடுத்து, மேற்கோளை தலையங்கத்தில்
பயன்படுத்தியுள்ளனர். நாம் மாவோவின் மேற்கோளை முழுமை
யாக தருகின்றோம். இதில் கீழ் கோடிட்டது மட்டும் மனிதம் பி
ரசுரித்து கருத்தை சிதைத்து தலையங்கத்தில் பிரசுரித்து இருந்தன
ர். இதில் வசனத்தில் உள்ள மாற்றம் பற்றியது அல்ல. வசன மாற்
றத்திலுள்ள விடயம் ஒன்றே.
....பிழைகளை அம்பலப்படுத்தி, குறைபாடுகளை விமர்சனம்
செய்வதில் நமக்குள்ள நோக்கம் வைத்தியர் ஒருவர் நோய்க்குச்
சிகிச்சை அளிப்பது போல, நோயாளியைக் காப்பாற்றுவதற்கன்றி
அவர் இறப்பதற்குச் சிகிச்சை அளிப்பதல்ல. குடல் வால் நோயு
டைய ஒருவர், அதனை வைத்தியர் அவருடைய குடல்வாலை அகற்
றியதும் காப்பாற்றப்படுகிறார். தவறுகள் இழைத்த ஒருவர் சிகிச்
சைக்கு அஞ்சித் தனது நோயை மறைக்காத வரையில் அல்லது சி
கிச்சை செய்ய முடியாமல் போகுமளவுக்கு தனது பிழைகளில் அழு
த்தி நிற்காத வரையில், அவர் உண்மையாகவும் விசுவாசமாகவும்
குணப்படுத்தப்பட விரும்பி தனது தவறுகளைத் திருத்தும் வரையில்
நாம் அவரை வரவேற்று அவர் நல்ல ஒரு தோழராய் மாறுவத
ற்காக அவருடைய நோய்க்கு சிகிச்சை அளிக்கவேண்டும்.

—கட்சிநடைமுறையைச் சீர்செய்வோம்

மாவோ —1942—

நீங்கள் கருத்தைச் சிதைத்து வெளியிட்ட மேற்கோள் எல்லோருக்
கும் பயன்படுத்த முடியாது என்பதை மாவோ தெளிவாக கூறியுள்
ளர். அதை திரித்த மனிதம் பிழையான இடத்தில் இவ்மேற்கோளை

www.tamilarangam.net

பயன்படுத்தியுள்ளர். குறைபாடுகளை ,பிழைகளை எற்றுக் கொண்டு வருபவர் இடத்தில் மட்டும் இவ்வாதம் பயன்படமுடியும். தனது நிலையில் அழுத்தி நிற்காத வரையில் கையாள முடியும். தனது நோய்யை சொல்ல வேண்டும். விமர்சனத்துக்கு அஞ்சக் கூடாது. தனது நிலையை தெளிவான விளக்கங்கள், ஆதாரத்துடன் சொல்ல வேண்டும். மாற்றுக் கருத்தை தனது ஆதரத்துடன் , விளக்கத்துடன் விமர்சிக்க வேண்டும். இதைச் செய்யு மறுக்கும் போத அம்பலப்படுத்தி அக்கருத்தை அழிக்கவேண்டும். நீங்கள் பயன்படுத்திய (கருத்தை சிதைத்து) அவ்விடயத்தை மட்டும் பார்ப்போம். நோயாளி யார்? இங்கு நோயாளியே கிடையாது. இரண்டு வைத்தியர் மருந்துகொடுப்பது தொடர்பாக விவாதிக்கின்றனர். ஒரு மருந்து (எமது) வழமையாக கொடுத்து வருவது. அது நோய்யை தீர்க்கும் வல்லமை கொண்டது. (உ.*ம் முன்னைய சோவியத், முன்னைய சீன், பிலிப்பைன்ஸ் , பெரு....) இரண்டாவது வைத்தியரின் மருந்து முன்பே பலரைக் கொன்றது. ஆனால் கொல்லாது என்கிறார். (2ம் அகிலம், சோவியத்---) அவ் வைத்தியர் எமது மருந்து கொல்லும் என்கிறார். ஆனால் ஆதாரத்தை வைக்க முடியவில்லை. இரண்டாவது வைத்தியரின் மருந்து எமது மருந்துடன் கலந்து இருந்தமையால் சிலர் இறந்து போகின்றனர். (உ.*ம் சோவியத், சீனு முதாலளித்துவ மீட்பு....) உடனே எமது மருந்துதான் கொன்றது என மற்றய வைத்தியர் வாதிடுகின்றார். 2வது வைத்தியரின் மருந்தைக்கொண்ட சிலர் இறந்து போகின்றனர். (உ.*ம் திரிபைக் கொண்ட கட்சிகள்) இங்கு பிரச்சனை ஒரு வைத்தியர்க்கு உட்பட்ட மருந்துகள் அல்ல. இது அல்லது அது என தீர்மனிக்க. இரண்டு வேறுபட்ட வைத்தியர் இரண்டு வகையாக சிந்திக்கின்றனர். இதுவே பிரச்சனை. இதை பிழையான இடத்தில் பயன்படுத்தி கருத்தை சிதைத்துள்ளனர்.

இதில் சமர்நக்கு புரியுதோ இல் லையோ வசகர்களுக்கு (சமர், மனிதம்) நிச்சயம் புரியவரும் எனக்கூறி, தமது சமரசத்துடன் கூடிய திரிபை பாதுகாத்து திரிபாக புகுத்த முயன்றுயுள்ளனர். திரிபி லீலையென கருத்தியல் ரீதியில் வாதிடவக்கற்று, எம்மை மரபுவாதிகள் எனச் சொல்லி கேலி செய்ததுடன் தமது வாதம் (சந்தர்ப்பவாதம்) சமருக்கு புரியாதெனக் கூறி வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என சொல்லி கருத்தை பின்பக்க கதவுகள் மூலம் திணிக்க முயன்றுயுள்ளனர்.

குறிப்பு -- இக்கட்டுரையில் நாம் குறிப்பிட்டபடி மனிதத்துக்கு அனுப்பிய கட்டுரை எமக்கு மனிதம் ஆசிரியர் குழு திருப்பி அனுப்பியுள்ளனர். மனிதம் பிரசுரிக்க மறுத்த நிலையையொட்டி ஒரு கடிதத்தை இணைத்துள்ளனர். அக் கடிதம் உட்பட எமது கட்டுரை அடுத்த இதழ் 9இல் பிரசுரிக்கப்படும்.

www.tamilarangam.net

சீரழிந்த ஊழல் மலிந்த முதலாளித்துவ சர்வாதிகார ஜனநாயகம் இன்று உலகம் முழுவதும் அம்பலப்படுகின்றது.

1) இத்தாலி

கடந்த பல மாதங்களாக பூனிதக்கைகள் ( CLEAN HANDS/ PULITTO MANI ) மூலம் இத்தாலியில் மிகப் பெரிய அளவில் வெளிக் கொணரப்பட்ட ஊழல் நடவடிக்கைகள் முழு நாட்டையுமே ஆட்டம்காண வைத்துள்ளது. இந் நடவடிக்கை மூலம் அனைத்து அரசியல் கட்சிகளின் மாபெரும் தலைவர்கள் முதல் நாட்டின் பெரிய தனியார் அரசு ஸ்தாபனங்களின் தலைவர்கள் பல வியாபாரிகள் வரை லஞ்சம் ஊழல் நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுமுள்ளனர். இதுவரை ஊழல் பேர்வளிகள் எண்ணிக்கை 1000 ஐ தாண்டியுள்ளது. இன்று வரை குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் மிக முக்கியமானவர் இத்தாலிய சோசலிசக் கட்சியின் (முன்னைய) தலைவர் பெத்திநோகிருக்கி ஆவார். இவர் கட்சியின் நிதியை தவறாகக் கையாண்டு ஊழல் செய்தார் எனவும் களவாடப்பட்ட பொருட்களைப் பெற்றுக் கொண்டார் எனவும் குற்றம் சாட்டபட்டுள்ளார். இதனைத் தொடர்ந்தே தனது கட்சித் தலைவர் பதவியையும் துறந்துள்ளார். இதே போல் இவரது கட்சியைச் சேர்ந்த இன்றைய ஆட்சியில் நான்கு அமைச்சர்களும் பூனிதகரங்களின் விசாரணைக்குட்பட்டுள்தால் தமது பதவிகளை இழந்துள்ளனர். கடைசியாக பதவி இழந்தவர் நிதி அமைச்சர் கிளவ்டிமோ மாற்றெல்லியாவார். தனியார் துறையைப் பொறுத்தவரையில் ( FIAT ) பியட் கார் கொம்பனியின் சிரேஷ்ட தலைவர்கள் இருவரும் அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய OIL COMPANY ENI இன் தலைவரான கபிரியல் கலாகிறி, இதே கம்பனியில் சிரேஷ்ட மூன்று அதிகாரிகள் NUOVO PIGRONE என்ற எஞ்ஜினியரிங் கம்பனியின் தலைவர் பிராங்கே சியாத்தி என்போர் கடைசியாக குற்றம் சாட்டப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். அடுத்துக் குறிப்பிடத்தக்க அரசியல் தலைவர் றிப்பப்ளிக்கன் ( REPUBLICAN) கட்சியின் தலைவர் ஜோர்ஜியோ மால்பா ஆவார்.

இவ்வாறு முழு அமைப்பும் ஊழல், லஞ்சத்தால் உழுத்துப்போய் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுள்ள வேளையில் சோசலிசக் கட்சியின் தலைவரும் தற்போதைய அரசின் பிரதமருமான அமாத்தோ ( AMATO ) தனது சகாக்களைக் காப்பாற்றும் முயற்சியில் மக்களின் விருப்பத்திற்கு எதிராக செயல்பட முனைந்துள்ளதை செனட்சபை அங்கத்தவர்கள் முதல் பலரும் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

அவர் இந்த அதிகாரவர்க்க பெருச்சாளிகளைக் காப்பாற்றும் நோக்குடன் புதிய கேவலத்திற்குரிய அரசியல் ஆலோசனையை

www.tamilarangam.net

முன் மொழிந்துள்ளார். அதாவது அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் வியாபாரிகளும் தமது தவறுகளை எற்று பாவ மன்னிப்பு கேட்டுக் கொண்டு லஞ்சமாகப் பெற்றுக் கொண்டதைப் போல் முன்று மடங்கு பணத்தை திருப்பி கையளித்து பொதுவாழ்விலிருந்து விலகிக் கொண்டால் அவர்களுக்குரிய சிறைத்தண்டனையிலிருந்து மன்னிப்பு வழங்கப்படலாம், அத்துடன் அடுத்த யோசனை அரசியல் கட்சிகள் சட்டவிரோதமாகப் பெறும் கள்ளப் பணத்தை ஒரு குற்ற மற்ற செயலாகக் கருதுதல் ( ILLEGAL FINANCING POLITICAL PARTIES) ஆகும். ஆனால் இவ்விரு யோசனைகளுக்கும் எதிராக பரந்து பட்ட மக்களின் ஆத்திரமும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

இதன் வெளிப்பாடாக இவ் யோசனைகளுக்குரிய தனது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி லூயிஜி ஸ்காலி பரோ தனது கையெழுத்திடாமல் நிராகரித்துள்ளார். உண்மையில் தற்போதைய பிரதமர் அமர்த்தோவின் இந்த யோசனைகள் குற்றவாளிகளை காப்பாற்றும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே. இந்நடவடிக்கை பற்றிய தனது விமர்சனத்தில் THE ECONOMIST பத்திரிகை சாதாரணத் திருடர்களை விட இந்த கள்வர்கள் ஏன் மேலானவர்களாகக் கணிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டுமென வினா எழுப்பியுள்ளது. ஆனால் இதுதான் முதலாளித்துவ அமைப்பின் நடைமுறை என்பது ஒருஅப்பட்டமான உண்மை. ஏனெனில் எந்தவொரு அமைப்பும் அந்த வர்க்க சார்பானதாகவே செயற்படும்.

இதற்கொரு சிறந்த உதாரணம் இந்தியாவில் தமிழ் நாட்டில் மதுரையில் "வெண்மணி" என்ற கிராமத்தில் கூலி உயர்வு கேட்டுப் போராடிய ஏழைக்கூலி விவசாயிகளையும் பெண்கள், குழந்தைகள் வயோதிபர்களையும் ஒரு குடிசையினுள் (அவர்கள் பயந்து ஒளித்திருந்த) வைத்துக்கொழுத்திய சம்பவத்தில் நிலப்பிரபுக்களும் அவர்களின் அடியாட்களும் நீதிபதியால் அவர்கள் பணக்காரர்கள் நாகரீகமாக நடப்பவர்கள் எனவே அவர்கள் இவ்வாறன குற்றம் செய்திருக்க மாட்டார்கள் என்று கூறி விடுதலை செய்யப்பட்டனர். இன்று ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கைக் கூலிகளும், முன்னைநாள் திரிபுவாதிகளும் இன்றைய முதலாளித்துவ மீட்சியாளர்களும் இந்த உண்மையை மறைக்க முயல்கின்ற வேளையிலேயே இவ்வமைப்பின் உண்மைச் சொரூபம் தானாகவே அம்பலப்பட்டுப் போய் நிற்கின்றது.

2) <u>யப்பானின் அரசியல் பாவங்கள்</u>

ஐப்பானிய அரசியலில் ஞானபிதா ( GOD FATHER ) என அழைக்கப்படும் சின் கனேமாறு ( SHIN KANEMARU ) இன்று வரி ஏய்ப்பிற்காகவும், லஞ்சம் பெற்றதற்காகவும் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிசார் இவரது வீட்டிலும், அலுவலகத்திலும் தேடுத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல் நடத்திய போது 100 கில்லோகிரும் ( Kg ) நிறையான தங்கப் பாளங்களையும் 30 மில்லியின் US டோலர் பணமும் BONDS ஐயும் கைப்பற்றியுள்ளார்கள். மொத்தப் பெறுமதி 51 மில்லியின் US டொலர்களாகும். இதற்கு முன்னர் அன்றைய அரசியல் தலைவர் ( KAKUEI TANAKA ) தனுக்கா LOCKEED (AMERICAL AIRCRAFT MARKER) கம்பனியில் லஞ்சம் பெற்றதற்காகக் கைது செய்யப்பட்டார். என்பத நினைவு கூரத்தக்கது. ஆனாலும் தனுக்கா நீதி மன்றத்தால் லஞ்சக் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்ட போதும் அதற்கு அப்பீல் செய்து சிறை செல்லாததுடன் ஒரு குற்றவாளியாகவே இருந்து கொண்டு நாட்டை ஆண்டார். இந்த இருவருமே ஐப்பானைத் தொடர்ந்து ஆளும் கட்சியான LDP ( LIBERAL DEMOCRATIC PARTY ) இன் தலைவர்களாக இருந்து நாட்டை ஆண்டவர்கள். திரு கனேமாறு சென்ற வருடம் SAGAWA KYUBIN COMPANY இடம் 500 மில்லியின் யென் அன்பளிப்பாக பெற்றுக் கொண்டார். இந்த லஞ்சப் பணம் பெற்றதை கனேமாறு எற்றுக் கொண்டு ஆரம்ப தண்டமாக 2 இலட்சம் யென்களை செலுத்தி தப்பிக்கொள்ள முயற்சி செய்தார். ஆனால் மக்களின் எதிர்ப்பு மேலோங்கிய நிலையில் பாராளுமன்றத்திலிருந்து விலகிக் கொண்டார். பின்னர் கைது செய்யப்பட்டார்.

அன்று தனுக்கா தப்பிக் கொண்டார். ஆனால் இன்று கனேமாறு மாட்டிக் கொண்டார். இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது அதாவது ஐப்பானிய மக்கள் சிரழிந்த முதலாளித்துவத்தின் தலைவர்களையும் எகாதிபத்தியத்தின் அடிவருடிகளையும் இனியும் சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை. இன்று ஐப்பானில் இவர்களைப் போன்ற வரி ஏய்ப்பாளருக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இத்தாலியைப் போன்று பல நூற்றுக்கணக்கான அதிகாரவர்க்க ஊழல் பேர்வழிகள் அம்பலப்படலாம்.

3) <u>தென் கொரியா</u>

தென் கொரியாவின் தற்போதைய அதிபர் KING YOUNG SAM தனது அமைச்சரவையிலுள்ள மூவரை ஊழல் காரணங்களுக்காக பதவி நீக்கம் செய்துள்ளார். இதற்கு முன்னர் நாம் அமெரிக்காவின் வாட்டர் கேட், ஈரான் கேட் ஊழல்களையும், இந்திய அதிகாரவர்க்கத்தின் போபர்ஸ் ஊழலையும் அறிந்துள்ளோம்.

இவ்வாறு எகாதிபத்திய முதலாளித்துவ சமுகஅமைப்பு அம்பலப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில்தான் இவர்களின் கையாலாகத்தனமான செயலாக நவ நாஜிகள் அமைப்புகள் புதிய வேகத்தில்

www.tamilarangam.net

முளைத்துவருகின்றன. இது ஏகாதிபத்தியவாதிகள் தமது இருப்பை
நிலைநிறுத்துவதற்கு பாசிசத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்
றார்கள். இதை அனைத்துலக மக்களும் விழிப்புடன் இருந்து ஆரம்ப
த்திலிருந்தே முறியடிக்காவிட்டால் எதிர்காலம் பயங்கரமான அழி
வுகளை மனித சமூகத்திற்கு ஏற்படுத்திவிடும்.

தமிழ் ஈழ அரசியல் இயக்கங்களின் ஆரம்ப காலத்தில் அவர்களும்
இதே வர்க்க சார்பு நிலையையே கொண்டிருந்தனர். அன்று
பசி பட்டினியால் பத்து ரூபாய்களவு எடுத்தவர்களையும், கோழி
திருடியவர்களையும் கூட மரண தண்டனை வழங்கி கொலை செய்
தார்கள். அதே வேளை மக்களை கொள்ளையடித்த முதலாளிக
ளையும் பதுக்கல் காரர்களையும் பாதுகாத்தார்கள். அன்று பல
இயக்கங்களும் இந்த வழியில் செயற்பட்டாலும் ஒரு உறுதியான மு
தலாளித்துவ வர்க்க சார்பான நிலைப்பாட்டில் செயற்பட்டவர்க
ள் புலிகள் மட்டுமே. எனவே தான் தமிழ் தரகு முதலாளித்துவ
ம் அவர்களை தனக்குள் இன்று முற்று முழுதாக ஆக்கிரமித்துக்
கொண்டது.

— நிர்மலன் —

இது போன்ற சூழல் மற்றும் இன்று உலகு எங்கும் பல போராட்
டங்கள் நடைபெறுகின்றன. இப்படி நடை பெறும் போராட்டங்க
ளை சில பிழைப்புவாத கட்சிகள் ஒழுங்கு செய்வதும், சில தன்னிச்
சையாகவும் நிகழ்கின்றன. மூன்றாம் உலக நாடுகள் தவிர்ந்த மற்
றைய நாடுகளில் நடை பெறும் போராட்டங்கள் ஒரு சரியான
கமியூனிஸ் கட்சியின் தலைமையில் கீழ் நடைபெறவில்லை. தமது
நலன்களின் அடிப்படையில் இப் போராட்டத்தை நடத்துவதன் மூல
ம் இந் நாடுகளின் தொழிலாளர் வர்க்கம் ஏமாற்றப்படுகின்றனர்.

இன்று உலகில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடி இரண்டு வழிக
ளில் மட்டுமே தீர்க்க முடியும். ஒன்று உலகை மறுபடி பங்கிட ஒரு
உலக யுத்தத்தை நடத்துவது. இரண்டாவது ஒரு வர்க்க போராட்டத்
தை நடத்துவது. இன்று மேற்கு நாடுகளில் தீவிரம் அடைந்து வரு
ம் பொருளாதார நெருக்கடியை ஒரு சில உதாரணம் உடாக பா
ர்போம். பிரான்சில் மாசி மாதம் நடை பெற்ற தேர்தல் கா
லத்தில் 30 இலட்ச மாக இருந்த வேலை இல்லாத திண்டாட்டம்
மே மாதம் 35.5இலட்சம்மாக உயர்ந்துள்ளது. அதாவது மாத
ம் சாரசரியாக 45 ஆயிரம் பேர் வேலை இழக்கின்ற அதே
நேரம் வருடம் 60 ஆயிரம் தொழில் நிலையங்கள் முடப்படுகின்ற
ன. இங்கிலாந்தில் 30 இலட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். இது
ஐரோப்பாவை மட்டும்மல்ல உலகம் முழுமையாக இதுவே இன்றைய

www.tamilarangam.net

நிலை. இன்று அமெரிக்கா, யப்பான், ஐரோப்பாவுக்கு இடையில் நடைபெறும் பொருளாதார போராட்டம் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள சிறு தேசிய உற்பத்திகளை கூட முற்றாக அழித்து விடுகின்றனர். இந் நெருக்கடியை ஒரு உலக யுத்தத்தின் ஊடாக உலகை மறுபங்கீடு செய்வதன் மூலம் மீண்டும் சமநிலையடைய முயல்வர்.

இவ் நெருக்கடியையொட்டி சிலர் தற்காலிகமானது என வாதிடுகின்றனர். ஒரு உலக யுத்தமின்றி, வர்க்கப் போராட்டமின்றி இடைத் தீர்வை பெற முடியும் எனவாதிடுகின்றனர். இதில் எம்மவர்கள் தமது மேற்கத்தைய இருப்பிலான நம்பிக்கை சிதைந்து போகாதவகையில் கூறிக் கொள்ளும் சமாதானமே. இன்றைய பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகுவதை சுருக்கமாக பார்ப்போமாயின் இன்று அமெரிக்கா, ஐரோப்பா, யப்பானுக்கு, இடையில் தமது பொருட்களை விற்பதில் போட்டியிடுகின்றனர். முன்னைய சந்தைகள் போட்டியின் இடையில் சிக்கி சமநிலை உடைந்து மேலும் மேலும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மூன்றாம் உலக நாடுகளில் இருந்த தேசிய உற்பத்திகள் நிர்ப்பந்தம் மூலம் மூடப்பட்டு வருகின்றன. இவ் ஏகாதிபத்திய நாடுகளில் உற்பத்தி சந்தைப்படுத்த முடியாத வகையில் தேங்கிவிடுகின்றன. இன்னொருபக்கத்தில் மக்கள் பொருட்களை வாங்கும் சக்தியை இழந்து விடுகின்றனர். பொருட்களின் தேக்கம் உற்பத்தியின் குறைப்புடன் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். வேலை நீக்கமும், பொருட்களின் விலை அதிகரிப்பும் மேலும் மக்கள் வாங்கும் சக்தியை இழக்கின்றனர். இதனால் மேலும் உற்பத்தி தேக்கம் நிகழ்கின்றது. இதனால் மேலும் மேலும் உற்பத்தி குறைப்பும், வேலை நீக்கமும் சுழற்சியாக நிகழ்கின்ற போது மேலும் பொருளாதார நெருக்கடி தீவிரம் அடைகின்றது. இதனுடன் இவ் ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான போட்டி மேலும் தீவிரம்மடையச் செய்கின்றது. தொடரும் இந்நிலை சீர்திருத்த முடியாத வகையில் இன்று உலகை இராணுவப்பலம் கொண்டு அடக்க ஆரம்பித்துள்ளனர். இது மூன்றாம் உலக யுத்தத் தயாரிப்பின் ஆரம்பக் கட்டங்களே.

இன்றுள்ள உலகப்பொருளாதார நெருக்கடியில் ஒரு வர்க்கப் போராட்டம் சாத்தியமா? மேற்கு நாடுகளைப் பொறுத்த வரையில் ஒரு சரியான கம்யூனிஸ்ட் கட்சிகள் இல்லை என்றே அடித்துக் கூறலாம். சில நபர்கள் இருக்கின்ற இன்றையநிலையில் இவர்களின் அறைகூவல் எதிர் காலத்தில் சரியான கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கும் சந்தர்ப்பத்தை தீவிர பொருளாதார நெருக்கடியை உருவாக்கும். மூன்றாம் உலகநாடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என அனைத்திலும் சிறிய பெரிய சரியான

[illegible]ம் பக்கம் பார்க்கவும்

www.tamilarangam.net

## மார்க்சியவாதிகள் அறிவிலிகளாம், மூடர்களாம்

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நித்தியானந்தன் அஆஇ 13 இல் தற்கொலையை வீரம், தியாகம் எனக் கூறியது மட்டுமின்றி சமர் மீதும், மார்க்சியத்தை உயர்த்திப் பிடிப்பவர்கள் மீதும் பெயர் குறிப்பிடாத தாக்குதலை நடத்தியுள்ளார். இது போன்று சிவசேகரமும் சுவடுகள் 44 இலும், வேறு சஞ்சிகைகளிலும் மார்க்சியத்தின் மீது தாக்குதலை நடத்தியுள்ளார். தற்கொலையை ஒட்டிய கருத்தை ஆராயமுன்பு இவர்கள் மார்க்சியம் மீது தாக்குதல் நடத்தும் பாங்கினை ஆராய்வோம்.

நித்தி தனது கட்டுரையில் மார்க்சியத்தை உயர்த்திப் பிடிப்பவர்களை அறிவிலிகள், மூடர்கள் எனக் கூறி தனது மார்க்சிய விரோத உணர்வை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். எந்த மனிதனும் எந்த வர்க்கம் சார்பானவரோ அதன்மீது [illegible] உள்ளனர். ஒருவனைப் பார்த்து அறிவிலி, மூடர்கள் எனச் சொல்வது என்பது பேராசியர் மாருக்குரிய அகங்காரத்தன்மையிலிருந்தே. அது தான் பேராசியர்கள் தமது பெயருடன் 'பேராசிரியர்' என்ற பட்டத்தையும் இணைத்து மற்றவர்களை மந்தைகளாக இருக்க தாம் மேய்பர்களாக இருக்க விரும்புகின்றனர். நித்தியானந்தன் மார்க்சியத்திற்கெதிராக இன்றல்ல புலிகளில் இருந்த போதே தாக்குதலைத் தொடுத்தவர். அன்று 'செந்தோழர்கள்' எனக் கவிதைபாடியும் (வசைபாடி), பசைவாளிகள் என நையாண்டி செய்தும் (இவை விடுதலைப்புலிகளின் பத்திரிகையில் வெளிவந்தவை) பின் ராஜினிதிராணகமவின் நினைவுக் கூட்டத்தில் ஆரம்பத்தில் மார்க்சியத்தின் மீது தாக்குதலை நடத்தி....... தனது எதிர்புரட்சி வர்க்கத்திற்கு தொடர்ந்து சேவை செய்து வருகின்றார்.

இவர் விடுதலைப்புலிகளின் பத்திரிகையில் "[illegible]" 'செய்யாதே' எனப் பத்துக்கு மேற்பட்ட மாவோவின் கோட்பாட்டை அன்று போட்டு மக்களை ஏமாற்ற முனைந்தவர். இப்படிப்பல. பாரிஸ் இலக்கியச் சந்திப்பில் மார்க்ஸ், பெண் உழைப்பு பற்றி கூறவில்லை மாறாக ஆண் உழைப்பு பற்றி மட்டும் குறிப்பிட்டதாக பொய்யைக்கூறி சபையின் கைதட்டுக்களைப் பெற்றுக் கொண்டார். இன்று இக்கட்டுரையில் மாவோ மாபெரும் புரட்சியாளருக கூறியபடி மாவோவைத் துணைக்கு அழைத்துள்ளார். இவர் அஆஇ இதல் 12ல் இலக்கியச் சந்திப்பு தொடர்பாக எழுதிய மொட்டைக்கடிதத்தில் (இது அஆஇ இல் பிரசுரிக்கப்பட்டது) "பத்திரிகையில் தத்துவாயுதம் செய்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்து சமூகத்தை ரட்சித்து விடப் போவதாக சில சூனியங்கள் பிதற்றுவதிலிருந்து" எனக் குறிப்பிட்டுள்ளார். இதில் தத்துவம் எழுதுவதை நையாண்டி செய்து தாம் எழுதுவது தமது பிழைப்புக்காக என்பதையும், தனது எதிர்புரட்சி சேவையையும் ஏற்றுக் கொண்டுள்ளார். எம்மணை உண்மையில் நேசிப்பவர்கள் சூனியங்களாகக் காட்டி தமது மேதா

www.tamilarangam.net

வித்தனத்தை தேசவிடுதலைப் போராட்டத்திற்கு எதிராக பயன்படுத்திப் புலிகளைப் பாதுகாக்கின்றார். அன்று புலிகளிலிருந்த போது தேடிய தற்கொலைக்கான ஆதாரத்தை இன்று முன்வைத்துள்ளார். புலிகளின் தற்கொலைக் கோஷத்தனமென ...ம்க்கள் ...முன் சொல்லின் புலியின் வீழ்ச்சியைக் கண்டு அஞ்சி முண்டியடித்து புலிகளுக்காகக் குரல் கொடுத்துள்ளார். அவர் மீது நாம் வைத்த முந்தைய விமர்சனங்கள் எதற்கும் பதிலளிக்க முடியாதவர் புலிகள் பாதிக்கப்படும் போது சிவரமணியைச் சொல்லி புலிக்கு வக்காளத்து வாங்குகின்றனர்.

பேராசிரியர் சிவசேகரம், நாம் சுவடுகள் இதழ் 43இல் எழுதிய தற்கொலை ஒட்டிய கருத்துக்களுக்கு பதிலளிக்காமல் தாக்குதலை நடத்தியுள்ளார். எம்மை செம்மஞ்சல் பத்திரிகை எனக் குறிப்பிட்டு தனது கருத்தை வாதிடும் பலத்தை இழந்துள்ளார். இவர் அஆஇ இதழில் கருக்கலைப்பு தொடர்பாக எழுதும் போது எம்மை இடதுசாரிக்குழு எனக் குறிப்பிட்டு தான் இடதுசாரிகளுக்கு எதிரானவர் என்பதை அக்கட்டுரையினூடாக தெளிவுபடுத்தி உள்ளார். ஆனால் தாக்க முற்பட்டவர் சுவடுகளில் இடதுசாரிக் குழுவை செம்மஞ்சளாகத் தாக்கி தனது அந்தரமான நிலையை காட்டிக் கொண்டார். இவர் பல பத்திரிகையில் மார்க்சியத்தை உயர்த்துபவர்களைத் தாக்கி வருகின்றார். அதில் அதிதீவிர புரட்சியாளர்களென சொல்லுகிறார். அப்படியாயின் அது என்ன? புரட்சியாளர்களுக்கும், அதிதீவிரபுரட்சியாளர்களுக்கும் என்ன வேறுபாடு?. இப்படி சட்டம்பித்தனம், மேதாவித்தனம், அதிமேதாவித்தனம், புரட்சி ஏற்றுமதியாளர், அதிதீவிர மார்க்ஸிட் எனப்பல. இவரின் எதிர்புரட்சிப் பிழைப்புவாத நோக்கிலான இச்சொற்கள் விளக்கமற்ற சொற்றொடர்களே.

இனி நாம் கட்டுரையை ஆராய்வோம். பேராசிரியர் எழுதிய கருத்தில் ஜேர்மனிய இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்ட ஒருவர் மீதும், வேறொருவர் மீதும், சமர் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளார். மார்க்சியத்தை கதைத்தோர் அறிவிலிகள் என்க்கூறி தனது பெரும் பூர்ஷ்வா தன்மையை பாராட்டிக் கொண்டார். இவர் பலரின் கட்டுரையை ஆதாரத்திற்காக முன்வைத்தவர். அவைகளை எந்தப் புத்தகத்தில் எடுத்தார் என்பதை முன்வைக்கத் தவறியுள்ளார். இவைகள் உண்மையாக இருக்கலாம். ஆனால் நித்தியானந்தனின் எழுத்தில் நம்ப முடியாத தன்மையுள்ளது. காரணம் முன்பு ஒரு கூட்டத்தில் மார்க்ஸ் பெண் உழைப்பைப் பற்றி கூறவில்லை எனப் பொய்யைக் கூறி கைதட்டு வாங்கியவரே. ஒரு கட்டுரையில் வேறுயாருடைய கருத்தை முன்வைக்கும் போதும் ஆதாரத்தை முன்வைக்க வேண்டும். ஏனெனில் முன்னுக்கும், பின்னுக்கும், இடையிலும் கருத்தைச் சிதைத்து சொல்லாத ஒன்றை கற்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னயில் சொல்லி கைதட்டு வாங்குபவர்கள் இப்பேராசிரியர்மார்களே.

கத்தோலிக்கத் திருச்சபை தற்கொலையைக் கண்டிப்பதாகக் கூறியவர் தொடர்ந்து பைபிளின் தற்கொலை செய்ததற்கான ஆதாரத்தை முன்வைத்துள்ளனர். ஒன்றுக்கொன்று முரணான இந்நடவடிக்கை கற்பனாவாத உலகைக் கோருவதே. தற்கொலை பற்றிப் பலர் கருத்தை தொகுத்தவர் மொத்தத்தில் தற்கொலையை நியாயப்படுத்த முனைந்துள்ளார். தாம் தற்கொலையை ஊக்கிவிப்பவர்கள் அல்ல எனக்கூறிய படி கண்டிக்க மாட்டோம் எனக்கூறிய படி இரட்டைத் தன்மையுடன் தற்கொலையை ஊக்குவிக்கின்றனர். இது ஏன்?

இன்று தற்கொலையை நாடி நிற்பவர்கள் இச்சமூக அமைப்பின் மீதும், அதன் தாக்கத்திற்கு உள்ளானவர்களுமே. இவர்கள் இச்சமூக அமைப்பிற்கெதிராகப் போராடி இச்சமூக அமைப்பை மாற்றப் போராடும் நடவடிக்கை என்பது இப்பேராசிரியர்மார்களின் பெரும் பூர்ஷ்வா கனவுகளுக்கு எதிரானதே. ஒரு புரட்சியைக் கண்டு நடுங்கிச் சாகும் இவர்கள் அப்புரட்சியாளர்கள் இறந்து போகக் கோருகின்றனர். இது ஒரு எதிர்ப்புரட்சி நடவடிக்கை. புரட்சியாளர்கள் தற்கொலை செய்து சமூகத்தை மாற்ற முடியுமென ஊக்குவிப்பவர்கள் அல்ல. ஆனால் கண்டிக்க மாட்டோமெனக்கூறி மறைமுகமாக ஊக்குவித்தபடி இச்சமூக அமைப்பையும், ஏகாதிபத்தியத்தையும் காப்பாற்றுகின்றனர்.

இவ்வாதத்திற்கு மாவோவின் எழுத்துக்களை ஆதாரமாக முன்வைத்துள்ளார். மாவோவின் கருத்தை எங்கே எடுத்தார் என்ற ஆதாரத்தை முன்வைக்கவில்லை. ஆகவே நித்தியானந்தன் குறிப்பிட்ட கருத்து மட்டுமா மாவோவின் கருத்தென தெரியாதுள்ளது. இப்பெண் 1919 இல் தற்கொலை செய்திருந்த படியால் மாவோவின் அப்போதைய வயது 25 மட்டுமே. 1919 மே மாதமே மாவோ முதன்முதலில் அரசியலில் பிரவேசித்த காலம் கூட. மாவோவின் இளமைக் கால எழுத்து மார்க்சியத்தை சமூகவிஞ்ஞானமாக முழுமையாக ஏற்று வெளிவந்திருக்க முடியுமா? என்ற வாதத்தை இக்கட்டுரை ஏற்படுத்திவிடுகின்றது. ஏனெனில் பின்னைய எழுத்துக்கள் முன்னைய எழுத்துக்களுக்கு முரணானது. நாம் மாவோவின் ஆரம்ப எழுத்துக்களைப் பார்க்கவில்லை. ஆனால் நாம் எங்கெல்ஸின் எழுத்துக்களைப் பார்த்த போது அவரின் ஆரம்ப எழுத்துக்கள் பின்னைய எழுத்துக்களுக்கு முரணானதாகப் பலவுள்ளன. இன்று மார்க்சியத்திற்கு எதிராக எங்கல்ஸின் பழைய எழுத்துக்களை முன்வைப்பவர்கள்பரிணாம விதியை நிராகரிப்பவர்களே.

1921இல் சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவான போதும் 1919இல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாவோ கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாடுகளில் நின்று இக்கருத்தை வைத்திருக்க முடியாதெனப் பார்க்கலாம். மாவோ 1919களில் வைத்த இக்கருத்தை ஒட்டி தோழர்களிடம் விமர்சனத்தை கோருகின்றார். இதன் பின் இக்கருத்தை மாற்ற வாய்ப்பு இருந்திருக்கும். இது ஒட்டுமொத்த முடிவாக அன்று மாவோ கருதவில்லை என்பதை விமர்சனம் வைக்கக் கோரும் போதே புரிந்து கொள்ளக் கூடியதே. மாவோவின் இளமைக் கால தவறான கருத்துக்களை, மற்றும் தவறான நடவடிக்கைகளைக் கைகொள்ளக் கோருவது பிழைப்புவாதமே. ஏனெனில் ஐரோப்பியக் கூட்டம் ஒன்றில் மாவோவின் பெண் தொடர்புகளைக் கூறி ஐரோப்பிய பிரமுகர்கள் ஒருவர் தன்னை நியாயப்படுத்த முனைந்து கைதட்டுக்களையும் வாங்கிக் கொண்டார். கடந்தகால தத்துவவாதிகள் தமது வாழ்வில் இழைத்த எந்த தவறுகளையும் நாம் ஏற்பவர்களல்ல. இப்பிழைப்புவாத பிரமுகர்கள் தத்துவவாதிகளின் சரியான கருத்தை நிராகரித்தபடி அவர்களின் தவறுகளை மட்டும் எடுத்து தமது பிழைப்புக்கு நியாயம்கொடுக்கின்றனர்.

மாவோவின் தற்கொலையை ஒட்டிய கருத்து நித்தியானந்தன் குறிப்பிட்டது போல் அவை தான் எனின் நாம் தற்கொலை மீதான மாவோவின் கருத்தை நிராகரிக்கிறோம். இனி மாவோவின் இக் கருத்தை ஆராய்வோம். மாவோ குறிப்பிட்ட அப்பெண்ணின் காதலில் ஏற்பட்டிருந்த இரும்புத்திரை அப்பெண்ணுக்கு மட்டுமா சீனாவில் இருந்தது?. இல்லை மாறாக சீன முழுக்க இதுவே நிலைமையாகஇருந்த போது ஏன் சீனாவில் முழுப் பெண்களும் தற்கொலையைக் கூட்டம் கூட்டமாகச் செய்யவில்லை. அங்கு பெண்கள் எதிர்த்துப் போராடுகின்றனர். மாவோ இதே கட்டுரையில் தான் தற்கொலையை ஏற்பவனல்ல மாறாக போராட வேண்டும் என்கிறார் இப்பெண்ணின் நிலையில் மாவோ இருந்திருப்பின் அங்கு மாவோ போராடியிருப்பாரே ஒழிய தற்கொலை செய்திருக்க மாட்டார் வேறொரு உதாரணத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். சமர் குழுவிலுள்ள ஒருவர் முன்பு புலிகளின் வதைமுகாமில் சிக்கிய போது கண்கட்டப்பட்ட நிலையிலிருந்த அவரிடம் மாத்தையாவால் கேட்கப்பட்ட முதல் கேள்வி தற்கொலை செய்வதைப் பற்றி என்ன நினைக்கிறாய்? என்பதே. இதனூடாக புலிகளே அவரின் மனவுறுதியைப் பரிசோதிக்கும் ஒரு முக்கிய கேள்வியை கேட்டிருந்தனர்.

சிறைக்கூடங்களில் இரும்பு வலைக்குள் சிக்குண்டு போயுள்ள எத்தனையோ புரட்சியாளர்கள் தற்கொலை செய்கின்றார்களா?. இல்லை மாறாக அங்கு போராடுகின்றனர். எத்தனையோ பேர் அச்சிறையிலிருந்து விடுபட்டுப் போராடவில்லையா?. ஏன் ஹிட்லரின் வதைமுகாம்களில் லட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட போது (சீனாவில் அப்பெண்ணுக்கு இருந்த நிலையை விட மோசமா

www.tamilarangam.net

மான) ஜீவதர்கள் அங்கும் போராடி இன்று உயிர் வாழவில்லையா இரும்புத்திரை என வர்ணிக்கும் இசசமூக ஒழுங்குமுறை எப்போது தகர்க்கப்படுகின்றதோ அதனூடாகவே ஒவ்வொரு மனிதனும் இரும்புத் திரையிலிருந்து வெளிவருகின்றான். சீனவில் அப்பெண்ணின் நிலையில் இருந்த பெண்கள் சீனப்புரட்சியுடன் விடுதலைப் பெற்றனர். ஏன் அப்பெண்ணும் இருப்பின் புரட்சியுடன் விடுவிக்கப்பட்டிருப்பாள். உலகில் மனிதன் தவிர்ந்த உயிரினம் தற்கொலையை தமது வாழ்வுக்காகக் கைக்கொள்வதில்லை. அவை இச்சமூக ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடி சில மடிந்து போகின்றன சில உயிர்வாழ்கின்றன. இதுவே உயிரியல் இயங்கியல் இயக்கம். உயிரினங்கள் மீது ஒன்றுமாறி ஒன்றாக எத்தனை இரும்பு வலைகள். இன்று எய்ட்ஸ் நோய்க்குள்ளாகி இருக்கும் ஒருவன் மாற்றமுடியாதெனக் கருதி தற்கொலையை நாடின் (இதை வீரம், தியாகம்) நாளை மருந்து கண்டு பிடிக்கப்பட்டபின் அவனின் மரணம் அர்த்தமற்றது. மாறாக வாழ்வுக்காகக் கோழைத்தனத்தைக் கைவிட்டு உயிர்வாழ வேண்டும். ஒருவனின் தற்கொலைக்கான காரணமாகவுள்ளவை (இங்கு நியாயமானவை மட்டும்) வெறுக்கப்படக் கூடியவையே. ஒரு மனிதன் தற்கொலையை செய்ய முன்பு சமூகத்திற்கு பங்களிப்பு செய்திருப்பின் அவனின் அப்பங்களிப்பு வீரத்திற்கும், தியாகத்திற்குமுரியது. அவனின் மரணம் கோழைத்தனத்திற்கும், துரோகத்திற்குமுரியது. ஒரு மனிதன் சமூகத்திற்கு சரியாகச் சில காலமும், பின் துரோக நடவடிக்கையில் சில காலமும் ஈடுபடும் போது அவனின் சரியான காலத்தை சரியாகவும், துரோகமான காலத்தைத் துரோகமாகவும் ஆராய வேண்டும். துரோகத்தை சரியாகவோ, சரியை துரோகமாகவோ பார்க்கக் கூடாது. இது போல் தான் தற்கொலையையும், அவனின் கடந்தகால சமூகப்பணியையும் ஆராய வேண்டும்.

ஒரு புரட்சிக்கு தலைமை தாங்கும் ஒருவன் சிறை வாழ்வையும், தலைமறைவு வாழ்வை கைக் கொள்கின்றான் எனில், அங்கு உள்ள நெருக்கடியான இரும்புத்திரை தற்கொலையை நியாயப்படுத்த நியாயமான காரணமாக கொள்ளலாமெனில் எல்லாப் புரட்சித் தலைவர்களும் இறந்து போகவேண்டுமா?. இப்படித் தற்கொலையை செய்யின் அப்புரட்சிகர இயக்கத்தை நடுவீதியில்விட்டு துரோகத்தைக் கைக் கொள்கின்றான். தனது கோழைத்தனத்துடன் கூடிய இத்தற்கொலை புரட்சிகரப் போராட்டத்தில் எத்தனை பெரிய இழப்பை செய்கிறது. தலைமையை விடக் கீழ்மட்டத்திலுள்ள ஊழியர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள் அவர்களை தற்கொலை செய்யக் கோரமுடியுமா?. தலைமை தாங்கியவர்கள் நெருக்கடிகளைச் சொல்லி கூட்டமாகத் தற்கொலை செய்ய முடியுமா?. இதை வீரம், தியாகம் எனச் சொல்லின் வீரம், தியாகம் என்பனவைகளுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுகின்றன. இப்படியான இரும்புத்திரையிலுள்ள ஒருவன் தற்கொலை செய்யின்

www.tamilarangam.net

அவ்வனை வீரன், தியாகி எனப் பாராட்டின் அதே இரும்புத்திரையிலுள்ள ஒருவன் தற்கொலை செய்யாமல் போராடின், கோழை, துரோகி எனச் சொல்ல முடியும் தானே. சிவரமணி போன்றோரின் தற்கொலைகளை தியாகம், வீரம் எனின் அதே சிவரமணிக்கு உள்ள நிலையிலுள்ளவர்கள் தற்கொலை செய்யாமையை துரோகமே, கோழைத்தனமெனச் சொல்ல முடியும். மறுதலையாக எம்மண்ணில் தற்கொலைக்குப் பதில் எதிர்த்துப் போராடுபவர்கள் வீரர்களாகவும், தியாகிகளாகவும் உள்ளனர். இன்று புலிகளின் வதைமுகாமிலுள்ள 5000 கைதிகள் சிவரமணியின் நிலையைவிட மோசமான நிலையிலுள்ளவர்கள். அவர்கள் தற்கொலையைச்செய்யாது தமது வீரம் நிறைந்த தியாகத்தைப் புரிகின்றனர். புலிகளின் சிறையிலுள்ளவர்களை விட குறைந்த நெருக்கடிகளையே கொண்டிருந்த சிவரமணி தனது தற்கொலையை கோழைத்தனத்துடன் கைக்கொண்டதே. இதற்கு எதிர்மாறாக நெருக்கடிகளைச் சந்திப்பவர்கள் வீரர்களாக வாழ்கின்றனர்.

இக்கட்டுரையில் வேறொரு இடத்தில் "எதிர் நீச்சல் போட்ட மகத்தான அனுபவத்திலிருந்த சிவரமணிக்கு TRAVEL AGENCY விலாசத்தைக் கொடுத்திருக்கலாம்" எனப் பேராசிரியர் நையாண்டி செய்துள்ளார். இங்கு சிவரமணி போன்றோர் தற்கொலை செய்வதற்கு ஊக்கப்படுத்தி, மேலும் சிவரமணி போன்று மண்ணிலுள்ளவர்களுக்கு தற்கொலையே தீர்வு எனக்கூறி தற்கொலை செய்யக் கோருகின்றார். நாட்டை விட்டு ஒருவன் தப்பித்து வருவது அவனின் கடந்தகால அரசியல் பணியை ஒட்டியேயொழிய பிழைப்புக்காகவல்ல.

மாவோ அப்பெண் தற்கொலை செய்வதற்குக் காரணமாக இருந்த மூன்று காரணங்களை முன்வைத்துள்ளார். இது 1921 இல் உருவான கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படை முரண்பாட்டுக்குட்பட்டதே. இம்முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ள கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. அப்பெண்ணின் இம்முரண்பாடு ஒரு புரட்சியினூடாக தீர்க்கப்பட்டிருக்க முடியுமேயொழிய அதைக்கண்டு அஞ்சி அதிலிருந்துவிடுபட தன்னைத்தான் அழித்துக் கொள்வதல்ல. மாறாக வீரத்துடன் எதிர்த்துப் போராட வேண்டும். இன்று இந்தியாவில் பெண் ஒடுக்குமுறையின் தீவிரத் தன்மையிலுள்ள அங்குள்ள பெண்கள் தற்கொலை செய்வது தீர்வுமாகுமா? ஏன் இதன் விளைவாக கருவிலுள்ளப் பெண்சிசுவை அழிப்பதும், பிறந்த பின் பெண்குழந்தைகளைக் கொல்வதும் தற்கொலைக்கு ஒத்ததேயாகும். "நீ பின் தற்கொலை செய்வதைவிட இப்போதே சா' எனச் சமுக அங்கீகாரத்தோடு தெரிவிக்கிறார்கள். இவைகளை வீரம், தியாகம் எனின் போராடுபவர்களை என்னவென்று சொல்வது?. கோழைகள் என்பதா?.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சியின் போது சிறையிலுள்ள ஒருவன் மரணத்தை நேருக்குநேர் எதிர்க் கொள்ளும் போது அவன் தனது உயிர் வாழ்வுக்காகக்காட்டிக் கொடுக்க முடியும் தானே. இதை வாழ்வுக்கான வீரம், தியாகம் எனச் சொல்ல முடிமா?. நித்தியானந்தனின் வாதத்தின் படி இவை வீரம், தியாகமே. சாவா, வாழ்வா என்ற நிலையில் வாழ்வுக்காகக் காட்டிக் கொடுக்கும் தன்மை வீரமுமல்ல தியாகமுமல்ல மாறாக துரோகத்தனமானதே. இங்கு சாவை எதிர்த்துபோராடும் வாழ்வே வீரத்திற்கும் தியாகத்திற்கும் உரியது சிவரமணி மண்ணில் (அவர் தப்பித்து வெளிவர முடியாத நிலையிருந்திருப்பின் மட்டும்) நெருக்கடிக்கு முகம் கொடுத்துபோராடியிருக்க வேண்டும். புலிகள் கைது செய்திருப்பின் ஏன் 5001 ஆவது கைதியாக மாறியிருக்க முடியாது. மாறாக தற்கொலை செய்வதனூடாக புலிகள் அழியப் போவதில்லை. மாறாக புலிகளின் அடக்குமுறையை நேரடியாக ஈடுபட்டு அம்பலப்பட்டுப் போகாத வரையில் தன்னைத்தான் கொன்று புலிகளுக்கு ஏற்பட்டிருந்த இக்கட்டிலிருந்து புலிகளைக் காப்பாற்றி விடுகிறார். இத்தன்மையில் இருந்து நித்தியானந்தன் தற்கொலையை புலிகளிடம்(இங்கு புலிகள் அம்பலமாவதைத் தடுக்க) பிடிபடாமல் இருக்க ஊக்குவிக்கின்றார். தொழிற்சங்கங்களுக்கு தலைமை தாங்கும் பலர் இன்று துரோகத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்கள் கூட இந்த இரும்புத்திரையைக் காரணமாகக் கூறி தமது நிலையை நியாயப்படுத்த முடியும். தற்கொலை, காட்டிக் கொடுப்பு, புரட்சி ஊழியர்களை அந்தரத்தில் விட்டுச் செல்லல் எல்லாமே துரோகத்தனமான கோழைத்தனமாகும்.

இங்கு பேராசிரியர் இன்னுமொரு இடத்தில் தற்கொலை=கோழைத்தனம் என்ற வாதம் குருட்டுத்தனமானது என வாதிட்டுள்ளார். அப்படிப் பார்த்தால் தற்கொலை=வீரம் இதுவே பேராசிரியரின் வாதம். இங்கு தற்கொலை ஊக்குவிக்கப்படுகிறது. இன்னுமொரு இடத்தில் தற்கொலைப்படை போல் முன்செல்வது, தற்கொலைத் தாக்குதலைக் குறிப்பிட்டு இதைத் தற்கொலை என வர்ணித்திருந்தார். நித்தியானந்தனுக்கு தற்கொலையை சரியாக வகுத்துக் கொள்ள முடியாதுள்ளார். எந்த உயிரினத்தை எடுப்பினும் அவை தமது குழந்தைகளை காப்பாற்றுவதற்காக அவை(பெற்றோர்) தற்கொலைப்படை போல் (பேராசிரியரின் பார்வைபடி ) மோதி சிலவேளைகளில் மரணித்துப் போகின்றன. தமது வாழ்வுக்காக போராடும் போது மரணிப்பதை தற்கொலை என வாதிடமுடியாது. அதுவே உயிரின இயங்கியல் விதி. இதனூடாகவே உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் வாழ்கின்றன.

பேராசிரியர் மேலும் தென் கொரிய தொழிலாளி தாய் சுன், மாவோவின் மனைவி சியாங்சிங், எல் சல்வடோர் கொரில்லாத் தலைவர் கார்ப்பியோர, மட்டக்களப்பு கவிஞர் சுபத்திரன்,

www.tamilarangam.net

. . . . . என இவர்களின் தற்கொலைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார் மற்றும் லெனின் மரணிக்க நஞ்சு கோரினார் எனின் அதே நோயால் பீடிக்கப்பட்ட அனைவரும் நஞ்சு கோர முடியும். தற்கொலை செய்ய முடியும் என நியாயம் கற்பிக்கப்பட்டுள்ளது. ஏன் லெனின் வேறுவழிகளில் தற்கொலை செய்ய முடியாது போயிருக்கவில்லை. மாறாக நோயின் கடுமை இயல்பாகவே கோர வைக்கிறது. கோரியவர் பின் உயிர் வாழ்வுக்காகப் போராடுகின்றார். இதை இப்படிப் பார்க்கலாம். கடவுள் இல்லை எனச் சொல்பவன் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் 'கடவுளே' எனச் சொன்னால் கடவுள் இருக்கிறான் என்று ஏற்றுக் கொண்டவன் ஆகிவிடுமா?. மாறாக சிறுவயதிலிருந்து இச்சமூக அமைப்பு ஊட்டி வளர்த்த கருத்துக்கள் தமமையறியாமல் வெளிப்படுவதே. சுயசிந்தனையை ஒரு விதத்தில் இழந்த நிலையில் இப்படிக் கோருவதேயாகும். லெனின் போன்றோர் சாதாரண மனிதர்களே. அவர்களே விமர்சனம், சுயவிமர்சனங்களைக் கடைபிடித்தவர்கள். மற்றவர்களுக்கு அதைப்பற்றி கூறி ஏற்க வைத்தவர்கள். தவறான எக்கருத்தையும் வெளியிடாதவர்கள் எனக் கூறுபவர்கள் இயங்கியலையும் பரிணாமவிதியையும் நிராகரிப்பவர்களே. நித்தியானந்தனால் பட்டியல் இடப்பட்டவர்கள் இச்சமூக நெருக்கடிகளைக் கண்டு அவர்களின் வாழ்வு தளத்திலல நின்று போராட அஞ்சி தம்மைத்தாம் அழித்து தமது கோழைத்தனத்தை வெளிப்படுத்தியவர்கள். இவர்களின் தற்கொலைக்கு முந்திய வாழ்வு வீரத்திற்கும், தியாகத்திற்கும் உரியன. இவர்களின் தற்கொலை சமூகத்திற்குச் செய்த கோழைத்தனத்துடன் கூடிய துரோகமே.

சாதி போராட்டத்தில் சுபத்திரன் போல், மாவோவின் மனைவி போல் (நால்வர் குழு), எல்சவடோர் கொரில்லாத் தலைவர் போல்..... பலரும், தற்கொலைக்குப் பதில் இச்சமூகத்துடன் போராடி உயிர் வாழும் வீரர்களாகவும், தியாகிகளாகவும் உள்ளனர். இன்று சோமாலிய மக்கள் எலும்புக்கூடுகளாக வாழ வேண்டுமா? என நித்தியானந்தனிடம் கேட்பின் இல்லை தற்கொலை செய்வது சிறப்பு என வாதிடுவார். அம்மக்களின் விடிவு அந்த இரும்புப் பிடிக்குள்ளானதே. இவர்கள் வாழ்வுக்காக எலும்புக்கூடுகளாகப் போராடுகின்றனர்.

புலிகள் தற்கொலையை முன்னெடுத்த போது எதிரியின் கைகளில் பிடிபடக்கூடாது எனக்கூறியபடி ( இதை மீண்டும் இக்கட்டுரையில் நித்தியானந்தன் கூறியுள்ளார். எதிரியை மிகைப்படுத்தி பிரமிப்பில் ஆழ்த்திப் போராடும் புரட்சியாளர்களை கோழைகள் எனக்கூறி தற்கொலையை வீரம் எனச்சொல்லி தீர்வாக முன்வைக்கின்றனர். வரலாற்றில் எத்தனை சிறைக்கைதிகள் எதிரியின் பிடியில் சிக்கிய பின்னும் இன்று உயிர்வாழவில்லையா?. போராட்டத்திற்கு தலைமை தாங்கவில்லையா?. எதிரியுடன் மோதி இ

www.tamilarangam.net

றக்கவில்லையா?. இவர்களையெல்லாம் கொச்சைப்படுத்தி தற்கொலையின் முடிவுக்கான காரணத்தின் விளைவை வீரம் எனப் பாராட்டி ஊக்குவிக்கின்றனர். தற்கொலையின் முடிவுக்கான காரணத்தின் விளைவை போராடியே வெல்லமுடியும்.

புலிகளில் இணையும் ஒருவனை எடுப்பின் அவன் சமூகத்திற்கு எனப் போராட வரும் தன்மை (இங்கு பிழைப்புக்காக வரும் பிரமுகர்களையல்ல) தியாகத்திற்கும், வீரத்திற்கும் உரியது. ஆனல் போராட வந்த பின் புலியில் ஒருவனின் நடவடிக்கை துரோகத்திற்குரியதாக மாறி விடுகிறது. இதுபோல் தான் சிவரமணியின் கவிதைகள் (இங்கு கவிதைகள் ஆராயப்பட வேண்டும்) வீரத்திற்கும், தியாகத்திற்குமுரியதாக இருக்கலாம். ஆனல் சிவரமணியின் மரணம் துரோகத்திற்கும், கோழைத்தனத்திற்குமுரியது. பேராசிரியர் சிவரமணி போன்ருேர் ஈழத்தில் தற்கொலை செய்யவேண்டுமென்கின்ற அதேநேரம் இங்கு ஈழத்தை நோக்கி குரல் கொடுப்பவர்களைப் பார்த்து "ஏற்றுமதி செய்து ரட்சித்து விடப் போவதாகச் சில ஞனியங்கள் பிதற்றுவதாகக்" கூறி புலிகளின் இருப்பைப் பாதுகாத்துள்ளார். புலிகளின் தற்கொலை கோழைத்தனமானது என நாம் சொல்ல, 'இல்லை வீரம்' எனச் சொல்லி வக்காலத்து வாங்கியும், மற்றும் புரட்சியாளர்கள் புலிகளின் அடக்குமுறைக்குள்ளாகும் போது மக்கள் மத்தியில் ஏற்படப் போகும் பாதிப்பிலிருந்து புலிகளை பாதுகாக்க தற்கொலையை ஊக்குவித்தபடி புலி எதிர்ப்பாளர்களாக தம்மைக் காட்டி பிற்போக்கு அரசியலைப் பாதுகாக்க முயல்கின்ருர்கள் இப்பிழைப்புவாதப் பிரமுகர்கள்.

24ம் பக்க தொடர்ச்சி....

பாரம்பரியத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற, பாட்டாளிவர்க்க சக்திகளது பலவீனமானதன்மை, நாம் அகநிலையாக எவ்வளவு விருப்பம் கொண்டாலும் தமிழ்ப்பிரதேசங்களில் தனியே பாட்டாளி வர்க்ககட்சி புரட்சியைத் தலைமை தாங்கும் சக்தியாக உருப்பெறுமா? என்னும் இக் கேள்வியை நாம், மார்க்ஸ் குறிப்பிடப்பட்ட கூரிய வர்க்க முரண்பாட்டைக் கொண்ட பாட்டாளிவர்க்கம் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை என்னும் ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டே குறிப்பிட்டுள்ளாதக நாம் கருதுகின்ருேம். இக் கேள்வியில், கூரிய வர்க்க முரண்பாடு தமிழ் மக்கள் மத்தியில் இல்லை என்பது உண்மையே. வர்க்கப்புரட்சி புறவயமாக சாத்தியமில்லை என நாம் கருதிவிடமுடியாது. இவ் அவசியத்தை முடுக்கிவிடும் கட்சியும், உறுதியான தலைமையுமே குறையானது. இந்த நாத் மிகவும் எழிமையாக ஆராய்வோமானல் தற்போதைய தமிழ்ப் பிரதேச அரசியல் நல்ல சான்று பகரும். தமிழ்ப் போராட்டத்தின் ஆரம்பம் தமிழ்த் தரகு முதலாளிகளின் தேவையை முதன்மைப்

www.tamilarangam.net

படுத்தியதாகவே இருந்தது. காலப் போக்கில் வளர்ச்சியடைந்த ஆயுதப் போராட்டம் இதைச் சற்று மலினப்படுத்தியது. ஆயினும் வர்க்க நலன் பேறுவதாகக் காட்டிக் கொண்ட சில இயக்கங்கள் கூட உழைக்கும் மக்களைக் கட்டவோ, அரசியல் மயப்படுத்தவோ முன்வராமல் மாக்சிய "லேபல்" இயக்கங்களாக சிறுத்து அதிகாரத்தில் மாத்திரம் குறியாயிருந்தன. (NLFT, PLFT தீப்பொறி போன்ற அமைப்புக்களில் நல்ல சக்திகள் இருந்ததை நாம் உணர்கின்றோம். இவ்வமைப்புக்கள் எவ்வித அதிகாரத்தையும் கைப்பற்றாததால் இவர்களை எதுவித கணிப்பிலிருந்தும் தவிர்க்கின்றோம்.) ஆனால் தற்போது தரகு முதலாளித்துவ பாசிச LTTE யிடம் போராட்டத் தலைமை ஏகபோகமாகியுள்ளது. நிகழ்கால போராட்டத் தலைமையைத் தவிர்ந்த போராளிகளை நீங்கள் கணிப்பீர்களானால், கணிசமான உழைக்கும் இளைஞர்கள் போராடுகின்றனர்.

யாழ்குடாநாட்டில் உள்ள நடுத்தரவர்க்கமும் அதிலிருந்து மேல் வகுப்பினரும் மேற்கத்தைய நாடுகளை நாடி ஓடுகின்றனர். இங்கே சாதி அடிப்படையில் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளோரும், வறிய கூலிவிவசாயிகளும் உதிரித் தொழிலாளிகளுமே உள்ளனர். இவை தவிர மன்னார் தவிர்ந்த வடமாகாணம் தவிரவுள்ள பகுதிகளிலுள்ள வறிய கூலி விவசாயிகளின் பிள்ளைகள் (இளைஞர்கள், யுவதிகள்) மீன்பிடி அன்றாடக் கூலிகள், கற்குவாரித் தொழிலாளர் போன்றோரே அதிகமுள்ளனர். (குறிப்பாக கிழக்குமாகாணம்) வெளிநாட்டுப் பொருளாதாரத்தை நம்பியுள்ள, வாழ்நிலையில் சற்று உயர்ந்தோரின் இளஞ்சந்ததியினர் யாழ்குடாவைவிட்டு "யால்" பெற்றுக் கொண்டு வெளியேறும் இவ்வேளையில், நாதியற்ற, வாழ்வா?, சாவா? என நித்தம் எதிர்பார்க்கும் தங்கள் அன்றாட உழைப்பைப் பறிகொடுத்த, கிழக்கு பிரதேச இளைஞர்கள், யுவதிகள் குடாநாட்டுள் நுளைந்து ஆயுதபாணியாகின்றனர்.

விரும்பியோ, விரும்பாமலோ போருக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இவ்வர்க்கத்தின் போர்க் குணம்சத்தை LTTE நன்கு சாதகப்படுத்தியுள்ளதை நாம் கவனத்தில் கொள்தல் அவசியம். இங்கே உழைக்கும் வர்க்கம் போர்முனையில் நின்று பாசிச அதிகாரவர்க்கத்தின் பாதுகாப்பு யுத்தத்தை நடத்தி அரசோடு பேரத்தை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இங்கே பாட்டாளி வர்க்கம் தனது விடிவுக்குப் போராட வேண்டியதை நெறிப்படுத்த ஒரு கட்சி இல்லை என்பதே குறை. இயல்பாகவே இவ்வர்க்கம் போர் முனையில் பல முள்ளது என்பது நிதர்சனம். இந்தியாவில் மார்க்ஸ் குறிப்பிடப்பட்ட பாட்டாளி வர்க்கும்கூர்மையான முரண்பாடும் உண்டு. ஆனால் புரட்சி நடக்கவில்லை. இவ்வர்க்கம் இருந்தால் மாத்திரம் போதாது. தட்டி எழுப்ப நல்ல கட்சியும் தேவை என்பதே இங்கு அவசியம். (மேற்குறிப்பிட்ட பகுதியை வாசிக்கும் வாசகர்கள் சூாண்டில் 40 இல் "ஐக்கிய இலங்கை சாத்தியமா?" என்ற கட்டுரையையும் சேர்த்து வாசிக்கவும்.)

ஆசிரியர் குழு

www.tamilarangam.net


## தொடரும் புலிகளின் அராஜகம்

மாசி மாதம் 14ம் திகதி "செந்தாமரை" பத்திரிகையின் ஆசிரியரும் முன்னைநாள் "ஐலண்ட்" பத்திரிகையாசிரியருமாகிய ஜெயராஜ் கடையில் வைத்து புலிகளால் தாக்கப்பட்டு, கால் முறிக்கப்பட்டுள்ளார்.

எம்மண்ணில் புலிகளின் அடக்கு முறைக்கும் இனவாத அரசின் கெடுபிடிக்கும் ஈடுகொடுக்க முடியாமல் இங்கு வந்த விடுதலை நேசமுள்ளோர் மீது புலிகள் பல சந்தர்ப்பங்களில் தாக்குதல் நடத்தியது ஒன்றும் புதிதல்ல.

"செந்தாமரை"பத்திரிகை புலிகளின் அரசியலுக்கு எதிர்க் கரு தைக் கொண்ட பத்திரிகையல்ல. இருப்பினும் இத்தாக்குதல் முரண்பாட்டின் கரு யா தெளிவில் "கிட்டு"புகழுக்கு எதிராக "கிட்டுவின் மறுபக்கம்"பற்றி இவர் எழுத முனைந்ததேயாகும். அராஜகத்துக்கு எதிரான போக்கில் உடன்பாடும், முரண்பாடும் மாறி மாறி வரமுடியாது என்பதை "செந்தாமரை"போன்ற பத்திரிகைகள் உணர வேண்டும்.

கருத்தைக் கருத்தால் சந்திப்பதில் நம்பி ருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் புலிக யாக கண்டிப்பதோடு எமது உரி மையைப் பாதுகாக்கப் போராட வேண்டிய அவசியத்தை மீண் டும் சுட்டிக் காட்டுகின்றோம்.




வெளியீடு - தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம்
(பதிவு செய்யப்பட்டது - 3/16956)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்